# பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. } விரோதிகிருதுஹு வைகாசிமீ —MAY 1911. { ஸஞ்சிகை 5. No. 5.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி .. | 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி .. | 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு | அங்குலம் ஒன்றுக்கு | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.
## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. — விரோதிகிருதுஸூ வைகாசிமீ —MAY 1911. — ஸஞ்சிகை 5. No. 5.

### பொருளடக்கம்.

**பத்திராதிபர் குறிப்புகள்** — பக்கம்.
பருத்திக் கொட்டை எண்ணெய்-ஸ்தூலமும் தேகப் பயிற்சியும்-ஹிந்து ஜன சமூகத்தின் ஆசாரத்திருத்தம்-கிராமப் புஸ்தக சாலைகள் .. 227-232

**விசேஷ வியாஸங்கள்**
தஞ்சாவூர் ஜில்லாவில் நாற்றங் கால்கள் —பி. எல். தேவி ஸிங் .. 233
திருவாங்கூரில் கயிறு திரித்தல் .. 235
இங்கிலாந்தில் கிண்டர்கார்ட்டன் —பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி .. 238
அக்னி நக்ஷத்திரம் —எம். ஸி. எஸ். அனந்தபத்மநாப ராவ் 241
ஒரு வாடாப் புஷ்பம் —டி. ஸி. வி. ரமணய்யர் .. 244
நெல் விதை —எஸ். வைத்திலிங்கம் பிள்ளை .. 245
பத்மினி —டி. எஸ். வைத்தியனுதன் .. 246

**விசேஷத்திரட்டு**
ஒற்றை நாற்று நடவு .. .. 249
சுகம் பேணும் முறைகள் .. 252
பால்ய விவாகம் .. .. 255

**பத்திரிகை ஆராய்ச்சி**
மறவர்கள் .. .. 257
புஸ்தகமும் வாசிப்பும் .. 257
கொழுஞ்சிவிதை ஸரியாய் முளைத்தல் 258
விவாகம் .. .. 258
சர்க்கரை வியாபாரம் .. .. 259
நக்ஷத்திரங்களைக்கொண்டு நாழி சொல்லுதல் .. 259
வாழை நார் வஸ்திரம் .. .. 260

**புஸ்தக ஆராய்ச்சி** .. .. 260
**சிறுவர் பகுதி** .. .. .. 261-262
**ஸ்திரீகள் பகுதி** .. .. 263-264
**பகுதிக் குறிப்புகள்**
விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. 265-274
**மாஸ வர்த்தமானம்** .. .. 275-277
[illegible] ங்கள். .. 278-280

### CONTENTS.

PAGE.

**Editorial Notes**
COTTON SEED OIL-FATNESS AND EXERCISE-HINDU SOCIAL PROGRESS-VILLAGE LIBRARIES ... ... ... 227-232

**Special Articles**
SEEDBEDS IN THE TANJORE DISTRICT
B. L. Davey Singh ... ... ... 233
THE COIR INDUSTRY IN TRAVANCORE ... 235
KINDERGARTEN IN ENGLAND
P. A. Krishnamoorthi ... .. ... 238
DOG DAYS
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T. ... 241
A UNFADING FLOWER
T. C. V. Ramana Aiyar ... ... ... 244
SEED PADDY
S Vythilingam Pillai ... ... ... 245
PADMINI
T. S. Vaidyanathan ... ... ... 246

**Selections**
SINGLE PLANTING OF PADDY ... ... 249
PRESERVING HEALTH ... ... ... 252
EARLY MARRIAGE ... ... ... ... 255

**Review of the Press**
Maravars ... ... ... ... 257
Books and Reading ... ... ... ... 257
Germination of Wild Indigo Seed ... ... 258
Marriage ... ... ... ... 258
Sugar Industry ... ... ... 259
Fixing Time by the Stars ... ... ... 259
Plantain Fibre Cloth ... ... ... 260

**Reviews of Books** ... ... ... ... 260
**The Boys' Section** ... ... ... ...261-262
**The Ladies' Section** ... ... ... ...263-264
**Departmental Notes**
Agricultural Notes ... ... ... ... 265
Industrial Notes ... ... ... ... 267
Educational Notes ... ... ... 268
Scientific Notes ... ... ... ... 269
Medical Notes ... ... ... ... 270
Legal Notes ... ... ... ... 271
Personal Notes ... ... ... ... 272
Fun and Anecdote ... ... ... ... 273
Curiosities ... ... ... ... 274
**News of the Month** ... .. ... ...275-277
**Madras Market Reports** ... ... 278-280

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### Cotton Seed Oil.

பருத்திக் கொட்டை எண்ணெய்.—இதைப் பற்றி 1909-ம் வருஷத்து மே, ஜூலை ஆகிய இந்த இரண்டு மாஸத்து ஸஞ்சிகைகளிலும் எழுதியிருக்கிறோம். தற்காலத்தில் நல்ல நெய் என்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. கடையில் விற்கும் நெய்யை வாங்கிக் குத்திக் கொண்டு சாப்பிடுவதைவிட நெய்யில்லாமலே சாப்பிடுகிறவர்களும், எண்ணெயைக் குத்திக் கொண்டு சாப்பிடுகிறவர்களும் பலர் உளர். இவர்களுக்கு நெய்க்குப் பதிலாக வேறு ஏதாவது நல்ல தைலபதார்த்தம் அகப்படும் பக்ஷத்தில், அதற்கு நல்ல கிராக்கி ஏற்படும் என்பதில் ஸந்தேக மில்லை.

அமெரிக்கா ஈஜிப்ட் இந்த இரண்டு தேசங்களிலும் பருத்தி ஏராளமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் கிடைக்கும் பருத்திக் கொட்டையிலிருந்து ஒரு எண்ணெய் இறக்கி, அந்த எண்ணெயை ஸோப்பு செய்யவும், சமையல் செய்யவும் உபயோகிக்கிறார்கள்.

இந்தியாவில் கிடைக்கும் பருத்திக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைச் சமையலுக்கு உபயோகிப்பதில் இதுவரையில் ஸொல்ப அஸௌகரிய மிருந்தது. அதாவது, இந்தியா எண்ணெயில் கொஞ்சம் காரல் இருந்தது. அந்தத் தொந்திரவு இப்பொழுது நீங்கி விட்டது. இந்தியா எண்ணெயின் காரல் அந்த எண்ணெயின்செகப்புக்குக் காரணமாகிற சில ஸத்துக்களால் ஏற்பட்டது. இந்த ஸத்து நூற்றுக்கு 7·5 பாகம் முதல் 9·7 பாகம் வரையில் எண்ணெயில் இருந்தது. இந்த ஸத்தை ஒரு மாற்றால் முறித்து ஜலத்தை விட்டு எண்ணெயைக் கழுவுகிறதால், அதன்காரல் அடியோடே எடுபட்டுப் போய்விட்டது. இந்த முறையைக் கல்கத்தாவில் இந்தியன் ம்யூஸியத்துக்குத் தலைவரான டி. ஹூபர் என்பவரும், ப்யூஸாவில் விவஸாய ரஸாயன சாஸ்திரியாகிய டாக்டர் ஜே. டபள்யு. லெதர் என்பவரும் கண்டு பிடித்தார்கள்.

இதுவரையில் இந்தியாப் பருத்திக் கொட்டை எண்ணெயின் விலை ஈஜிப்ட் அமெரிக்கா ஆகிய இந்த தேசத்து எண்ணெய்களின் விலையைவிடக் குறைச்சலாகவே இருந்தது. இனிமேல் இந்தியா எண்ணெய்க்கு விலை ஏறி விவஸாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நல்ல லாபம் வரும். அதோடுகூட நெய்யில்லாமல் நல்லெண்ணெய் தேங்காய் எண்ணெய் முதலிய எண்ணெய்களைக் குத்திக்கொண்டு சாப்பிடுகிறவர்களும் புதியபருத்திக் கொட்டை எண்ணெயை உபயோகிக்கக்கூடும். வீரிய விர்த்தி, தாது ஸ்தம்பனம், மார்பில் உள்ள கபம் சாந்தியாதல், மலத்தை இளக்குதல், விந்துவை இறுகச் செய்தல் ஆகிய இந்த நற்குணங்களெல்லாம் இந்தப் பருத்திக் கொட்டை எண்ணெய்க்கு உண்டென்று யுனானி வைத்திய புஸ்தகமொன்றில் சொல்லப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

### Fatness and Exercise.

ஸ்தூலமும் தேகப் பயிற்சியும்.— சிறுவனாயிருக்கும்பொழுது ஒல்லியாயும், ஒற்றை நாடியாயு மிருந்த ஒருவன் வயதானதும், பருத்து அவன் உடம்பு ஸ்தூலிப்பதை நாம் ஸாதாரணமாய்ப் பார்க்கிறோம். புருஷன் ஸ்திரீ இரண்டு பேர்களுக்கும் வயதாகும்பொழுது சில பேர்களுக்கு உடம்பு ஸ்தூலிப்பது ஸகஜம். ஒரு சிறு குழந்தையின் உடம்பு ஸ்தூலிக்கும், ஸ்தூலிக்காது என்பது அந்தக் குழந்தை 17 வயதாவதற்கு முன் தெரிந்து விடும். ஸ்தூலிப்பதா யிருந்தால், 24 வயது

வரையில் உடம்பு பருத்துக்கொண்டே வரும். பெண்களுக்கும் இப்படியே.

தாய் தகப்பன்மார்களுக்கு ஸ்தூல சரீரமாயிருந்தால், அவர்களுக்கு ஒரே குழந்தையாயிருக்கும் பக்ஷத்தில், அந்தக் குழந்தைக்கும் ஸ்தூலசரீரம்ஏற்படலாம். இரண்டுகுழந்தைகளாயிருந்தால், இரண்டாவது குழந்தைக்கு உடம்பு அநேகமாய்ப்பருக்காது. நான்கு அல்லது ஐந்து குழந்தைகளிருந்தால், ஏதாவது இரண்டு குழந்தைகள்தான் பருத்திருக்கும். பாக்கிக் குழந்தைகள் ஸாதாரணமான பருமனைத்தான் இருக்கும். இப்படிச் சிறுவர்களுக்கு உடம்பு பருக்கும்பொழுது அவர்களைத் தக்கபடி கஸரத்து செய்யச் சொல்லவேண்டும். அப்படி கஸரத்து செய்தால், பருமனை அடக்கிவிடலாம்.

சிலபேர்களுக்கு 40 வயதாகும்பொழுது உடம்பு ஸ்தூலிக்க ஆரம்பிக்கும். 40 வயதுக்கப்புறம் உடம்பு பருக்க ஆரம்பித்தால், 50 வயதாகும் வரையில் பருத்துக்கொண்டே வரும். அப்பொழுது கஸரத்து செய்தால், பருமனை அடக்குவது கொஞ்சம் அஸாத்தியமாகும். ஆறு ஏழு வருஷத்தில் சேர்ந்த ஊழல் சதையை ஒரு மாஸம் ஒரு வருஷத்தில் கஸரத்து செய்து கறைத்துவிட முடியாது.

வயதாகும்பொழுது புருஷன் ஸ்திரீ இரண்டு பேர்களுக்கும் ஒன்று உடம்பு பருக்கும், அல்லது இளைக்கும். 55 வயதில் ஒரே எடையாயிருந்த இரண்டு இரட்டைப் பிள்ளைகள் (ஸகோதரர்கள்) 56 வயதானதும், ஒருவனுக்கு 30 ராத்தல் எடை ஜாஸ்தியாகி இன்னொருவனுக்கு 15 ராத்தல் எடை குறைந்தது. இந்த வயதில் கஸரத்துசெய்து பருமனை அடக்க முடியாது. கஸரத்து செய்தால், அபாயம் நேரிடும். ஆகாரத்தை ஜாக்கிரதையாய் ஸரிப்படுத்தி வரவேண்டுமே ஒழிய வேறு ஒன்றும் செய்யக்கூடாது. வருஷத்துக்கு இரண்டு மூன்று தடவை நாம் நிறை போட்டுக்கொள்வது நலம். கொஞ்சம் நிறை ஜாஸ்தியாகி நடமாட்டத்துக்குக் கஷ்டமாயிருக்கும் பக்ஷத்தில், அதிகமாக ஊழல் சதை விழாமல் உடனே தேகப் பயிற்சி செய்ய ஆரம்பித்து, நிறை குறையாதவரையில் கஸரத்தை நிறுத்தாமல் அதைச்செய்து கொண்டே இருக்க வேணும்.

## Hindu Social Progress.

ஹிந்து ஜன ஸமூகத்தின் ஆசாரத்திருத்தம்.—ஹிந்துக்கள் ஸுமார் பதினைந்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட தற்காலத்தில் ஆசார விவகாரங்களில் சீரடைந்திருக்கிறார்களென்றே சொல்லவேண்டுமென்று ஒரு பத்திராதிபர் எழுதியிருக்கிறார், இப்படிச் சொல்வது வாஸ்தவந்தான். இருபது வருஷத்துக்கு முன்னால் ஒருவன் கப்பலேறிப்போய்த் திரும்பி வந்தாலாவது, அல்லது விதவை விவாகம் செய்தாலாவது அவனைச் சேர்ந்தவர்கள் மும்மரமாய்க் கங்கணங் கட்டிக்கொண்டு அவனை பைஷ்காரம் செய்து அவனுக்கு செய்யக்கூடிய தொந்தரவுகளையெல்லாம் செய்வதென்பது நின்றுபோய் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடிக்காதவர்களைக் கண்டனம் செய்யாமல் பூலோகத்தில் தங்களுக்குப் பிடிக்காதவர்கள் எத்தனையோ பேர்களைப்போல அவனையும் பாவித்து வருகிறார்கள். ஐரோப்பியர்களோடு பழக்கம் அதிகரித்து விட்டதாலும், பொதுவாகப் படிப்பு அபிவிருத்தியாகி விட்டதாலும், தேக சுத்தி, ஆத்ம சுத்தி, மனுஷத்தனம், உத்தியோகங்களில் லஞ்சம் வாங்காதிருத்தல், பொது நலத்தை நாடுதல், பெண்பிள்ளைகளிடத்தில் ஒரு மதிப்பு, ஆகிய இந்த நற்குணங்கள் அதிகரித்திருக்கின்றன. இருபது வருஷத்துக்குமுன் ஒருவனுக்குக் கூத்தியார் இல்லாமலிருந்தால், அகௌரவமாக எண்ணியிருந்தது போய், கேவலம் சில மூடர்கள் மட்டும் தற்காலம் தாஸி வீடுகளுக்குப் போகிறார்கள். இதுவும் முன்போல பைரங்கமாக இல்லாமல் ஒளிமறைவாகத்தான் நடக்கிறது. கல்யாணவிசேஷங்களில் ஸதிர்க்கச்சேரி வைப்பது முன்போல அவ்வளவு பிரபலமாய்க் கிடையாது. ஸ்திரீகளின் நிலைமைஉயர்ந்துவருகிறது.

மனைவி, குழந்தைகள் இவர்களிடத்தில் முன்னிருந்த விசுவாஸம் குறையாமலும் படித்தவர்கள் தங்கள் மனைவிகளைத்தங்களுடைய எச்சில் இலையில் சாப்பிட விடாமல் தனியாக இலை போட்டுக்கூட உட்காரவைத்துச் சாப்பிடச் சொல்லுகிறார்கள். சிறுவர்களுக்குள் குடி என்பதில்லாமல் பெரியவர்களிடத்தில் மட்டும் அது இன்னும் கொஞ்சம் இருந்து வருகிறது. ஒருவன் மற்றொருவனைத் தன் பந்து, ஸ்வஜாதி, என்று அன்பு பாராட்டுவது போய் அவனைத் தன் ஸ்வதேசி என்று எண்ணத்தொடங்கியிருப்பது தேசத்துக்குள்ள க்ஷேம காலத்தைக் குறிக்கிறது. ஹிந்து ஸமூகத்தில் இன்னென்ன சீர்திருத்தங்கள் ஆகியிருக்கின்றனவென்று விரல்களை மடக்கி ஒன்றொன்றாக எண்ண முடியாமல் போனாலும், பொதுவாக அடியில் கண்ட விஷயங்களில் ஹிந்துக்கள் சீரடைந்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம். அவையாவன :—

(1) இரண்டு பெண்ஜாதி கல்யாணம் செய்து கொள்ளாதது

(2) சிறு விதவைகளைப் புனர் விவாகம் செய்வித்தல். இது பணக்காரக் குடும்பங்களில் விசேஷமாக பம்பாய் மகராஷ்ட்ர பிராமணர்களுக்குள் அதிகம்.

(3) விதவா க்ரஹங்கள் ஏற்படுத்தி விதவைகளின் நிலைமை உயர்ந்திருத்தல். பட்டணங்களில் சில பெரிய வீடுகளில் விதவைகள் தலைமயிர் வைத்துக்கொண்டும், சில நகைகள் பூட்டிக்கொண்டு மிருக்கிறார்கள்.

(4) பெண்களை வயதானபிறகு கல்யாணம் செய்து கொடுத்தல். இதற்கு முக்கிய காரணம் ஸரியான வரன் கிடைக்காததுதான்.

(5) பெண்களுக்குச் சம்பளங் கொடுத்து அவர்களைப் படிப்புக்காக ஸ்கூல்களுக்கு அனுப்புதல்.

(6) தீண்டாதவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர முயலுதல்.

(7) கப்பலேறி அயல் தேசங்களுக்குப் போகுதல் அப்படிப் போய்த் திரும்பி வந்தவர்களை அதிகத் தொந்தரவில்லாமல் ஜாதியில் சேர்த்துக் கொள்ளுதல்.

(8) பிராமணர்களுக்குள் ஸரியான வரன் கிடைக்காதபொழுது மனம் நொந்து ஜாதியை விட்டு வேறுஜாதியில் கல்யாணம்செய்தாலும் நல்லது என்ற எண்ணம் சில வேளைகளில் உண்டாகுதல் இதனால் பிராம்மணர்களுக்குள் ஒருவருக்கொருவர் பேதமில்லை என்ற எண்ணம் உண்டாயிருத்தல்.

உலகத்தில் நடக்கிற விஷயங்களை அறியாமல் கிராமாந்தரங்களிலேயே வஸித்து வரும் சிஷ்டர்கள் மேற்சொல்லியவைகளையெல்லாம் காலவித்தியாஸம், கலிகாலக் கூத்து, என்று எண்ணுவார்கள். ஆனால் உலகநடவடிக்கைகளைத் தெரிந்து வருகிறவர்கள் இப்பொழுது நடக்கிற விஷயங்களை இருபது வருஷத்துக்கு முன் நடந்தவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மேல் சொல்லியவைகளால் ஜனஸமூகத்துக்கு நன்மையே ஒழிய கெடுதி இல்லையென்று சொல்லுவார்கள்.

**Village Libraries.**

கிராமப்புத்தக சாலைகள்.—உலகத்தில் ஜெயிலுக்குப் போகும் குற்றவாளிகளின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், அவர்களில் அநேகர் படிப்பில்லாத ஜனங்களும் பிழைக்கும் வழி தெரியாதவர்களுமாகவே இருப்பார்கள். அவர்கள் ஜீவனம் செய்யும்பொருட்டுத் திருடியா, பொய் சொல்லியோ பிழைக்கலாமென்று எண்ணி, தகாத காரியங்களைச் செய்து கடைசியில் அகப்பட்டுக்கொண்டு படாத பாடுகளைப் படுகிறார்கள். படிப்புண்டானால், ஜனங்கள்

பிழைக்கும் வழிகளை யறிந்து பொருள் ஸம்பாதித்து அதனால் திருப்தி யடைந்து பிறரிடத்தில் அன்பாகவும்ராஜாங்கத்தாரிடத்தில் விசுவாஸமாகவும் இருக்க ஹேதுவாகும். இந்த விஷயங்களை அறிந்தே உலகத்தில் அநேக தேசங்களில் எல்லா ஜனங்களையும் கட்டாயப்படுத்திப் படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். சிறு ராஜ்யங்களா யிருந்தால், இப்படி எல்லா ஜனங்களையும் கட்டாயமாய்ப் படிப்பிப்பது சிரமமல்ல. அதிகச் செலவும் கொள்ளாது. ஆனால், இந்தியா போன்ற பெரிய தேசங்களில் எல்லாரையும் ஒரே தடவையாய்க் கட்டாயமாய்ப் படிக்கச் செய்வது அஸாத்யமான காரியம். முதலில் செலவுக்கு வேண்டிய பணம் கிடைப்பது துர்லபம். அப்படிப் பணம் கிடைத்தாலும் சொல்லிக் கொடுக்கபோதுமான வாத்தியார்கள் அகப்படுவது மகா துர்லபம். இருந்தாலும் நல்ல விஷயத்தில் ஊக்கத்தைக் கைவிடாமல் ஏதோ முடிந்தவரையில் காரியத்தை ஆரம்பித்துச் செய்வதே புத்திசாலித்தனம். இந்த நோக்கத்துடன்தான் கனம் கோக்லே மூலாதாரப் படிப்பைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூடியவரையில் முனிஸிபாலிடிகளும் லோக்கல் போர்டுகளும் கட்டாயப்படுத்த வேண்டு மென்று மசோதா கொண்டுவந்திருக்கிறார். இது நிறைவேறினால், தேசத்தில் வித்தை பரவி அதனால் அநேக ஜனங்கள் நன்மை அடைவார்கள் என்பதற்கு ஸந்தேக மில்லை. ஆனால், இந்தியா போன்ற பெரிய தேசங்களில் படிப்பைப் பரவச் செய்ய ஒரே ஒரு வழியை மட்டும் கைக்கொள்ளக்கூடாது. அதற்கு ஸாதகமான வழிகள் அனேகம் இருக்கின்றன. அவைகளில் ஒன்று கிராமங்களில் புஸ்தக சாலைகளை ஏற்படுத்துவது.

கிராமவாஸிகள் எல்லாரும் அநேகமாய் விவஸாயிகளாகவே இருப்பார்கள். அவர்களில் வெகுபேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அப்படித் தெரிந்தவர்களுக்கும் தேச பாஷைகள் தான் அநேகர்களுக்குத்தெரியும். ஆகவே, படிக்கத் தெரிந்தவர்களுக்கு உபயோகப்பட்ட கிராமப் புஸ்தக சாலைகள் முழுமையும் தேச பாஷைப் புஸ்தகங்கள் அடங்கியவைகளாய் இருக்கவேண்டும். தேசபாஷைகளில் தற்காலத்தில் உலக நடவடிக்கைக்கு அநுஸரணையான புஸ்தகங்கள் இல்லை. வங்காளம், மகராஷ்டரம் இந்த தேசபாஷைகளில் இருக்கலாம். நமக்குத்தெரிந்தவரையில் தமிழ் பாஷையில் பெரும்பான்மையாக இலக்கிய ஸம்பந்தமானவும், மத ஸம்பந்தமானவும், பக்தி மார்க்கத்தை அநுஸரித்தும் அநேக புஸ்தகங்கள் இருக்கின்றனவே ஒழிய தற்கால நாகரீகத்தை ஒட்டிய புஸ்தகங்கள் மிகவும் சொற்பம். இப்படிப்பட்ட புஸ்தகங்கள் எழுதுவது சிரமம். அவைகள் எழுதப்பட்டாலும் அவைகளைப் பணங் கொடுத்து வாங்குபவர் மிகவும் சொற்பம். இதனால்தான் இப்படிப்பட்ட புஸ்தகங்களும் வெளி வருவதில்லை. ஆனால், இப்படிப்பட்ட புஸ்தகங்கள் மூலமாய்த்தான் ஜனங்களின் புத்தி விசாலமாகி, விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் ப்ரஜா லக்ஷணம் முதலிய பிழைக்கும் வழிகளும் நற்குணங்களும் ஏற்பட்டு தேசம்விருத்தி அடையும். ஆகவே, எப்பாடு பட்டாவது இப்படிப்பட்ட புஸ்தகங்களைப்பிரசுரம் செய்யவேண்டியது அத்யாவசியமா யிருக்கிறது.

பெரிய பட்டணங்களில் 'ஸர்க்யுலேட்டிங் லைப்ரெரி' என்பதாக ஸொந்தத்தில் பிழைப்புக்காக நபர்களாலும், பொது நன்மைக்காக சில சங்கங்களாலும் புஸ்தகசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த சாலைகளில் பல இங்கி

லீஷ் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் வரவழைக்கப்படுகின்றன. இவைகளை யெல்லாம் ஒருவரே வரவழைப்பதா யிருந்தால், வெகு பணம் செலவழிக்கவேண்டி யிருக்கும். அப்படிச் செய்வதற்கு பதிலாக ஒரு ஸர்க்யுலேடிங் லைப்ரெரியில் சேர்ந்து மாதா மாதம் அந்த லைப்ரெரி சொந்தக்காரருக்கு சொல்ப தொகை சந்தாவாகக் கொடுத்து வந்தால், அந்தத் தொகைக்குத் தக்கபடி சில புஸ்தகங்களும் பத்திரிகைகளுமோ அல்லது பல புஸ்தகங்களும் பத்திரிகைகளுமோ கூலியாள் மூலமாய் வீட்டில் கொண்டுவந்து கொடுக்கப்படும். இவைகளை சில நாள்களுக்கு (ஒன்று முதல் 7 நாள்) வைத்துக் கொண்டு வாசித்துவிட்டு மறுபடி வரும் கூலியாளிடத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டால், அவன் வேறு புஸ்தகங்களும் பத்திரிகைகளும் வாசிக்கக் கொடுப்பான். இப்படி சொல்ப சந்தாவுக்குப் பல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் பிரியமுள்ளவர்கள் வாசித்துவிடலாம். பெரிய பட்டணங்களில் தான் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேறும். அங்கேதான் அநேகம் பேர்கள் கிட்டக் கிட்ட வீடுகளி லிருப்பார்கள். சந்தாக் கொடுத்துப் படிப்பவர்களும் அநேகம் பேர்களிருப்பார்கள். ஆகையால், ஒரு முதலாளி ஏற்பட்டு, இப்படிப்பட்ட ஸர்க்யுலேடிங் லைப்ரெரியை நடத்தித் தானும் லாபம் ஸம்பாதித்துக்கொண்டு பிறருக்கும் லாபத்தைத் தரும்படியான அறிவைப் பரவச் செய்யலாம். நாட்டுப்புறங்களில் மேல் சொன்ன ஏற்பாடு வெல்லாது.

முதலாவது, தேச பாஷையில் ஸரியான புஸ்தகங்களில்லை. இரண்டாவது, இருந்தாலும் கிராமங்களுக்கு அவைகளைத் தபால் மூலமாய் அனுப்ப வேண்டியதால், புஸ்தகங்களின் போக்கு வரத்துக்காகும் தபால் சார்ஜ் சந்தாவை விழுங்கிவிடும் அதிக சந்தா விதித்தால் ஏழைகளாகிய கிராம வாஸிகள் சந்தா செலுத்த முடியாது. ஆகையால், கிராம புஸ்தக சாலைகளை ஏற்படுத்த கவர்ன்மெண்டாரே முன்வர வேண்டும்.

இதற்கு ஒரு பெரிய ஆக்ஷேபணை சொல்லலாம். ஊரூராய்ப் புஸ்தகசாலை ஏற்படுத்துவதானல், அபாரமான பணம் வேண்டும். அதற்கு எங்கே போகிறது என்று கவர்ன்மெண்டார் கேட்கலாம். இது பிரமையே ஒழிய வேறில்லை. இப்பொழுது செய்யும் செலவைவிட அதிகமாகச் செய்யாமல், செய்வதைத் திருந்தச் செய்து அதனல் நல்ல பலனுண்டென்று ஏற்பட்டால், பிறகு அதிகப் பணம் செலவழிக்க வேண்டுவதா யிருந்தால், கவர்ன்மெண்டார் ஏன் பின்வாங்கவேண்டும்? ஸர்க்காருக்குச் சிப்பந்திச் செலவு ஒன்றுமில்லை. ஒவ்வொரு கிராமத்துக்கும் கிராம முன்ஸிப் இருக்கிறர். கவர்ன்மெண்டார் கிராமப் புஸ்தகசாலைகளை அவர்கள் பொறுப்பில் விட்டுவிடவேணும். கிராமக் கணக்குகள், டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டு, வில்லேஜ் ஷீட்டுகள் இவைகளுக்கு ஜவாப்தாரியா யிருப்பதுபோல கவர்ன்மெண்டார் ஒப்புவிக்கும் புஸ்தகங்களுக்கும் கிராம முனிஸீப் ஜவாப்தாரியா யிருக்கவேண்டும். இப்பொழுது பிரசுரமாகும் டிஸ்டிரிக்ட் கெஜெட்டு, விவஸாய பஞ்சாங்கம், விவஸாயத் துண்டுப் பத்திரிகைகள் போன்றவைகளெல்லாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும். இன்னும் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், வித்யா விஷயம், ப்ரஜா லக்ஷணம் இவைகளைப் பற்றி கவர்ன்மெண்டார் அப்போதைக் கப்போது இங்கிலீஷில் பிரசுரிக்கும் ரிப்போர்ட்டுகளிலிருந்தும், புஸ்தகங்களிலிருந்தும் ஸாராம்சங்களைப் பொறுக்கி எடுத்து, இரண்டு மூன்று பேர்

களைத் தெரிந்தெடுத்து நியமித்து, ஜனங்களுக்கு விளங்கும்படியாக தேச பாஷையில் தர்ஜிமால் செய்து அச்சிடும்படி செய்து அப்படிப்பட்ட பிரசுரங்களின் காப்பி ஒன்றை ஒவ்வொரு கிராம முனிஸீப்புக்கும் அனுப்ப வேண்டும். லார்டு கர்ஸன் ராஜப் பிரதிநிதியாயிருந்த காலத்தில் நிலத் தீர்வை விஷயமாய் பிரசுரித்த ஒரு இங்கிலீஷ் புஸ்தகத்தைத் தேச பாஷைகள் எல்லாவற்றிலும் மொழி பெயர்த்து ஒவ்வொரு கிராம முன்ஸீப்புக்கும் அனுப்பப்பட்டது. அதுபோல கிராம வாஸிகளுக்கு உபயோகமான பிரசுரங்களை கவர்ன்மெண்டாரே பிரசுரிப்பதோடு வேறு யாராவது தற்கால நாகரீக விஷயமாகப் புஸ்தகங்களை வெளியிடும் பக்ஷத்தில், அவைகளில் ஏராளமான காப்பிகளை வாங்கி கிராமந்தோறும் அனுப்பவேணும். இப்படிச் செய்வது முன்கால அரசர்கள் செய்ததுபோல வித்யார்த்திகளை ஆதரிப்பதாக ஆவதோடு ஜன ஸமூகத்தின் அபிவிருத்தியைக் கோரிய செய்கையும் ஆகும். கிராம முன்ஸீப் புஸ்தகங்களைத் தன் வீட்டிலோ, அல்லது கிராமச் சாவடியிலோ வைத்து அங்கேயே வாசிக்க வருகிறவர்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்யவேண்டும். முதலில் ஸர்க்காருக்கு வரி செலுத்துகிறவர்களையும் ஸ்கூல் உபாத்தியாயர்களையும் மட்டும் மேற்படி புஸ்தக சாலையை உபயோகிக்க விடலாம். இப்படிச் செய்வதால் வேலையற்ற வெகு பேர்கள் கூடி வீண் பொழுது போக்காமல் காப்பதோடு கவர்ன்மெண்டார் வாங்கும் வரிக்கு, ஏதோ ஒரு பரிகாரமாக வாசிக்கப் புஸ்தகங்கள் கொடுக்கிறார்கள் என்று வரி செலுத்துகிறவர்கள் எண்ணிக்கொண்டு ராஜாங்கத்தாரிடத்தில் கொஞ்சம் விசுவாஸமாய் இருக்க ஹேதுவாகும்.

இப்படிப்பட்ட கிராமப் புஸ்தக சாலைகள் பரோடா ஸமஸ்தானத்தில் ஏற்பட்டு நடந்து வருகின்றன. அங்கே ஸுமார் 232 கிராமப் புஸ்தக சாலைகளிருக்கின்றன. அவைகளுக்காக 1909-10 வருஷத்தில் 23,104 ரூபாய்க்குப் புஸ்தகங்கள் வாங்கப்பட்டன. தவிர, புதிதாய் ஏற்படும் ஒவ்வொரு கிராமப் புஸ்தக சாலைக்கும் கவர்ன்மெண்டார் தாங்களே பிரசுரித்திருக்கும் 125 ரூபாய் பெறுமானமுள்ள புஸ்தகங்களும் கொடுக்கிறார்கள். 1909-10ம் வருஷத்தில் இப்படிக் கொடுக்கப்பட்ட பிரசுரங்களின் மதிப்பு ரூ. 11,832.

ஐரோப்பாவிலுள்ள பெல்ஜியம் தேசத்திலும் புஸ்தக சாலைகள் ஏற்படுத்த ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள். தற்போது அந்த தேசத்தில் 717 கிராமப் புஸ்தக சாலைகள் போன்ற புஸ்தகசாலைகள் இருக்கின்றன. இவைகளுக்கு செலவுக்கு வேண்டிய பணமில்லை. தவிரவும் உபயோகமற்ற நாவல் (கதை) புஸ்தகங்களே விசேஷமாயிருக்கின்றன. ஆகையால், நல்ல அறிவு பரவக் கூடியனவாயும் உபயோகமுள்ளனவாயும் உள்ள புஸ்தகங்களைச் சேர்த்து ஒரு பெரிய புஸ்தக சாலை ஏற்படுத்தி அதிலிருந்து அங்கங்கே புஸ்தக சாலைகளுக்குப் புஸ்தகங்கள் ஸப்ளை செய்யப்போகிறார்கள். புஸ்தகங்களை இரவலாகத் தபால் மூலமாயோ, அல்லது சங்கங்கள் மூலமாயோ அனுப்புவார்கள். இந்தக் காரியங்களெல்லாம் 'ம்யூஸ்டு லிவர்' என்னும் ஒரு பெரும் சங்கத்தால் செய்யப்படும். இதற்கு கவர்ன்மெண்டார் தபாலாபீஸ் மூலமாயும், ஸேவிங்க்ஸ் பாங்கி மூலமாயும் உதவி செய்வதோடு பண உதவியும் செய்வார்கள். சில புஸ்தகங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டணமுமில்லாமல் இரவலாகக் கொடுக்கப்படும். அதே மாதிரி கைத்தொழில் முதலியவைகளைப்பற்றிய புஸ்தகங்கள் தொழிலாளிகளுக்கு ஒரு கட்டணமுமில்லாமல் இரவலாகக் கொடுக்கப்படும். பணக்காரர்களுக்குக் கட்டணம் செலுத்தினால் புஸ்தகங்கள் அனுப்பப்படும். பெல்ஜியத்தில் 1485 போஸ்டாபீஸ்கள் இருக்கின்றன. இவைகள் மூலமாய் அந்த தேசம் முழுவதும் புஸ்தகங்களைப் பரப்பி ஜனங்களுக்கு அறிவை ஊட்டலாமென்று ஷெ ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியாவிலும் இப்படிப்பட்ட புஸ்தக சாலைகள் ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்கு வேண்டிய சிப்பந்திகளும் ஸௌகரியங்களும் இருக்கின்றன, மனம் உண்டா?

## SEEDBEDS IN THE TANJORE DISTRICT.

BY.
B. L. DAVEY SINGH.

## தஞ்சாவூர் ஜில்லாவில் நாற்றங் கால்கள்.

இந்த ஜில்லாவில் நெற்பயிர் நாற்றை இரண்டு விதமாய் வளர்க்கிறார்கள். அவைகள் இரண்டிற்கும் புழுதிக் கால் நாற்று என்றும், சேற்றுக் கால் நாற்று என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். புழுதிக் கால் நாற்றாவது, நன்றாய்க் காய்ந்த படுகை நிலங்களையோ அல்லது வயல்களையோ ஆகிய இவைகளை அப்படியே காய்ந்தபடியே உழுது அந்த இடத்தை மேடு பள்ளமில்லாமல் ஸமமாக்கி விதை விட்டு வளர்க்கப்படுவதேயாம். சேற்றுக் கால் நாற்றாவது, வயல்களில் ரொம்பத் தண்ணீர் கட்டி பிற்பாடு அவைகளை உழுது விதை விட்டு வளர்க்கப்படுவதேயாம்.

இந்த இரண்டு விதங்களில் சேற்றுக் கால் நாற்றுத்தான் எங்கும் ஜாஸ்தியாயிருந்தது. இப்போது இரண்டு மூன்று வருஷ காலமாகத்தான் புழுதிக்கால் நாற்று எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறது. விவசாயிகள் அநேகருடைய அபிப்பிராயம் என்னவென்றால், புழுதிக்கால் நாற்று பட்டை வரப்பாகிற தென்பதும், நெல் விளை முதல் ஜாஸ்திப்படுகிறதென்பதுமாம். ஆனால், இப்படி ஒரே தீர்மானமாய் அபிப்பிராயங் கொண்டிருப்பது ஸரியாகத் தோன்றவில்லை.

யோஜித்துப் பார்ப்போமாகில், சேற்று நாற்று விடவேண்டிய பக்ஷத்தில், நாற்றங்கால் தயார் செய்வதற்குத் தண்ணீர் ஜாஸ்தியாய் தேவையாயிருக்கும். மேலும், அந்த நாற்றுகளைப் பாதுகாத்துவருவதில் அடிக்கடி தண்ணீரை சீராய்ப் பாய்ச்ச வேண்டும். ஆனால் புழுதிக் கால் நாற்றுக்கு அவ்வளவு தண்ணீர் வேண்டியது அவசியமில்லை. முதலாவது நாற்றங்கால் தயார் செய்வதற்கு ஜலமே வேண்டியதில்லை. விதைவிட்ட பிற்பாடும் ஜலம் அடிக்கடி பாய்ச்ச வேண்டியது அவசியமில்லை. இதுவே இவைகள் இரண்டிற்குமுள்ள வித்யாஸம்.

புழுதிக்கால் நாற்று விடுவதில் ஒருவிதமான தெய்வாதீனமான அபாயமிருக்கிறது. புழுதிக்கால் விதை விட்டு இரண்டொரு வாரத்துக்குள் நல்ல மழையாய் ஒரு மழை பெய்தால், புழுதிக் கால் நாற்றானது சேற்றுக் கால் நாற்றுக்கு ஸமமாகவே ஆகிவிடுகிறது. எப்பொழுது சேற்றுக்காலாய்விட்டதோ அப்போது சேற்றுக் கால் நாற்றுக்கு ஜலம் கட்டும் மாதிரி இதற்கும் கட்டவேண்டும். நாற்றுகளுக்கெல்லாம் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அப்படிப் பாய்ச்சாமல் புழுதிக் கால் நாற்றுத்தானே என்று சொல்லிவிட்டுத் தண்ணீர் அடிக்கடி பாய்ச்சாவிட்டால், நாற்று நன்றாய்க் கிளம்பாது. போன வருஷத்தில் இதே மாதிரியாக நடந்துவிட்டது. புழுதிக் கால்விட்ட கொஞ்சநாளைக்கெல்லாம் மழை பொழிந்தது. ஆகையால், புழுதிக்கால் சேற்றுக் காலாய் விட்டது.

புழுதிக் கால் நாற்று விடவேண்டுமானால், வெள்ளம் வரும் முன்னமே, கிணற்று உதவியையோ, அல்லது குளத்து உதவியையோ கொண்டு ஏற்பாடு செய்துவிட வேண்டும். புழுதிக்கால் விடும் நிலமானது கொஞ்சம் மேட்டுப் பாங்காகவே இருக்க வேண்டும். ஒருக்கால் அக்கம் பக்கத்தில் ஜலம் வந்தாலும் கசிவு இருக்கக்கூடாது.

மேலும், நதிகளில் ஜலம் வந்த பிற்பாடும் சில இடங்களில் புழுதிக் கால் விடவேண்டி

யிருக்கும். அது இடத்தையும் காலத்தையும் பொறுத்திருக்கிறது. காலத்தை எப்படிப் பொறுத்திருக்கிறதென்றால், சில ஸமயங்களில் வெள்ளம் வந்து சரேலென்று நின்றுவிடும். அப்பேர்ப்பட்ட ஸமயங்களைக் கவனிக்க வேண்டும். எப்படி இடத்தைப் பொறுத்திருக்கிறதென்று பார்ப்போம். ஜலம் நிறையவும் வந்துவிட்டது. வாய்க்காலிலும் பாய்ந்து வருகிறது இருந்தாலும் சில ஸமயங்களில் இந்தப் பாய் வாய்க்காலின் கடைத்தலைப்பிற்கு ஜலம் தட்டிருக்கும். அப்பேர்ப்பட்ட இடங்களில் புழுதிக்கால் விடுவது நன்மையா யிருக்கும்.

ஜனங்கள் புழுதி நாற்றுக்கு அதிக ஜலம் விட்டால், வேர் கீழே இறங்கி பறிக்கக் கஷ்டப்படுகிற தென்று சொல்லுகிறார்கள். ஆனால், இது ஸரியல்ல. மழை பெய்வதினால் ஜலம் அதிகம் தங்கி சேற்றுக்கால் நாற்றுப் போலவே ஆகும். மேலும், புழுதிக் காலுக்கு விதை குறைச்சலாய்ப் போடவேண்டு மென்றும், அதினால் நாற்றுப் பட்டை வரப்பு ஆகிற தென்றும், விதை விட்டு இருபது அல்லது முப்பது நாளைக்குள் நாற்றங்காலில் கிளைவிடுகிறதென்றும், இன்னும்பலவிதமாகச் சொல்லுகிறார்கள், ஆனால், இந்தக் கணக்குக்கு குறைச்சல் விதை சேற்றுக் காலில் விட்டாலும், இதே மாதிரியாய்க் கிளைகள் விட்டு நாற்றும் ஓங்கி வளரும். ஆகையால், புழுதிக் கால் நாற்றுத்தான் நெல் ஜாஸ்தி காண்கிறது என்பது ஸரியன்று. மேலும் புழுதிக் கால் நாற்று விட்டால், நாற்றங்காலைச் சின்னச் சின்னத்துண்டுகளாகப் பிரிக்க வேண்டியது அவசிய மென்றும் செய்கிறார்கள். இது அவசியமே யில்லை. ஒரு ஏக்கராவுக்கு ஜாஸ்திப்பட்டால் மூன்று துண்டாக்கலாம்.

புழுதிக் கால் நாற்றங் கால்களின் செய்கைகளில் இரண்டொரு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் அறுப்பான பிறகு கோடையில் மழை பொழிந்த பிற்பாடு நாற்றங்காலை மேலாக உழவேண்டும். கல்லுக் கட்டி இருக்கக் கூடாது. புழுதிக் கால் நாற்றங்காலுக்கு இரண்டு விதமான எருவே போடலாம்:—ஆட்டு மந்தையை வைத்தலும், பிண்ணாக்கு எரு இடுதலுமேயாம். வேறே ஒரு விதமான எருப்போட்டால், போட்ட எரு அப்படியே யிருக்கும். சேற்றுக் கால் நாற்றுக்கு எல்லா எருவும் போடலாம். புழுதிக் காலுக்கு ஏன் போடக்கூடா தென்றால், அதற்கு இப்பேர்ப்பட்ட எருவை உள்ளே செலுத்தி உணவாக்கப் போதுமான ஜலமில்லை.

புழுதிக் கால் நாற்றை 30 அல்லது 35 நாளைக்குள் பிடுங்கி நடவேண்டு மென்றும், சேற்றுக் கால் நாற்றை 40 அல்லது 45 நாளைக்கு மேல் பிடுங்கி நடவேண்டு மென்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் செய்வது அவசியமே யில்லை.

இரண்டுக்கும் 25 நாள்கூடப்போதுமானதேயாம். இதற்கு உதாரணமாக, இப்போது அநேக இடங்களில் "ஊடு குருவை" என்று விதை விடுகிறார்கள். ஊடு குருவை என்றால், கலந்த குருவை என்று சொல்லலாம். குருவை நெல் சுமார் மூன்று மாதத்தில் விளைந்துவிடும். ஆனால், சம்பா நெல்லுக்குக் கிட்டத்தட்ட ஏழு மாதஞ் செல்லும். குருவை நெல் விளைந்த பிறகு சம்பா நாற்று நட்டு சாகுபடி செய்கிற தென்றால், ஏழும் மூன்றும் பத்து மாதம் ஆய்விடும். இதற்காக அநேகர் ஒரு போக கிராமங்களில் ஒரு யுக்தி செய்கிறார்கள். கலக்கிற விதமானது இரண்டு பங்கு குருவையும், ஒரு பங்கு சம்பா விதையுமாம். பிற்பாடு விதை விட்டு 25 நாளுக்கெல்லாம் நாற்றுப் பறித்து நட்டு விடலாம். நட்ட.

மூன்றும் மாதம் குருவை நெல் அறுத்து விடலாம். பிற்பாடு மேற்படி அறுபட்ட குருவைத்தாள் அழுகிச் சம்பாத்தாள் மட்டும் துளுத்துக்கொண்டு விதை விட்ட ஏழாவது மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும். ஆகவே சம்பா நெல் விதை மாத்திரம் விட்டு நாற்றுப் பறிப்பதாயிருந்தால், குறைந்தது 45 நாள் வேணு மென்று சொல்லுகிறார்கள். ஆனால், இவர்களே ஊடு குருவை நாற்று விட்டுப் பறிக்கும்போது 25 நாளைக் கெல்லாம் பறித்து விடுகிறார்கள். அப்போது சம்பா நாற்றானது 25 நாள் பயிர்தான் ஆகிறது. சில பேர்கள் கணக்கு என்ன வென்றால், பயிர் எவ்வளவு மாதங்களில் பலன் தருமோ அவ்வளவு வாரங்கள் நாற்று முற்ற வேண்டுமென்பதாம். அதாவது, மூன்று மாதக் குருவைக்கு மூன்று வாரம் நாற்றும், ஆறுமாதச் சம்பாவுக்கு ஆறுவார நாற்றும் என்ற கணக்காம். இந்தக் கணக்குப் பார்க்கவேண்டியது அவசியமேயில்லை யென்று இந்த ஊடு குருவை சாகுபடியிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனபடியால், எல்லாம் நாற்று வளமையைப் பொறுத்ததேயாம். நாற்றுப் பஞ்சையானால், 35 நாளுக்கு மேல் பறிக்கலாம். நாற்பது நாளுக்கு மேல்பட்டால் சிலாக்கியமில்லை.

இன்னமொரு விஷயமுமுண்டு. விதைகளை எல்லா வயல்களுக்கும் ஒரேயடியாய் ஒரே நாளில் விடக்கூடாது. கொஞ்ச நாள்கள் விட்டு விட்டு விடவேண்டும். ஏனென்றால், இப்படிச் செய்தால்தான் நாற்றுப் பிடுங்கி நடும்போது அதிக நாள் படாதிருக்கும்.

பி. எல். தேவி ஸிங்.

---

## THE COIR INDUSTRY IN TRAVANCORE

## திருவாங்கூரில் கயிறு திரித்தல்.

"தென்னைவனம்" என்று சொல்லப்படும் திருவாங்கூர் ராஜ்யத்தில், அங்கேயே உற்பத்தியானவும், சிறியவும், ஜனங்களுக்கு வெகு உபயோகமுள்ளவுமான கைத்தொழில்கள் அநேகம் உண்டு. இவைகளில் கயிறு திரித்தல் முக்கியமானது. இந்தக் கைத்தொழிலில் வேலை செய்பவர்கள் இழுவர் முதலான கீழ் ஜாதியார்கள்தான். இந்தக் கைத்தொழிலை இழுவர் கைத்தொழில் என்றே சொல்லலாம்.

கொல்லத்திலிருந்து அனந்தசயனமென்னும் திருவனந்தபுரத்துக்குப் போகும் வழியில் ரோடுகளின் இருபக்கங்களிலும் தென்னை மரங்களை வரிசையாய்க் காணலாம். ஆகாயத்தில், எங்கே தலையில் விழுந்துவிடுமோ என்ற எண்ணத்தைக் கொடுக்கும்படியான தென்னங் குலைகளை ஆயிரக்கணக்காய்க் காணலாம். கீழ் நிலத்திலோ சிறுவர், சிறுமிகள், வயது சென்றவர்கள் எல்லாரும் வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்து கொண்டிருப்பார்கள். தென்னை மரமோ நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கு வேலை கொடுக்கும் சக்தியுள்ளது. கயிறு திரித்தல் வெகு ஸுலபமானது. ஸாதாரண புத்திசாலித்தனத்துடன், அதிக தேக பலமில்லா விட்டாலும், இந்தக் கைத்தொழிலை ஆரம்பித்து வெகு லாபத்துடன் வேலை செய்யலாம். திருவாங்கூரில் கயிறு திரிப்பது பெண்பிள்ளைகளே யொழிய ஆண்பிள்ளைகளில்லை. ஆனால், மலைக்குக் கிழக்குப் பக்கத்திலோ ஆண் பெண் இருவர்களும் வேலை செய்கிறார்கள்.

நல்ல நார் கிடைக்கவேண்டுமானால், தேங்காய்க் குலை போட்ட எட்டு அல்லது

ஒன்பதுமாதத்திற்குப்பிறகு பறிக்கவேண்டும். அப்பொழுது தான் காய் முதிர்ந்திருக்கும். காயை இதற்கு முன்பாவது பின்பாவது பறித்தால் நல்ல நார் கிடைக்காது. காயைப் பறித்த வுடன் இழவர்கள் தேங்காய்மேல் மூடிக்கொண்டிருக்கும் மட்டையைக் கோடாலியினுலோ, மண்வெட்டியினுலோ உரித்து விடுவார்கள். உரித்தவுடன் மட்டைகளை ஒரு இடத்தில் குவித்துக்கொண்டு பெண்பிள்ளைகள் ஒரு சிறிய பருத்த மரத்துண்டினுல் அடித்து நாரைவேறுபடுத்துவார்கள். ஆனுல், வேறு படுத்துவதற்கு வேறு ஒரு வழி உண்டு. இந்த வழியினுல் நார் கிடைப்பதற்குக் கொஞ்சம் நாள் செல்லும். அதாவது மூன்றுமாதம் ஜாஸ்தியாய் செல்லும். இந்த வழியில் சிறுவர்கள் மட்டைகளை உரித்தவுடன் கிணற்றிலோ அல்லது இதற்காக வெட்டியிருக்கும் சிறு குட்டைகளிலோ கொண்டுபோய்ப் போடுவார்கள். மட்டைகள் இந்தக் குட்டைகளில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் ஊறிக்கொண்டு கிடக்கும். கொஞ்ச நாள் ஊறினவுடன் ஒருவித கெட்ட நாற்றம் உண்டாகும். இந்த நாற்றத்தை ரோடுகளின் வழியாய்ப் போகும் ஒவ்வொரு பிரயாணியும் மூகர்ந்து பார்த்திருக்கலாம். இந்த மூன்று மாதம் சென்றவுடன் மட்டையைக் கையால் தொட்டுப் பார்த்தால், கசகச வென்று துர்நாற்றத்துடன் பார்க்கக்கூட ஒரு வெறுப்பு உண்டாகும். மட்டையின் நிறமோ முன்னிருந்த சிவந்த நிறம் போய் ஒருவித கறுப்பு நிறம் உண்டாயிருக்கும். உடனே முன்போல் சிறுவர்கள் மட்டைகளைக் குட்டையிலிருந்து எடுத்துக்கொண்டுபோய் அதற்காக ஏற்படுத்தியிருக்கும் இடத்தில் சேர்ப்பார்கள். அவ்விடத்தில் பெண்பிள்ளைகள் ஒரு பெரிய மரக்கட்டையின் முன்பாக ஒரு பருத்த குட்டையான மரக்கட்டையும் கையுமாய் உட்கார்ந்திருப்பார்கள். மட்டைகளை அவ்விடத்தில் சேர்த்த வுடன் பெண்பிள்ளைகள் அவைகளை ஒவ்வொன்றுய் எடுத்து எதிரிலிருக்கும் கட்டைமேல் வைத்துக் கொண்டு கையிலிருக்கும் கட்டையினுல் அடித்து, மட்டையிலுள்ள சக்கையை வேறுபடுத்தித் தள்ளிவிட்டு நாரை ஒரு பக்கத்தில் குவிப்பார்கள். இதற்குத்தான் "சோற்று நார்" என்று பெயர். இது சுத்தமானதல்ல. இந்த நாரை மறுபடியும் அடித்தால், அதிலிருக்கும் சக்கை முழுவதும் போய் நல்ல நார் கிடைக்கும். இந்த நாருக்கும், ஊறப் போடாமல் அடித்து எடுக்கும் நாருக்கும் வித்தியாஸமென்ன வென்ருல், இந்த நார் அழுத்தமாய் வெகு காலம் தாங்கும். ஊறப் போடாமல் எடுக்கப்பட்ட நார் கெட்டியாய் இருக்காது.

உபயோகம்.—இந்த நாரைப் பலபேர் பலவிதமாய் உபயோகப்படுத்துகிருர்கள். சிலர் தலையணைக்கு பஞ்சுக்குப் பதிலாய் அடைப்பார்கள். மெத்தைகளுக்கும் உபயோகப்படுத்துவதுண்டு. ஸோபாவுக்கு அடைப்பதுமுண்டு. வேறு சிலர் ஆடு, மாடு, குதிரைகளுக்குப் படுக்கைக்காகப் போடுவார்கள். மற்றும் சிலர் காய்ந்த பிறகு அடுப்பு மூட்டுவதற்கு உபயோகப்படுத்துவார்கள். ஆனுல், அநேகர் இந்த நாரைக் கயிறு திரிப்பதற்கு உபயோகப் படுத்துவார்கள்.

கயிறு.—இவ்விதம் எடுக்கும் நாரை கும்பல் கும்பலாய்க் குவித்துக்கொண்டு ஒவ்வொரு கும்பலண்டையில் ஒரு ஸ்திரீ உட்கார்ந்து கொண்டு முதலில் ஒரு சிறு துண்டுக் கயிறை கையினுல் முறுக்குவாள். பிறகு ஒரு முழம் நீளமுள்ள இந்த மெல்லிதான கயிற்றின் ஒரு முனையை 'ராட்டு' என்று சொல்லப்படும் யந்திரத்தில் கட்டி விடுவாள். பிறகு சிறுவர் சிறுமிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராட்

டைப் பிடித்துக்கொண்டு அதன் சக்கரத்தைச் சுழற்றுவார்கள். சுற்றும்பொழுது கயிறு இறுகிக்கொண்டு வரும். அப்பொழுது நார்க் கும்பலண்டையிலிருக்கும் ஸ்திரீகள் கொஞ்சம் கொஞ்சமாய் நாரை முனையில் சேர்த்துக் கொண்டு வருவார்கள். அப்பொழுது கயிறு முறுக்கிக் கொண்டு நீண்டுகொண்டு வரும். எவ்வளவு நீளம் வேண்டுமோ அவ்வளவு நீளம் முறுக்கின பிறகு அக்கயிற்றை எடுத்து ஒரு கட்டையில் சுற்றிவைத்து மறுபடியும் முன் போல ஆரம்பிப்பார்கள். இவ்விதமாய் மெலிந்த கயிறுகள் முறுக்குவார்கள். ஆனால், இந்தக் கயிறு மெல்லிதா யிருப்பதினால் ஒரு வேலைக்கும் உபயோகப்படாது. எந்தெந்த வேலைக்கு வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி பருமனாய் முறுக்க வேண்டும்.

உபயோகம்.—ஸாதாரணமாய் பந்தல் போடுவதற்கும், குடிசைகள் கட்டுவதற்கும் கயிறு வேண்டுமானால், மேல் கிடைத்திருக்கும் கயிறுகளில் இரண்டு சேர்த்து ஒன்றாய் முறுக்கினால் போதும். ஆடு மாடுகள் கட்ட வேண்டுமானால், நாலு கயிறுகளை ஒன்றாய்ச் சேர்த்து ராட்டில் கொடுத்து சக்கரத்தைச் சுற்றினால் நல்ல கயிறு கிடைக்கும். இதற்குத் தான் "தும்பு" என்று பெயர். இந்தப் பருமனுள்ள கயிறு வீட்டில் நெய், பால் தயிர் வைக்கும் "உறி" கட்டுவதற்கு உபயோகப் படும். வண்டி எருதுகளுக்குத் "தலைக் கயிறு" வேண்டுமானால், மேல்கண்ட கயிறு ஆறு அல்லது எட்டு சேர்த்து முறுக்க வேண்டும். முறுக்கின பிறகு, "பிசிறு" என்று சொல்லப் படும் நாரைக் கத்தியினால் அறுத்துவிட்டால், நேர்த்தியான தலைக் கயிறு கிடைக்கும். கிணற்றில் குடம், தோண்டி முதலியவைகளைப் போட்டு ஜலம் எடுக்கவேண்டுமானால், பன்னிரண்டு கயிறுகள் ஒன்றுசேர்த்து முறுக்கினால் நல்ல தாம்புக் கயிறு கிடைக்கும். வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் தண்ணீர் இறைக்க வேண்டியதற்காக தாம்புக் கயிறை விட பருமனாய் முறுக்கி வேலையாட்கள் உபயோகப் படுத்துகிறார்கள். இம்மாதிரி எந்தெந்த வேலைகளுக்கு வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி முறுக்கிக் கொள்ளலாம். ஆனால், இவை எல்லாவற்றையும்விட பலமான கயிறு ஒன்றுண்டு. இது முறுக்குவது வெகு பிரயாஸம். இதுதான் "தேர்வடம்." தேர்வடம் வேண்டுமானால், தாம்புக் கயிறைப் போல் அநேகம் திரித்து வைத்துக்கொண்டு பிறகு இவைகளில் நான்கை ஒன்றாய்ச் சேர்த்து பெரிய ராட்டில் கொடுத்து முறுக்க வேண்டும். பிறகு இவ்விதமாய்க் கிடைத்த கயிறுகள் நான்கை மறுபடியும் சேர்த்து முறுக்கினால், ஒரு சிறிய தேர்வடம் கிடைக்கும். திருவாங்கூரில் தேர்வடம் முறுக்குவதில்லை. ஏனென்றால், திருவாங்கூரில் தேர் உத்ஸவமுள்ள கோவில்கள் கிடையாது. அதனால்தான் அவ்விடத்தில் தேர்வடம் முறுக்குவது அரிது.

ஒன்று மாத்திரம் ஞாபக மிருக்கவேண்டும். தேங்காய் மட்டைகளாகவே கொழும்பு முதலிய இடங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. அதனால் தான் அதிக ஜனங்களுக்கு கயிற்று வேலை கிடைப்பதில்லை. ஏற்றுமதி செய்யாவிட்டால், வெகு ஜனங்கள் இதனால் ஜீவித்துக் கொண்டிருப்பார்கள்.

தற்காலம் இழவர்கள்கூட இந்தக் கைத் தொழிலை விட்டு விடுவார்கள். வேறு வேலைகளில் கூலி ஜாஸ்தியாய் கிடைப்பதினால் இதைக் கவனிப்பவர்கள் சிலரே. ஆனால், ஏற்றுமதியை நிறுத்தி, சிறியதும் வெகு உபயோகமானதுமான இந்தக் கைத்தொழிலை முன்னுக்குக் கொண்டுவருவது நலம்.

---

## KINDERGARTEN IN ENGLAND.

BY

P. A. KRISHNAMOORTHI.

## இங்கிலாந்தில் கிண்டர்கார்ட்டன்.

கிண்டர்கார்ட்டன் என்னும் பதத்திற்கு, "குழந்தைகள் தோட்டம்" என்று பொருள். அதாவது, தோட்டங்களில் செடிகள் எப்படி தாங்களாகவே வளர்கின்றனவோ, அப்படியே குழந்தைகளுக்கு அவர்களுடைய சுபாவத்தைக் கொண்டே, கல்வி கற்பிக்க வேண்டும். குழந்தைகளுடைய கவனத்தை எந்தெந்த வஸ்துக்கள் இழுக்கின்றனவோ, அவைகளைப்பற்றித்தான் முதலில் நாம் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அவர்கள் எதை வெறுக்கிறார்களோ, அதைப்பற்றி நாம் முதலில் அவர்களுக்குக் கற்பிக்க முயலவே கூடாது.

இந்தமாதிரி சொல்லிக் கொடுக்கும் விதத்தை முதலில் கைக்கொண்டவர் ஜர்மனி தேசத்திலிருந்த ப்ரோபல் என்ற ஓர் உபாத்தியாயர். அவர் குழந்தைகளுக்குக் கற்பிக்க அநேக விதங்களைப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு, கடைசியில் அவர்களுடைய சுபாவத்தைக் கொண்டே அவர்களுக்குக் கற்பிப்பதுதான் சிரேஷ்டம் என்று கண்டுபிடித்தார். மாரன் ஹால்ட்ஸ்பூலோ என்ற ஒரு அம்மாள் அவர் சொல்லிக்கொடுக்கும் விதத்தைப்பற்றி ஒரு பெரிய புஸ்தகம் எழுதி இருக்கிறாள்.

1847-ம் வருஷத்தில் ஒரு ஸமயம் மாரன் ஹால்ட்ஸ்பூலோ லீபீன்ஸ்டென்ஸ்பா என்னும் ஓர் பட்டணத்திற்குப் போயிருந்த பொழுது, ஒரு நாள் அவள் தங்கியிருந்த வீட்டுக்காரி அவளிடம் வந்து, "இந்த ஊரில் சுமார் பத்து அல்லது பதினைந்து நாட்களாக ஒரு கிழவன் வந்திருக்கிறான். அவன் என்ன பண்ணுகிறானென்றால், ஊரில் உள்ள குழந்தைகளை யெல்லாம் கூட்டிக்கொண்டு அவர்களோடு விளையாடுவதும், கூத்தாடுவதுமா யிருக்கிறான். அதைப் பார்த்தால் மிகவும் வேடிக்கையாய் இருக்கிறது" என்றான். இதைக் கேட்டவுடன் மாரன்ஹால்ட்ஸ்பூலோவுக்கு இப்படிக் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு விளையாடுபவன் யார், அப்படிக் கூத்தாடுவதின் காரணம் என்ன? அவனைப் பார்க்கவேண்டும், என்ற ஒரு இச்சை உண்டாயிற்று.

இப்படி இவள் எண்ணிக்கொண்டிருக்கையில், ஒரு நாள் தெருவில் ஒல்லியாய் மெலிந்த தேகத்தையுடைய ஓர் கிழவன் மூன்று வயதுமுதல் எட்டு வயது வரையிலுள்ள குழந்தைகளை அழைத்துப் போவதைக் கண்டாள். அவன் அந்தக் குழந்தைகளை இரண்டு வரிசையாக ஒருவருக்குப் பின் ஒருவராக அவ்வூருக்கு அருகாமையிலுள்ள ஒரு குன்றின் உச்சிக்கு அழைத்துக்கொண்டு போனான். அங்கே போனவுடன் அவர்களை விளையாடச் சொல்லி அவ்விளையாட்டுக்குரிய ஓர் பாட்டையும் கற்பித்தான். இந்தக் கிழவன் பெயர்தான் ப்ரோபெல். இவன் செய்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மாரன் ஹால்ட்ஸ்பூலோ அவைகளில் மிகுந்த ஆசைகொண்டு ப்ரோபெல் சாகும் வரையில் வாழ் நாளில் ஜாஸ்தியான காலத்தை அவனுடன் கழித்து, ப்ரோபெல் குழந்தைகளுக்கு உபதேசிக்கும் வழியைக் கற்றுக்கொண்டாள். 1853-ம் வருஷத்தில் மாரன் ஹால்ட்ஸ்பூலோவினுடைய ஒரே குழந்தை காலம் சென்றுவிட்டது. உடனே அவள் தன்மீதி வாழ் நாளை தன்னுடைய குருவாகிய ப்ரோபெல் குழந்தைகளுக்குச் சொல்

லிக்கொடுக்கும் வழியை உலகத்தாருக்குக் கற்பிப்பதில் செலவழிக்கத் தீர்மானித்தாள்.

1851-ம் வருஷத்தில் ஜர்மனி தேசத்தில் கிண்டர்கார்ட்டன் வழியாகக் குழந்தைகளுக்கு உபதேசிப்பது கூடாது என்று கவர்ன்மெண்டார் கண்டிப்பாகத் தடுத்துவிட்டார்கள். ஆகையினுல், அந்தத்தடங்கல் எடுபடும் வரையில் ஜர்மனி தேசத்தில் கிண்டர்கார்ட்டனைப் பரவச்செய்ய அவளால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. இதைப் பார்த்த உடனே மாரன் ஹால்ட்ஸ்பூலோ அம்மாள் 1854-ம் வருஷத்தில் இங்கிலாந்திற்கு வந்தாள்.

அந்த ஸமயத்தில் இங்கிலாந்தில் கிண்டர்கார்ட்டன் மூலமாக குழந்தைகளுக்கு உபதேசிக்கிற பள்ளிக்கூடம் ஒன்றுதான் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தை மிஸஸ் ரான்ஜ் என்ற ஒரு மாது நடத்திவந்தாள். மாரன் ஹால்ட்ஸ்பூலோ இங்கிலாந்திற்கு வந்த அதே வருஷத்தில் இங்கிலாந்தில் ஒரு கல்விக் காக்ஷி கூடினுர்கள். அந்தக் காக்ஷியில் மிஸஸ் ரான்ஜூம் மாரன்ஹால்ட்ஸ்பூலோவும் ப்ரோபெல் சொல்லிக்கொடுத்த வழியின் நோக்கத்தையும் உபயோகத்தையும் பற்றி வெகு நன்ருகப் பிரசங்கம் செய்தார்கள். இந்தப் பிரசங்கங்களைக் கேட்டவுடனே ஜனங்கள் கிண்டர்கார்ட்டன் வழியாக உபதேசிப்பதில் ஆசை கொண்டார்கள். இப்படி ஏற்பட்ட ஆசையானது அடுத்த வருஷத்தில் ப்ரோபெலின் மருமகனுகிய ஹென்ரிச் ஹாப்மென்லின்டனுக்கு வந்து, அங்கே செய்த பிரசங்கங்களினுலேயும், மாரன் ஹால்ட்ஸ்பூலோ எழுதிய புஸ்தகங்களினுலேயும், மேலும் மேலும் அதிகரித்தது.

மிஸஸ் ரான்ஜ் தன்னுடைய பள்ளிக்கூடத்தை இன்னேர் அம்மாளிடம் ஒப்புவித்துவிட்டு மான்செஸ்டர் என்னும் பட்டணத்திற்கு வந்து அங்கே கிண்டர்கார்ட்டனின் உபயோகத்தைப் பற்றி அநேகப் பிரசங்கங்கள் செய்தாள் அந்தப்பிரசங்கங்களினுல் இரண்டு பெண் பாடசாலைகளில் கிண்டர்கார்ட்டன் மூலமாக உபதேசிப்பதைக் கைக்கொண்டார்கள். மேலும், மான்செஸ்டர் கிண்டர்கார்ட்டன் சங்கம் என்ற ஓர் சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் எல்லோரும் இப்படிக் கிண்டர்கார்ட்டன் விஷயமாக பிரயாஸைப்பட்டுக் கொண்டிருக்கையில், 1857-ம் வருஷத்தில் மிஸ் டராக் என்ற ஒருமாது ஜெர்மேனியா தேசத்திலிருந்து வந்தாள். அவள் 1866-ம் வருஷத்தில் லண்டனில் ஒரு கிண்டர்கார்ட்டன் பள்ளிக்கூடம் ஏற்படுத்திஞள்.


1861-ம் வருஷத்தில் மிஸ் ஹீலர்ட் என்பவள் லங்காஷயரில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி இருந்தாள். அவள் 1866-ம் வருஷத்தில் அயர்லாந்துக்குப் போய் அதற்குப் பிரதானப் பட்டணமாகிய டப்ளினில் ஓர் கிண்டர்கார்ட்டன் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தாள்.


இம்மாதிரியாக 1854-ம்வருஷத்தில் மாரன் ஹால்ட்ஸ்பூலோ இங்கிலாந்திற்கு வந்தது முதல் கிண்டர்கார்ட்டன் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் வெகு விரைவாகப் பரவிக் கொண்டிருந்தது. ஆனுல், கிண்டர்கார்ட்டன் இங்கிலாந்தில் பரவ ஆரம்பித்தது முதல் இருபது வருஷங்கள் வரையில் பணக்காரப் பிள்ளைகள் வாசித்து வந்த ப்ரைவேட் பள்ளிக்கூடங்களில் தான் பரவி வந்தது. ஆகையினுல், கிண்டர்கார்ட்டனுல் உண்டாகிற பிரயோஜனத்தைப் பணக்காரக் குழந்தைகள் தான் அடைந்தன. ஏழைப் பிள்ளைகள் வாசித்து வந்த கவர்ன்மெண்ட் பாடசாலைகளில், இன்ஸ்பெக்டர்கள் கவர்ன்மெண்டாருக்கு கிண்டர்கார்ட்டனின் உபயோகத்தைப் பற்றி வெகு சிலாகித்து எழுதின போதிலும், கிண்டர்கார்ட்டனைக் கைக்கொள்ளவில்லை.

டாக்டர் மிட்செல் என்ற ஒரு இன்ஸ்பெக்டர் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படும் வருஷாந்தர ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதலானர். "இத்தனை வருஷங்கள் பள்ளிக்கூடங்கள் இருந்ததைப் பார்த்துவிட்டு இப்பொழுது அவைகள் இருக்கும் ஸ்திதியைப் பார்க்கும்பொழுது எனக்கு ஆனந்தமும் திருப்தியும் உண்டாகிறது. இப்பொழுது சொல்லிக் கொடுக்கப்படும் கிண்டர்கார்ட்டனனது குழந்தைகளுடைய சுபாவத்துக்கு ஒத்தே இருக்கிறது. அது குழந்தைகளுக்கு யோஜனை செய்யும் சக்தியை உண்டு பண்ணுகிறது. கிண்டர்கார்ட்டனில் குழந்தைகளின் கவனத்தைக் கவரும் பொம்மைகளினுடையவும், பாட்டுக்களினுடையவும், ஓத்தாசையைக் கொண்டே கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதில் கடினமான உச்சரிப்புகளும் வார்த்தைகளும் கிடையா. கிண்டர்கார்ட்டனில் முக்கிய விஷயம் என்னவென்ருல், குழந்தைகள் செய்யும்வேலை. அதில்குழந்தைகளுக்கு வாயினல் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒன்றுமில்லை. குழந்தைகள் தங்களுக்குக் கொடுக்கப்படும் குச்சிகளையோ, அல்லது வளையல்களையோ வைத்துக்கொண்டு கோபுரங்கள், வீடுகள் முதலியவற்றைத் தாங்களே செய்கிருர்கள். இப்படித் தாங்களே செய்வதில் வீடு கட்டுவது போலுள்ள பல விஷயங்களை அவர்கள் சுயமாகவே கற்கிருர்கள். இந்த மாதிரி செய்யப்படும் ஒவ்வொரு வேலைக்கும் தகுந்த பாட்டுக்கள் இருக்கின்றன. இவைகளினல் என்ன உபயோகமென்ருல், குழந்தைகள் கல்வியை வெகு உற்சாகத்தோடு கற்கிருர்கள். அவர்களை படி, படி, என்று நாம் கட்டாயப்படுத்தவே வேண்டாம். அவர்களாகவே நம்மிடம் வந்து இதைச் செய்யட்டுமா, அதைச் செய்யட்டுமா, என்று கேட்பார்கள். கிண்டர்கார்ட்டன் உபயோகத்தைப் பற்றி இன்னும் எவ்வளவு பக்கம் எழுதினலும் எழுதலாம். ஆனல் அதைப் பற்றி முற்றிலும் ஒருவன் அறிய வேண்டுமானல், கிண்டர்கார்ட்டன் மூலமாய் கற்றுக்கொடுக்கப்படும் ஓர் பள்ளிக்கூடத்தை நேரில் போய் பார்த்தால்தான் அதன் சிறப்பு நன்ருகத் தெரிய வரும்."

1870-ம் வருஷத்தில் லண்டனில் லண்டன் ஸ்கூல் சங்கம் என்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சங்கத்தார், 1871-ம் வருஷத்தில் பள்ளிக்கூடங்களில் என்னென்ன பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்க ஒரு கமிட்டியாரை ஏற்படுத்தினர்கள். அந்தக் கமிட்டியார், குழந்தைகள் வாசிக்கும் பள்ளிக்கூடங்களில் கிண்டர்கார்ட்டன் மூலமாய்த்தான் வித்தை கற்பிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

1873-ம் வருஷத்தில் ஒரு இன்ஸ்பெக்டர் பின்வருமாறு ரிப்போர்ட்டு அனுப்பினர். "குழந்தைகளிடத்தில் நாம் பக்ஷமுள்ளவர்களாகவும், பொறுமை யுள்ளவர்களாகவும் இருந்தால், அவர்களுடைய விசுவாசத்தை எவ்வளவு லகுவாக கிரகிக்கக்கூடு மென்பதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆனந்தகரமாய் இருக்கிறது. எனக்குச் சிறிய குழந்தைகள் வாசிப்பதையும், எழுதுவதையும், எண்ணுவதையும் பார்ப்பதைவிட அவர்கள் கிண்டர்கார்ட்டனில் பாடுவதையும் ட்ரில் செய்வதையும் பார்க்க வெகு பிரியம். குழந்தைகள் வாசிப்பதினலேயும், எழுதுவதினலேயும் எவ்வளவு கற்கிருர்களோ அதைவிட கிண்டர்கார்ட்டன் மூலமாய் பதின் மடங்கு அதிகமான வித்தை கற்கிருர்கள். ஆனல், சில உபாத்தியாயர்கள் தவிர




கடகம்
மிதுனம்
கிருத்திகை
பூமி

பாக்கி எல்லா உபாத்தியாயர்களும் மற்ற எல்லாப் பாடங்களைப் போலவே கிண்டர் கார்ட்டனும் ஒரு பாட மென்று நினைக்கிறார்கள். அது மிகவும் பிசகு. அவர்கள் எந்தப் பாடம்கற்றுக் கொடுத்தாலும் அதைக்கிண்டர் கார்ட்டன் மூலமாக உபதேசிக்க முயலவேண்டும். இப்பொழுது கிண்டர்கார்ட்டனுக்கு வேண்டிய சாமான்கள் கொஞ்சம் குறைவாக இருக்கின்றன. ஆனால், கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் அவைகளை வாங்கிக் கொடுத்து விடுவார்க ளென்று நான் நம்புகிறேன்."

1874-ம் வருஷத்தில் லண்டன் ஸ்கூல் போர்டார் பெண் உபாத்திமார்களுக்கு கிண்டர்கார்ட்டனைப் பற்றி பிரசங்கிக்க மிஸ் பிஷப் என்பவளை நியமித்தார்கள். அதே வருஷத்தில் க்ராயிடன் ஸ்கூல் போர்டார் மக்கேலிஸ் என்பவளை நியமித்தார்கள்.

இதே காலத்தில் ப்ரிடிஷ் அண்ட் பாரின் ஸ்கூல் சொஸைட்டிக் காரர்கள் கிண்டர்கார்ட்டன் நார்மல் பாடசாலை ஒன்று ஏற்படுத்தினார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்த மிஸ் ஹீவர்ட் என்பவளை வரவழைத்தார்கள். இப்படியாக 1854-ம் வருஷமுதல் 1874-ம் வருஷத்திற்குள் இங்கிலாந்து முழுவதும் கிண்டர்கார்ட்டன் பரவிவிட்டது. இப்பொழுதோ இங்கிலாந்தில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ப்ரோபெலின் பாட்டுகளும் விளையாட்டுகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. நம் உபாத்தியாயர்கள் இவ்வாறு வித்தியாபிவிருத்தியில் மனப் பூர்வமான சிரத்தை எடுத்துக்கொண்டு கிண்டர்கார்ட்டனை மேலும் மேலும் கையாடி வருவார்களானால், இந்தியா முழுமையு முள்ளவர்கள் கல்வியில் அதிகத் தேர்ச்சி அடைவார்கள் என்பதற்கு ஸந்தேகமே கிடையாது.

பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி.



## DOG DAYS.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T.

## அக்னி நக்ஷத்திரம்.

[*All Rights Reserved.*]

சூரியன் தினந் தினம் கிழக்கே உதித்து மேற்கு முகமாய்ச் சென்று மேற்கில் அஸ்தமனமாகி மறுநாட் காலையில் கிழக்கே உதிக்கிறது. பகலும் இரவுங்கொண்ட இக்காலத்தை நாம் நாள் என்கிறோம். இதை 24 பாகங்களாகக் கணக்கிட்டு ஒவ்வொரு பாகத்தையும் மணி என்கிறோம். நம் தேசத்தவர்களுக்கு பகல் சுமார் 12 மணி நேரமும், இரவு 12 மணி நேரமும் உள்ளன. பகலில் சூரிய கிரணங்களால் பூமி உஷ்ணமாகிக்கொண்டே வந்து இரவிலும் பகலிலும் உஷ்ணத்தை வெளிவீசிக்கொண்டே வருகிறது. இந்த லாப நஷ்டத்தால் பூமியின் மேல்படிந்த வாயுவின் டெம்பரேசர் அதாவது சீதோஷ்ண நிலைமை, அதிகரித்துக் கொண்டும் குறைந்து கொண்டும் வருகிறது. ஒரு தாழ்வாரத்தில் உஷ்ணமானியாகிய தெர்மாமிட்டர் ஒன்றைத் தொங்கவிட்டு அதை மணிக்கொருமுறை கவனிப்போமானால், உஷ்ண தீக்ஷணியம் சூரியோதய முதல் பகல் 2 மணி வரையில் அதிகரித்துக்கொண்டும், பிறகு காலை 4 மணி வரையில் தாழ்ந்து கொண்டும், பிறகு மறுபடியும் அதிகரித்துக்கொண்டும் வருவதைக் காணலாம். தினம் தினம் இம்மாதிரியாக ஒரு வருஷ காலம் கவனித்தால், ஒரே காலத்தில் தினத்துக்கு தினம் டெம்பரேசர் வித்தியாஸப்படும். சென்னையில் பிப்ரவரி ௴ முதல் ஜூன் ௴ வரையில் டெம்பரேசர் அதிகரித்துக்கொண்டும், பிறகு பிப்ரவரி ௴ வரையில் குறைந்து கொண்டும் வருவதை நக்ஷத்திர ஆபீசிலிருந்து

பிரதிதினமும் வெளியாகும் மீடியராலோஜிகல் ரிபோர்ட் என்னும் காலக்குறி அறிக்கை பத்திரிகையை கவனித்தால் தெரிந்து கொள்ளலாம். உஷ்ண தீக்ஷணியத்தை கவனித்து சித்திரை முதலான நான்கு மாதங்களை வேனிற்கால மென்றும், மற்ற மாதங்களை குளிர், மழை, பனிக்கால மென்றும் பிரித்திருக்கிறார்கள். இந்த வேனிற் காலத்திலும் உஷ்ணம் அதிகமான சித்திரைக் கடைசி வாரமும், வைகாசி முதல்வாரமும் சேர்ந்த 14 நாட்களை அக்னி நக்ஷத்திர நாட்களெனப் பெயரிட்டிருக்கிறார்கள். உஷ்ணம் தினத்திற்கு தினம் வித்தியாஸப்படுவதெவ்வாறு என்பதையும், அக்னி நக்ஷத்திரம் எனப் பெயர் வந்ததேன் என்பதையும் பற்றி விவரிக்க முயல்வோம்.

சூரியன் உதயமாகும் திக்கையும், அஸ்தமனமாகும்இடத்தையும்கவனிக்கையில்,தைமுதல் ஆடி வரையில் கொஞ்சம்கொஞ்சமாக வடக்கு முகமாகவும், ஆடி முதல் தை வரையில் தெற்கு முகமாகவும் தினந் தினம் வித்தியாஸப்பட்டுக் கொண்டே இருக்கும். நம்முடைய நிழலை சூரிய உச்சி வேளையில் பார்த்துக்கொண்டே வந்தால், அதன் திசையும் நீளமும் வேறுபட்டுக்கொண்டு வருவதைக் காணலாம். இத்தென்னிந்தியாவில் உள்ளவர்களுக்கு சுமார் சித்திரை முதல் ஆவணி மாதம்வரையில் நடுப்பகலில் நிழல் தெற்கு முகமாகவும், ஆவணி முதல் சித்திரை வரை வடக்கு முகமாகவும் தோன்றும். சித்திரை ஆவணி மாதங்களின் ஆரம்பத்தில் 12 மணி வேளையில் நிழலில்லாமலேயிருக்கும். அதாவது, இங்கிலீஷ் கணக்கில் ஏப்ரல் 22வ முதல் ஆகஸ்டு 15வ வரையில் சூரியன் ஆகாய மார்க்கத்தில் வடக்கேயும், ஆகஸ்டு 15வ முதல் ஏப்பிரல் 25வ வரையில் தெற்காகவும் ஓடுகிறான். முதல் படத்தில் குறிப்பிட்டபடி வருஷத்தில் ஒருமுறை சூரியன் 1, 2, முதலான இலக்கமிட்ட திசைகளில் போவதாகத் தோன்றி, பூமியில் 1, 2, 3, முதலான இலக்கமிட்ட இடங்களிலுள்ளவர்களுக்கு முறையே தலைக்கு நேராகச் செல்லுகிறான். சென்னப்பட்டணத்தி லிருப்பவர்களுக்கு சூரியன் ஏப்பிரல் கடைசி வாரத்தில் உச்சிக்கு நேராகச் சென்றால், கல்கத்தாவில் உள்ளவர்களுக்கு ஜூன் மாதம் கடைசி வாரத்தில் தலைக்குமேல் செல்லுகிறான். அதற்கு வடக்கே உள்ளவர்களுக்கு சூரியன் எப்போதும் தலைக்கு நேராகச் செல்லுவதில்லை. சூரிய கிரணங்கள் சித்திரை ஆவணி ஆரம்பத்தில் லம்பனமாக அதாவது செங்குத்தாகவும், மற்றக் காலங்களில் சரிவாகவும் விழுகின்றன. இக்கிரணங்களால்தானே பூமிசூடாக்கப்படுகிறது? கிரணங்களின் சரிவுக்குத் தக்கபடி சூடும் வித்தியாஸப்பட வேண்டியதுதானே. முதல் படத்தை கவனிக்க இதன் உண்மை நன்கு விளங்கும். (இப்படத்தில் காட்டியபடியல்லாமல் சூரியன் அதிக தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்ள வேண்டும்.) சென்னையை யடுத்த பூபாகத்தில் விழும் சூரிய கிரணங்கள் சூரியன் தலைக்கு நேராகச் செல்லும்போது அதிகமாகவும், சாய்வாகச் செல்லுகையில் குறைவாகவும் இருக்கிறதல்லவா? ஒவ்வொரு சதுர அடிப் பரப்பிலும் விழும் வெயில் சித்திரை மாதத்தில் மார்கழி மாதத்தைவிட அதிகமல்லவா? ஆதலால், சித்திரை மாதங்களில் பூமி அதிக சூடாக இருக்க வேண்டியதுதானே? சென்னையைப் போல் பூமத்திய இரேகையிலிருந்து 13 டிக்ரீ வடக்கே யுள்ளவர்களுக் கெல்லாம் சூரிய கிரணங்களால் இதே காலத்தில் வெப்பம் அதிகமாய் இருக்க வேண்டியதுதானே? இக்கிரணங்களின் சரிவின் வித்தியாஸத்தா லல்லவோ

தினம் தினம் பகல் 12 மணிக்கு சூரிய கிரணங்கள் அதிகதீக்ஷணியமாகத் தோன்றுவது.

ஒரு தெர்மாமிட்டரை ஒரு தாழ்வாரத்தில் வைத்து மணிக் கொருமுறை ஆகாயத்தின் டெம்பரேசரை பார்த்தெழுதி வந்தால், பிரதி தினமும் சுமார் பகல் 2 மணி ஸமயத்தில் டெம்பரேசர் அதிகமாகவும், மற்றக்காலங்களில் குறைவாகவும் காணும். நடுப் பகலில் சூரிய கிரணங்களின் தீக்ஷண்யம் அதிகமானாலும், பூமியிலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தைவிட பூமியில் படும் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே வருவதால், மழை பெய்து நின்றாலும் பிரவாகம் கொஞ்ச காலம் அதிகரித்துக் கொண்டே வருவதுபோல், 2 மணி வரையில் டெம்பரேசர் அதிகரித்துக்கொண்டேவந்து, பிறகு சூரியன் சாயச் சாய, கிடைக்கும் உஷ்ணத்தைவிட வெளிவீசும் உஷ்ணம் அதிகரிப்பதால், டிக்ரீ குறைந்துகொண்டும் வருகிறது. இதனாலே தினம் 2 மணிக்கு ஆகாயம் அதிகப்புழுக்கமாய்த் தோன்றுகிறது. தினசரி டெம்பரேசர் வித்யாஸத்திற்குச் சொன்னபடியே ஆலோசித்துப் பார்த்தால், ஏப்பிரல் கடைசியில் சூரியன் நம் தலைக்கு நேராகச் சென்றாலும், பூமியின் உஷ்ணம் தினந் தினம் அதிகரித்துக் கொண்டே போய் மே மாஸம் 15வ வாக்கில் உச்சநிலையை அடைகிறது. அதற்குப் பிறகு குறைந்து கொண்டே போகிறது.

முதல் படத்தில்கண்டபடி இச்சென்னையில் சூரியன் வருஷத்தில் இரண்டு முறை தலைக்கு நேராகச் செல்லுகின்றதே. ஆதலால், அதிக உஷ்ண காலம் வருஷம் இரண்டு தடவை உண்டா எனச் சந்தேகம் தோன்றுவது ஸகஜமே. ஆனால், ஆகஸ்டு மாதத்தில் மேற்குக் கடற்கரை யோரங்களில் மழைக் காற்றடிப்பதாலும், ஆறுகளில் வெள்ளம் புரண்டுவர பூமி பயிராகி ஜலம் நிறைந்து இருப்பதாலும், தலைக்குமேல் செல்லும் சூரியனின் வெப்பத்தால் டெம்பரேசர் அதிகரிக்காமல், இரண்டாந் தடவை நேரிடவேண்டிய அதிக உஷ்ண காலம் தோன்றுவதில்லை.

அதிக உஷ்ண காலமாகிய சித்திரை கடைசி வாரமும், வைகாசி முதல் வாரமுமாகிய 14 நாட் காலத்திற்கு அக்னி நக்ஷத்திரம் எனப் பெயர் எவ்வாறு வந்தது ? சூரியன் அஸ்தமனமாகும்போது உதயமாகும் நக்ஷத்திரங்களை சிலநாள் கவனித்தால், வெவ்வேறு நக்ஷத்திரக் கூட்டங்கள் தென்படுகின்றன. வருஷம் ஒருமுறை அதே காலத்தில் அதே நக்ஷத்திரம் தென்படுகிறது. இதனால் நக்ஷத்திர மண்டலத்தில் சூரியன் இடம் பெயர்ந்து கொண்டே இருக்கிற தென்பது தெரிகிறது. பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டிருந்தபோதிலும், சூரியன் பூமியைச்சுற்றிக்கொண்டு நக்ஷத்திரமண்டலத்தில் வருஷம் ஒருமுறை சுற்றுவதுபோல் காணப்படுகிறது. சூரியனை அடுத்துத் தோன்றும் நக்ஷத்திரங்களை நாளுக்கு நாள் கணித்து, சூரியனுடைய வருஷ கதியை அதாவது, வழியிலுள்ள நக்ஷத்திரக் கூட்டங்களை 12 மாதங்களுக்குச்சரியான மேஷம்முதலான 12 இராசிகளாகவும், இச்சுற்றையே சந்திரனின் தினசரி இடத்தைக் குறிப்பிட அசுவனி முதலான 27 நக்ஷத்திரங்களாகவும் பிரித்துப் பெயரிட்டிருக்கிறார்கள். இரண்டாம் படத்தில் காட்டியபடி பூமி 1, 2, 3, முதலான இடங்களுக்கு வரும்போது, சூரியன் மேஷம் முதலான இராசிகளில் முறையே பிரவேசிப்பதாகத் தோன்றுகிறது. முதல் படத்தில் சூரியன் 1, 5, இலக்கங்களுள்ள இடத்தில் இருக்கும் போது இரண்டாம் படத்தில் காட்டியபடி சூரியன் மேஷ ராசியில் பிரவேசிப்பதாகவும், முதல் படத்தில் 2 என்னும் இடத்தில் சூரியன் இருக்கும்போது இரண்டாவது படத்தின்படி மேஷத்தில் முக்கால் பங்கை சூரியன் தாண்டியதாகவும் காணப்படுகிறது. அதிக உஷ்ணமாகக் காணப்படும் சித்திரை மாதக் கடைசியில் சூரியன் மேஷத்தை விட்டு ரிஷபத்தில் பிரவேசிப்பதாகவும், கிருத்திகை என்னும் நக்ஷத்திரக் கூட்டத்தின் பக்கமாகச் செல்வதாகவும் தெரிகிறது. இக்கிருத்திகை நக்ஷத்திரப் பகுதியில் சூரியன் சுமார் 14 தினம்

தங்குகிறான். அதாவது இப்பாகத்தைத் தாண்ட 14 நாட்செல்லும். இக்காலமே அதிக சூடான காலமாதலால் கிருத்திகை நக்ஷத்திரத்திற்கு அக்னி நக்ஷத்திரம் என்ற பெயரும் ஒத்திருக்கிறது. இக்காலத்திற்கும் அக்னி நக்ஷத்திரம் என்று சொல்வது உண்டு. சென்னையிலிருப்பவர்களுக்கு அக்னி நக்ஷத்திர காலமும், கல்கத்தா, டெல்லியிலுள்ளவர்களுக்கு அக்னி நக்ஷத்திர காலமும், வித்தியாஸப்படும். அக்னி நக்ஷத்திரம் என்றால், சூரியன் கிருத்திகை நக்ஷத்திரத்தில் உலாவும் காலம் என்று நாம் சொல்லலாம்.

ஆங்கிலேயர்களுக்கு இங்கிலாந்தில் அதிக உஷ்ணமான காலத்தில் சூரியன் ஸிரியஸ் அல்லது டாக் ஸ்டார் என்னும் நக்ஷத்திரத்திற்கு நேராய்ச் செல்வதால், அதிக உஷ்ண காலத்திற்கு டாக் டேஸ், (நாய் நாட்கள்) என்று சொல்லிக்கொள்கிறார்கள். இக்காலம் ஜூலை 2-ம் வாரம் முதல் ஆகஸ்டு 2-ம் வாரம் வரையிலும் செல்லும். ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருக்கும்போதும் அதிக உஷ்ண காலத்திற்கு (அக்னி நக்ஷத்திரத்திற்கு) டாக் டேஸ் என்னும் பெயரையே வழங்குகிறார்கள். இப்படிச் சொல்லுகையில் உஷ்ண காலம் என்பதைத் தவிர டாக்ஸ்டாரைப்பற்றிய ஞாபகமே கிடையாது. தெரியாதவர்கள் அக்னி நக்ஷத்திர காலத்தில் சூரியன் ஸிரியஸுக்குப்பக்கமாகச்செல்லுகிறான் என்பதுண்டு. ஆனால், வேதங்கள் எழுதிய காலத்தில், அதாவது அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னம், கங்கைக் கரையில் பூமத்திய ரேகைக்கு சுமார் 30 டிக்ரி தூரத்தில் வேத ரிஷிகள் தங்குகையில், சூரியன் 'திவ்யஸ்வான்' (சிறந்த நாய்) என்னும் நக்ஷத்திரக் கூட்டத்தில் நாயின் பல் போன்ற, லப்தக் என்னும் பெயரையுடைய பிரகாசமான நக்ஷத்திரத்தின் பக்கமாகச் சென்றபோது முதுவேனிற் காலமாய் இருந்ததாக அதர்வண வேதத்திலிலிருந்து தெரியவருகிறது. இம்மாதிரியாகவே இன்னும் சில நூற்றாண்டுகளுக்குப் பின் அதிக உஷ்ணமான காலம் இப்போது இருப்பதைவிட கொஞ்சநாள் முன்னதாகவே தொடங்கிவிடுமென்று வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

எம். ஸி. எஸ். அனந்தபத்மநாப ராவ்.

## A UNFADING FLOWER.

BY

T. C. V. RAMANA AIYAR.

## ஒரு வாடாப் புஷ்பம்.

---

சென்ற எப்பிரல் மாதத்திய "பிழைக்கும் வழி" யில் "விநோதங்கள்" என்ற தலைப்பின் கீழ் ஒரு வாடாப் புஷ்பம் என்று மகுடம் புனைந்த வியாஸத்தில் தென் ஆப்பிரிக்காவில் ஸாதாரணமாய் அகப்படக் கூடிய ஒரு செடியிலிருந்து பறித்தது முதல் இரண்டு மாத காலம் வரையில் வாடாமலிருக்கிற ஒரு புஷ்பமிருக்கிறதென்றும், பின்னும் அதைப் பற்றிய வரலாறுகளும் காணப்பட்டன. புஷ்ப ஜாதிகளைச் செவ்வையாக கவனித்தவர்களுக்கு இது ஒரு ஆச்சரியமன்று. இம்மாதிரி வாடாத புஷ்பங்கள் நமது தென்னிந்தியாவில் வாடாமல்லிகை யென்ற நாமத்தையே பெற்று அநேகம் இருக்கின்றன. ஆனால், அப்புஷ்பங்கள் கோலியைப்போல் உருண்டையான உருவமுடையனவாய் சிவப்பும் வெண்மையுமான இதழ்களோடு காணப்படும். புஷ்பங்களைப் பறித்துவைத்திருந்தால், 15 அல்லது 20 நாட்களில் அவைகளின் நிறம் மாறிவிடுகிறது. இவைகளில் மத்திய பாகத்தில் பூந்தாதுக்கள் என்ற கேசரங்கள் மேற்பார்வைக்குத் தோன்றா.

ஆனால், நீலகிரி மலையில் தென் ஆப்பிரிக்காவில் காணப்படுகிற புஷ்பங்களைப்போல் ஏராளமாய் அனேக புஷ்பங்கள் கிடைக்கின்றன. இவைகளின் காம்புகள் 18 அங்குலம் முதல் இரண்டடி வரையிலிருக்கின்றன. இந்தச் செடிகள் இரண்டு கெஜ உயரம் வரையில் வளர்கின்றன. செடிகளில் புஷ்பங்கள் அதிகமாய் உண்டாகின்றன. இந்தப் புஷ்பங்கள் வாடிப்

போவதில்லை யாதலால், வருஷம் முழுவதும் இந்தச் செடிகளில் புஷ்பங்களைப் பார்க்கலாம். புஷ்பங்கள் ஒரு ரூபாய் அகலத்தைவிடப்பெரியனவாயும், மெல்லிய காகிதம் போன்றவரிசையான இதழ்களை யுடையனவாயும், மத்தியில் மஞ்சளான பூந்தாதுக்களை யுடையனவாயுமிருக்கின்றன. இவற்றில் மஞ்சளான இதழ்களையுடைய புஷ்பச்செடிகள் ஒருவிதம். வெண்மையான இதழ்களையுடைய புஷ்பச் செடிகள் மற்றொரு விதம் இவற்றின் புஷ்பங்களைக் காம்புடன் கொய்து வைத்திருந்தால், வெகு காலம் வரையில் வர்ணம் கெடாமலிருக்கிறது. இந்தப் புஷ்பங்கள் செடியிலிருக்கும்பொழுது ஒரு விசேஷமுண்டு. அதாவது, சாயந்திர வேளைகளில் மலர்ந்த புஷ்பங்கள் மறுபடியும் தங்களுடைய இதழ்களைக் குவியச் செய்துகொண்டு மொட்டுகள் போலக் காணப்படும். காலை வேளைகளில் அவைகள் மலர்ந்தவைகளாய்க் காணப்படும். மழையடிக்கும்பொழுது இப் புஷ்பங்கள் தங்கள் இதழ்களைக் குவியச்செய்து கொள்ளுகின்றன. பறித்துவைத்த புஷ்பங்கள் ஒரே ரீதியாய் வெகுநாட்கள் வரையிலிருக்கின்றன. புஷ்பங்களில் யாதொரு வாசனையுமில்லை. இதற்கு இவ்விடத்தில் "எல்லோ ஸ்டார்" என்றும், "ஒயிட் ஸ்டார்" என்றும் ஸாதாரணமாய்ச் சொல்லுகிறுர்கள். ஐரோப்பியர்கள் இந்தப் புஷ்பங்களை வெகு பிரியமாகப் பறித்துக்கொண்டு போகிறுர்கள். மஞ்சள் இதழ்களோடு கூடிய இந்தப் புஷ்பங்கள் தற்காலத்தில் வெகு நாகரீகமாகப் பொன்னுல் செய்யப்படுகிற ரோஜாப்பூ ஜடைவில்லையை விட அழகாயிருக்கின்றன.

டி. வி. வி. ரமணய்யர்.

---

## SEED PADDY.

BY

S. VYTHILINGAM PILLAI.

## நெல் விதை.

நமது "பிழைக்கும் வழி" யின் நேயர்களில் பெரும்பாலர் நெல் சாகுபடி விஷயத்தில் கவலைகொண்டவர்களா யிருப்பார்களாதலால், அதைப் பற்றிய சில குறிப்புகளை இங்கே குறிப்பிடுவோம்.

ஸ்தல லக்ஷணம்.—விதை நெல் சாகுபடி செய்வதற்கென்று குறிப்பிட்ட ஸ்தலமவசியம். அந்த ஸ்தலமானது கூடியவரையில் சிறியதாயும், (அதாவது, எவ்வளவு விதை வேண்டுமோ அவ்வளவு மட்டும் விளையக்கூடிய இடம்) நல்ல வடிகால், பாய்கால் உள்ளதாயும், கொஞ்சம்கூட மேடு பள்ளமில்லாததாயும், கரைக்கட்டுள்ளதாயும், இயற்கையிலேயே நல்ல பூசாரமுள்ளதாயும், கண்பார்வையிலிருக்கக்கூடியதாயும் இருக்கவேண்டும்.

செய்யும் வேலை.—ஆற்றில் ஜலம் வந்தவுடனேயே தண்ணீர் பாய்ச்சி உழவு, கொத்து முதலியவைகளால் நெகிழ வைத்து, அதில் இந்திரிய வஸ்துக்களடங்கிய எருவைப் பரப்பி, அதன்மேல் அவுரி, கொழுஞ்சி, சடம்பு, ஆடாதொடை, வாதநாராயணம், வேம்பு, புங்கு முதலிய தழைகளைக் கிடைத்த வரையில் வேண்டிய மட்டும் போட்டு மிதித்து உழுது அழுகவைத்து பழஞ்சேறுக்கி நடப்போகிற தினம் உழுது பரம்படித்து 100 குழி, அதாவது 33 ஸெண்டு நாற்றங்காலில் 2 பட்டணம் படிக்குமேல் தெளிக்கப்படாத நாற்றங்காலிலுள்ளதும், நோய் நொடிக்குள்படாததும், 35 நாளைக்கு மேல் போகாததுமான நாற்றுகளால் 9 அங்குலத்துக் கொன்றுக ஒற்றை நாற்று நடவு கிரமப்படி நடவேண்டும். பிறகு

களை யெடுப்பதற்குக் கொஞ்சகாலம் முன் வேம்பு, நிலக்கடலே முதலிய பிண்ணாக்குகளை எருவாகத் தூவவேண்டும். மேற்கண்ட விதமுள்ள நாற்றுக் கிடைக்காதவர்கள் நாற்றங்கால் ஓரங்களிலும், எரு ஜாஸ்தியாய் விழப்பட்ட இடங்களிலுமுள்ள நாற்றுகள் பட்டை உரப்பாயும், தாஷ்டிகமுள்ளனவாயும், கார்மேகம் போன்றதாயுமிருக்கும். அவைகளைத் தனியே பறித்து மேற்கண்டவாறு நடுவதே போதுமானது.

கவனிப்பு.—நிலத்துக்குடையவர் தினம் ஒருதரமாவது ஒரு சாணளவுள்ள ஸ்தலமேயாயினும் நாலு கரையிலுமாக வந்து அடிக்கொருதரம் நின்று சுற்றிப் பார்க்கவேண்டும். பார்த்துவரும்போது ஏதேனும் ஒரு களையோ, அன்னிய ஜாதிப் பயிரோ தன் கண்ணில் தென்பட்டால், அந்தக்ஷணமே அதை எடுத்துவிடவேண்டும். தாம் மட்டுமே சுற்றிப் பார்ப்பதல்லாது, உள்ளூர் அயலூர் சகபாடிகளுடனும், விவசாய நிபுணர்களுடனும் அவ்வயலைச் சுற்றிப் பார்த்து "இதில் ஏன் அப்பயிர் உயரத்தில் குன்றியும், இப்பயிர் தூர்கட்டாமலும், அதோ தெரிகிற பயிர் வெளுத்துமிருக்கிறது? இதற்குக் காரணம் என்ன? இதற்கென்ன செய்யலாம்?" என்று அவர்களைப் பரிவுடன் கேட்டு அவர்கள் சொல்லுவதைக் கவனமாயறிந்து அவ்விதம் செய்தல் வேண்டும். அவ்விதம் செய்தும் மற்றதற்கு ஒத்து வராவிடில் அப்பயிரையே எடுத்துவிட வேண்டும். ஒரு நாளேனும் தண்ணீர் ஜாஸ்தியாகக் கட்டக் கூடாது. பிறகு கதிர் வெளி வந்தவுடன் உற்றுப்பார்த்து வேறு ஜாதிப்பயிர், நோயுற்றவைகள், மட்டை, மறு முதலியவைகளை எடுத்துவிடுவதில் கவனம் ஜாஸ்தி யிருத்தல் வேண்டும். இவ்விதம் பாதுகாத்த பயிரை அறுப்பதிலும், காய வைப்பதிலும் மிக சுத்தம் வேண்டுமென்பது அனைவரும் அறிந்ததே. பிறகு நெல்லைச் சல்லடைகளால் மூன்று முறை சலித்தெடுத்தால் ஒரே பருமனுள்ள விதையாகக் கிடைக்கும். இவ்வளவுதான் இதில் கொள்ளும் வேலை. இதைப் படிக்கும் நேயர்கள் இவ்வளவு தூரம் செய்ய நம்மாலாகாதென மனந்தளரக்கூடும். நேயர்களே! மலைக்காதீர்கள். மேலே சொல்லியபடி கலம் அதாவது 24 படியாவது எடுப்பது பெரிதல்ல. இப்பெரிய காரியமல்லாத ஒரு செய்கை 12 ஏகர் நடப்போதுமான விதையாயிற்று.

விதை மாற்றல்:— ஓரிடத்து விதையை மற்றோரிடத்துக்கு மாற்றுவதே. தூர இடங்களிலிருந்து மாற்றுவதானால் கவர்ன்மெண்டாரும், விவசாய சங்கங்களும் செய்ய வேண்டிய வேலை. அங்ஙனம் செய்து கொடுக்க வேணுமாய் நாம் அவர்களிடம் மன்றாடவேண்டும். ஒருவருக்கே இரண்டு மூன்று கிராமங்களிருக்கலாம். அவைகளில் மாற்றிக் கொள்ளலாம். அல்லது பற்பல இடங்களிலுள்ள சிநேகிதருள் மாற்றிக் கொள்ளலாம். எவ்வளவுக்கெவ்வளவு தூரமுள்ள இடங்களிலிருந்து மாற்றப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு சிலாக்கிய மென்பது அனுபவசாலிகளின் அபிப்பிராயமாகும்.

எஸ். வைத்திலிங்கம் பிள்ளை.

---

## PADMINI.

BY

T. S. VAIDYANATHAN.

## பத்மினி.

சற்றேரக்குறைய 600 வருஷங்களுக்கு முன்னே டில்லியில் அலாவுடீன் அரசனும் சித்தூரில் பீமசிங் என்னும் வீரனும் அரசு புரிந்து வந்தார்கள். பீமசிங்குக்கு, மஹா ரூபவதியும், அதி மேதாவியும், ரொம்பவும் தைரியசாலியாயுமுள்ள பத்மினி என்றொரு ராணி இருந்தாள். இவளுடைய அழகைப் பற்றி அலாவுடீன் கேள்விப்படவே, அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று மிக்க அவாக்கொண்டவனானான்.

இவன் இப்படி அவாக்கொண்டால், ராஜபுத்திர ஸ்திரீயாகிய பத்மினி இவனுக்குக் கிடைப்பதெப்படி? அதற்காக அலாவுடீன் பின் வருமாறு யோசிக்கலானான்.

"நமக்கோ பத்மினியை மனைவியாக்கிக் கொள்ளவேண்டுமென்ற ஆசை பெரும் அவலாசையாயிருக்கிறது. இப்பொழுது

அவளை விவாகம் செய்துகொள்ள ஸமீபத்தில் மார்க்கம் ஒன்றும் இருக்கிறதாய்க் காணேம். இருந்தபோதிலும், ஒன்று என் மனதில் படுகிறது. என்னவென்றால், நாம் நேரில் போய் பீமசிங் ராஜ்யத்துச்குப் படையெடுத்துச் சென்று யுத்தம் செய்து, யுத்தகளத்தில் பீமசிங்கைக் கொன்றுவிட்டால், பிற்பாடு பத்மினியை நமக்கு உட்படும்படி செய்வதில் ரொம்பக்கஷ்டம் இராது. இதுதான் ஸரியான யோசனே." என்று இந்தவிதம் ஆலோசித்து, ஒரு பெரிய சைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு சித்தூரை நோக்கி அலாவுடீன் சென்றான். சித்தூரில் மஹா கோரமாய் அநேகம் நாட்கள் யுத்தம் செய்தான். இவன் என்ன யுத்தம் செய்தும் ராஜபுத்திரர்கள் செய்யும், அதி புத்திசாலித்தனமான சண்டையில் அவர்கள் பேரில் இவனுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

கடைசியில், தான் என்ன யுத்தம் செய்தும் பிரயோஜன மில்லை யென்று கண்டு, பீமசிங்கிடம் வந்து "யான் பத்மினியைப் பார்ப்பதற்காக யுத்தம் புரியலானேனே யொழிய மற்றப்படி வேறு விசேஷ மில்லை. பத்மினியைக் காட்டிவிட்டால், நான் பார்த்துவிட்டு ஊர் போய்ச் சேருவேன்" என்று சொன்னான். பீமசிங் இதைக்கேட்டு "அப்படியே செய்யலாம், ஆனால், நீ அவளை நேரில் பார்க்க முடியாது. கண்ணாடியில் அவளுடைய பிரதி பிம்பத்தைப் பார்க்கலாம்," என்று சொன்னான். அலாவுடீன் அதற்கு ஸம்மதித்தான். பிற்பாடு பீமசிங் இன்னுமொரு ஸமாசாரமும் சொன்னான். என்னவென்றால்,"நீவந்து பார்க்கலாம், ஆனால் உன்னுடன்கூட 2 சிப்பாய்களுக்கு மேல் வரக்கூடாது" என்றும் சொன்னான். அலாவுடீன், ராஜபுத்திரர்கள் தங்கள் வார்த்தையைக் காப்பாற்றுவார்கள் என்று எண்ணி, அதற்கும் ஸம்மதித்து, பத்மினியைப் பார்க்க, பீமசிங் அரன்மனைக்குள் போனான். அவன் ராஜபுத்திரர்கள் கோட்டைக்குள்தானிருந்தான். ராஜபுத்திரர் அப்பொழுதே அவனைக் கொன்றிருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அப்படி ஈன ஜாதியர் அல்ல. சொல்லுகிறது ஒன்றும், செய்கிறது மற்றொன்றும் அவர்களிடத்தில் கழுத்தை வெட்டினாலும் கிடையாது. ஆகவே, அவன் கோட்டைக்குள் போனதும், பத்மினியை மறைவில் திரைபோட்டு இருக்கும்படி செய்து, அவளுடைய பிரதி பிம்பத்தைக் கண்ணாடியில் அலாவுடீன் பார்க்கும்படி பீமசிங் ஏற்பாடு செய்தான்,

அலாவுடீனும் கண்ணாடியில் பத்மினியைப் பார்த்தான்.

பிற்பாடு அலாவுடீன் பீமசிங்கைப் பார்த்து "நான் உன்பேச்சை நம்பி உள்ளே வந்தேன். நான் நினைத்த காரியத்தையும் சாதித்துக் கொண்டேன். எப்படி நான் உன்னை நம்பி உன் கோட்டைக்குள் வந்தேனே, அதுபோல நீயும் என்னுடன் வெளியில் கொஞ்சதூரம் நடந்து பேசிவிட்டு, நாம் இரண்டுபேரும் சிநேகிதர்களாகப் பிரிந்துவிடுவோம்" என்றான். பீமசிங் அவன் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தவனாய், கோட்டைக்கு வெளியில் கொஞ்ச தூரம் செல்லவே, மறைவில் ஒளிந்துகொண்டிருந்த, அலாவுடீனுடைய சைன்யங்கள் உடனே வெளிவந்து பீமசிங்கைக் கைதியாய்ப்பிடித்து அவனைத் தங்கள் கூடாரத்துக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அலாவுடீன் பிற்பாடு, பீமசிங்கைப் பார்த்து, "நீ உன் பத்மினியை எனக்கு விவாகம் செய்து கொடுத்தாலொழிய உன் உயிரை வைக்க மாட்டேன்" என்று பயமுறுத்தினன் பீமசிங்குக்கோ, இதைக் கேட்டவுடன் மஹா கோபம் வந்துவிட்டது. ராஜபுத்திரர்களுக்கும் இதைக் கேட்டவுடன் ரொம்பக் கோபம் வந்து

விட்டது. ஆனல், பத்மினி மாத்திரம், தன் நாயகனை எங்கே அலாவுடீன் கொன்று விடப் போகிறனே என்று பயந்தாள். ஆனல், அவள் புத்திசாலி யானதால், ஒரு யோசனை செய் தாள். என்னவென்றல், எப்பொழுது அலா வுடீன் நம்மை ஏமாற்றினனே, நாமும் அவனை மோசம் செய்யவேண்டும் என்று உத்தேசம் கொண்டவளாய், அலாவுடீனுக்கு ஒரு நிருபம் எழுதி யனுப்பினள். அதில் 'நீ என் புருஷனை விடுதலை செய்து விடுவாயானல், நான் உனக்கு அடிமையாய்விடுகிறேன்', என்று கண்டிருந்தது. பின்னும், 'நான் அலா வுடீனுக்கு ராணியாகப் போகிறதால், நான் என்னுடைய தாதிகளையும், என்னுடைய பட் டாடைகளையும், என்னுடைய நகைகளையும், மூடுபல்லக்கில் வைத்து திவ்ய ஊர்வலத் தில் வர அனுமதி கொடுக்க வேண்டும்' என் றும் எழுதியிருந்தாள். அலாவுடீன் இதைக் கேட்டவுடனே, உச்சி குளிர்ந்தவனய், 'சரி அப்படியே வருகிறது,' என்று உத்தரவளித்து விட்டான்.

பிற்பாடு வரிசைக் கிரமமாக முன்னல் பத் மினியின் மூடுபல்லக்குப் புறப்பட்டது. எல் லாரும் பத்மினி அதிலிருக்கிறள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனல், அதற்குள் அதி சூரனை 'பாதால்' என்னும் ஒரு ராஜபுத்திரன் உட்கார்ந்திருந்தான். அந்தப் பல்லக்குக்குப் பின்னல் 70 பல்லக்கு கள் போயின. ஒவ்வொரு பல்லக்கிலும் ஒரு ராஜபுத்திர னிருந்தான். ஒவ்வொரு பல்லக் கையும், 6 பேர்கள் கூலிகள் போல் தூக்கிக் கொண்டு போனர்கள். ஆனல், ஒவ்வொரு வனும் பெரிய தலைவீரன். தங்களுடைய கத்தி, கேடயம் முதலியவற்றைத் தங்கள் தங் கள் பல்லக்குக்குள் வைத்திருந்தார்கள்.

பிற்பாடு இவர்கள் எல்லோரையும், நடத் திக்கொண்டுபோன பத்மினியின் மாமனை 'கோரே' என்பவன் அலாவுடீனிடம் போய், 'பத்மினி கடைசித் தரம் தன்னுடைய பீமசிங் குடன் பேச விரும்புகிறள், உத்திரவுகொடுக்க வேண்டும்' என்றன். 'சரி அதோ அந்தக் கூடாரத்தில் பீமசிங் இருக்கிறன். பத்மினி போய் பார்க்கலாம். ஆனல், அரை நாழி கைக்குமேல் அங்கே தங்கக்கூடாது,' என்று அலாவுடீன் சொல்லவே, முன்னல் பத்மினி பல்லக்கு என்று சொல்லப்பட்ட பாதாலின் பல்லக்கு பீமசிங்கின் கூடாரத்துக்குச் சென் றது. அங்கே போய், பாதால் பீமசிங்குக்குத் தான் கொண்டுவந்திருந்த கவசம், கத்தி, ஈட்டி முதலானவைகளைக் கொடுத்தான். கொடுத்தவுடன் பீமசிங் அவைகளை அணிந்து கொண்டு வெளியே வரவே ராஜபுத்திர சைன் யம் பல்லக்கிலிருந்து கிழேகுதித்து, அப்கானி யர்களாகிய அலாவுடீனுடைய சைன்யத்தின் பேரில் விழுந்து, அவர்களைக் கண்டம், துண் டம், சின்னம்பின்னமாய்ச் செய்து கடூரமான யுத்தம் செய்யவே, ஆப்கானியர் ஓட்டம் எடுத் தார்கள். அலாவுடீனும், பிழைத்தேன், இனி மேல் இங்கு வரக்கூடாது என்று தன் நாடு போய்ச் சேர்ந்தான். பீமசிங்கும் அரண் மனைக்கு சௌக்கியமாய் வந்து சேர்ந்தான். பத்மினியும் தான்நினைத்த எண்ணத்தை நிறைவேற்றினள்.

ஆகையால், ராஜபுத்திருக்கு உண்டான மானமும், அவர்களுடைய புத்திகூர்மையும், பிராணன் போகும் போலிருந்தாலும், மானத் தைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையும் மற்றெந்த தேசத்தாருக்கும் எக்காலத்திலும் வராது என்பதற்கு இச்சிறு கதையை ஒரு திருஷ்டாந்தமாக எடுத்து எழுதலா னேன். தாத்பரியம் என்ன ஆயிற்றென்றல், கேவலம் ஒரு ஸ்திரீயினுடைய தைரியத்தி னலும், புத்திகூர்மையினலும், ராஜபுத்திரர் மானமும், ராஜ்யமும் காப்பாற்றப்பட்டது.

டி. எஸ். வைத்தியநாதன்.

## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### SINGLE PLANTING OF PADDY.

### ஒற்றை நாற்று நடவு.

தென்னாற்காடு ஜில்லா விவஸாயத் தொழில் செய்யும் மிராசுதாரும் விவஸாய சங்கமெம்பருமாகிய ஒருவருக்கும், விவஸாயத் தொழில் செய்யும் கிராம வாஸியாகிய ரெட்டியாருக்கும் ஒற்றை நாற்றுப் பயிர் செய்யும் விஷயமாய் நடந்த சம்பாஷணை:

மெம்பர்—ஐயா ரெட்டியாரே, சாகுபடிக்காகத் தழைபோட்டுத் தயார்செய்து வைத்திருக்கும் இந்த நஞ்சை நிலம் உம்முடையதா?

ரெட்டியார்—ஆமாம், ஏன்?

மெம்பர்—இந்த நிலத்தில் என்ன செய்யப் போகிறீர்?

ரெட்டியார்—நெல் விதைக்கப் போகிறேன்.

மெம்பர்—(1) இந்த நிலம் எவ்வளவு விஸ்தீர்ணம்? (2) இதற்கு எவ்வளவு நெல் விதைக்கப் போகிறீர்? (3) நாற்று விட்டால் எவ்வளவு விடுவீர்?

ரெட்டியார்—(1) இது ஒரு காணி; (2) இதற்குக் கல நெல் அதாவது, 30 பட்டணம் படி விதைக்கப் போகிறேன்; (3) நாற்று விட்டால், 2 கல. அதாவது, 60 பட்டணம் படி செல்லும்.

மெம்பர்—ரெட்டியாரே, நான் சொல்லும் எனது அனுபவத்தை நம்பி அந்தப்படிச் செய்தீரானால், உமக்கு நல்ல லாபமும் ஸௌக்கியமு மிருக்கிறது. அந்தப்படிச் செய்கிறீரா?

ரெட்டியார்—லாப மிருந்தால் செய்கிறேன்.

மெம்பர்—இந்த நிலத்தில் நெல் விதைப்பதை நிறுத்தி ஒரு தனியில், அதாவது, 8 ஸெண்டு நிலத்தில், 8 படி நெல்மட்டில் நாற்றாக விட்டு 30 நாளைக்குள் ஒவ்வொரு பயிராக வழக்கம்போல் இடம் விட்டு நட்டுவிடும்.

ரெட்டியார்—என்ன ஐயா, நாங்கள் வழக்கமாய் 30 படி நெல் விதைகாலாக விதைத்து களை பறிக்கக் கலப்பை போட்டால், சில வருஷத்தில் பயிர் கரைந்து, காணமற்போகிறதே, அது எப்படி 7, 8 படி நெல் விதை ஒரு காணிக்குப் போதும்?

மெம்பர்—அது உண்மைதான், அதற்குக் காரணம் சொல்லுகிறேன். ஒரு காணிநிலத்தில் 30 படி நெல்லை விதைத்தால், அந்த நிலம் முழுவதையும் பரம்படித்து நாற்றுவிடும் நிலத்தைப்போலல்லாமல் மேடு பள்ளமாக இருப்பதால், பள்ள நிலத்தில் விழுந்த முளைநெல் அழுகியும், மேட்டில் விழுந்தது காய்ந்து முளையாமல் போயும், சில நெல் மிதிபடாமலிருக்குந் தழையின் மேல் விழுந்து முளையாமலும் அந்தநிலத்தில் விதைப்பதற்குத் தண்ணீர் நிறுத்தி விதைத்தபின் ஜலம் வடியவிடுங் காலத்தில் நெல் விதையை ஜலத்தோடு அடித்துக் கொண்டு போயும் இப்படிக்கு நெல் விதைக்கும்போதே நஷ்டமாகிறது. அதாவது, நாற்று விடவேண்டுமானால், அவைகள் ஒன்றேடொன்று ஸமீபத்தில் முளைத்து அதன் போஷணைகளின் அனுகூலத்தால் பயிர் கெடாமல் நாற்றுப் பலிதமாகும். அப்படிக்கில்லாமல், ஒரு காணியில் 30 படி நெல் விதைப்பதால், அந்த முளைப் பயிருக்கு இடைவெளி அதிகப்பட்டு அதில் களை முளைத்துப் பயிரையும் மூடி சாறல், காற்றிருள், நோய்கள் கண்டு பயிர் கரைந்தும் கெட்டுப்போய், இப்படிப் பலவித இடைஞ்சல்களினால் பயிர் நஷ்டம்

டைந்து போகிறதால், 30 படி ஒரு காணிக்கு நடாமலும் போகிறது.

ரெட்டியார்—இப்படி விதைத்தால் தான் பயிர் நஷ்டமாய்ப் போகிறதென்கிறீரே, நாங்கள் நாற்றுவிட்டால், கொஞ்ச நிலத்தில் அடர்த்தியாய் விட்டு வைக்கிறோமே. அந்த நாற்று ஏன் 60 படி நெல் நாற்று ஒரு காணிக்குக் காணமலும் போகிறது?

மெம்பர் — அதற்குக் காரணம் சொல்லுகிறேன். நீங்கள் விதை நெல்லை நாற்றங்காலில் அளவிற்கு மிஞ்சி அதிக அடர்த்தியாக ஒன்றின்மேல் ஒன்றாக நெல் ஏறிக்கொண்டிருக்கும்படி விதைத்து, அந்த நெல் முளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு செழிப்பாய் வளர்வதற் கில்லாமல் நெருக்கத்தால் சிறுமை யடைந்தும், அந்தப் பயிர் சீக்கிரத்தில் வளரவொட்டாமலும், தடிக்கவொட்டாமலும், நாற்றங் காலைக் காயப்போட்டும் அந்தப் பயிர் 40, 50 நாள் வரையில் வைத்து அதைப் பிடுங்கி 10,15 பயிர் சேர்த்து நடுவதால் ஒருகாணிக்கு 60 படி நெல் பயிர் காணமல் போகிறது.

ரெட்டியார் — நாங்கள் வழக்கமாய் 10,15 பயிருக்குமேல் பிடித்து நட்டு அந்தப் பயிரிலேயே 7, 8 கதிர் தானே காணுகிறது. ஒற்றைப் பயிராக நட்டால், ஒன்று இரண்டு கதிர் தானே காணும்.

மெம்பர் — அப்படியல்ல, ஒற்றைப் பயிர் நடும் வழக்கம் நமக்கு ஏற்கனேயாயு மிருப்பதை நாம் கவனிக்கவில்லை. விதைத்த பயிரைக் கலப்பை போடும்போது ஒன்று இரண்டு பயிர்தான் சேர்த்து நடுகிற வழக்கம். அதில் 10, 15 கதிர் காணுகிறதைப் பார்த்திருக்கிறோம்; அடர்ந்த நாற்று விடுவதில்லை. நாற்றங்காலிலேயே அந்தப் பயிர் தடித்து வளர ஆரம்பிக்கும். பருவ காலத்தை யெல்லாம் சிறுமையோடு வளர்த்து அதைப் பிடுங்கும் போது கழிகொண்டு அடித்துக் கசக்கி அதை நடும்போதும் தனித் தனியாகப் பயிர் வேறுன்றி செழித்து வருவதற் கெல்லாம் 10, 15 பயிர்களைச் சேர்த்து நட்டுவிடுவதால், அதன் வேர்கள் ஒன்றோடொன்று பிடித்துக்கொண்டு மட்கியும் கெட்டுப்போய் பூமியின் கொழுமையால் 10, 15 நாள் கழித்து பசுமை கண்டு சிறுமையோடு வளர்ந்து மழையின்உதவியாலும் பூமியின் குணத்தாலும் வளர்ந்து கதிர் காணுகிறது. இந்த ஒற்றை நாற்றுக்காகத் தயார் செய்யும்நாற்றங்கால் பயிரானது ஜாஸ்தியான அடர்த்தி யில்லாமலும், விதைகால்போல் இடைவெளியில் பயிர் நஷ்ட மில்லாமலும் முளைத்து இடைஞ்ச லில்லாமல் கொழுமையோடு வளருகிறது. அந்தப் பயிர் 25 நாளைக் கெல்லாம் நடத் தகுந்த வளர்ச்சி யடைகிறது, அதைப் பிடுங்கிக் கழியில் அடித்துக் கசக்காமல் மண்ணை அலம்பிவிட்டு ஒவ்வொரு பயிராக நட்டால், அந்தப்பயிர் நட்ட தினம் முதல் வளரவும் பக்ககிளைகள் கிளைக்கவும் ஆரம்பித்து நாளுக்கு நாள் வளர்ந்து 10, 15 நாளைக் கெல்லாம் 15, 20 பயிர்கள் செழித்து வளர்கின்றன. இந்தப் பயிர் செழிப்பாய்த் துவக்கம் முதல் சிறுமை யில்லாமல் வளர்வதால், ஒவ்வொரு பயிரும் கதிர்காணுகிறது. அடர்ந்த நாற்றுப்பயிர்கள் கதிர்காணும்போது பொந்தை கட்டிவிட்டதென்று சில கதிர்கள் மாத்திரம் விட்டு மற்றப் பயிர்கள் கட்டையாக நின்றுவிடுகின்றன.

ரெட்டியார்—ஒற்றை ஒற்றையாக நடுவதற்கு ஜாஸ்தியான ஆள்கள் பிடிக்கும். அதுவும் பழக்கமில்லை, அப்படிச் செய்ய முடியாது.

மெம்பர் — அப்படியல்ல, நீர் ஒற்றை நடவு நட்டுப் பாரும். வழக்கமாய் ஒரு காணி நட—

வேணுமானல், 15 ஆள்கள் செல்லும். இந்த ஒற்றை நாற்று நடுவதற்குக்கூலி ஆட்களுக்குச் சுலபமாயும் கஷ்டமில்லாமலும் இருப்பதால், 10 ஆள்களுக்குமேல் செல்லாது.

ரெட்டியார்—விதைகால் சாகுபடியும் ஒற்றை நடவுபோல்தானே இருக்கிறது. அந்தப்படியே விதைத்துவிடுகிறேன்.

மெம்பர்—அப்படி விதைப்பதால் உண்டாகும் விதைநஷ்டங்களை முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அதைப் பாராவிட்டாலும் அந்தப் பூரா நிலத்திலும் விதைத்தது முதல் முளைக்குங் களைகள் பிடுங்குஞ் செலவு அந்தப் பயிரைக் கலப்பை போடுவ தென்று அடர்ந்த பயிரைப்பிடுங்கி இல்லாத இடத்தில் நடுவதின் செலவுகளும் நாற்று நடும் செலவைவிட 3 மடங்கு அதிகப்படுகிறது. அது தவிர அந்தப் பயிர் வளர 30 நாளைக்கு ஒருகாணி நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாப்பதைவிட 8 ஸெண்டு நிலத்தில் வேலை செய்து பாதுகாப்பது சுலபம். அந்த ஒரு காணி நிலத்தில் எருதழை போட்டு விதைத்த பயிரும், முளைத்த களைகளும் ஒரு மாதத்தில அந்த எருவின் சாரத்தை உட்கொண்டு குறைத்து விடுகிறது. இதனல் விதைத்துப் பயிர் செய்வதைவிட ஒற்றை நாற்ருக விட்டுநடுவதே குறைந்த செலவும், உயர்ந்த வருமானமும் உள்ளதாக இருப்பதைக் காணலாம்.

ரெட்டியார்—நாற்றுவிடும் 8 ஸெண்டு நிலத்திற்குக் களைபிடுங்க வேண்டாமோ?

மெம்பர்—நாற்று நிலத்தை ஸமப்படுத்திக் கொஞ்சம் விதைகாலைவிட அடர்ந்த பயிராக விடுவதால், ஜாஸ்தியாகக் களைகளும் முளையா. கொஞ்சம் முளைத்திருந்தாலும்அதை எடுக்க வேணும் என்று தோன்றினல் எடுக்கலாம். இல்லாவிட்டால் அப்படியே நாற்றுப் பிடுங்கும்போது அந்தக் களைகள் கழிந்துவிடும்.

ரெட்டியார் — அப்படியானல் அந்த விதை நெல்லைக் கொஞ்சம் காட்டினல் பார்க்கிறேன்.

மெம்பர்—வேறு நெல் கிடையாது. நாம் சாகுபடி செய்யும் கருடன் சம்பா, சடைச் சம்பா, பெருஞ் சம்பா முதலியவைகள்தான் விதைக்கிறது.

ரெட்டியார்—அது எப்படி? இத்தனை நாளாய் ஏன் இந்தமாதிரி செய்யவில்லை? அது வேறு நெல்லாகத்தான் இருக்கும்.

மெம்பர்—அப்படி வேறு நெல்லாகயிருந்தால், நான் அதைச் சொல்லுகிறேன்; இதே நெல்லுதான்.

ரெட்டியார் — இந்த நெல்லுகளை யாராவது ஒற்றை நாற்ருக விட்டு நட்டுப் பார்த்திருக்கிருர்களா?

மெம்பர் — ஆம், நான் என்னுடைய பண்ணையில் சென்ற வருஷத்தில் 5 ஏக்கருக்கு 20 படி நெல் நாற்றுவிட்டு நட 225 கலம் நெல் கிடைத்தது.

ரெட்டியார் — அப்படியிருந்தால் உங்கள் நிலம் நல்ல கொழுமையுள்ளதா யிருக்கும். அதிமாகத் தழைபோட்டுப் பார்த்திருப்பீர்கள்.

மெம்பர்—அப்படி அவசியமே யில்லை. என் பண்ணையில் 5 ஏக்கர் நிலங்களில் நல்ல மணல் பாங்கு நிலம், தண்ணீர் அடிக்கக்கூடிய சவர்கால் நிலம், கீழ் கவிச்சல் உள்ள நிலம், எல்லாவித பூமியிலும் நடப்பட்டு மாதிரி பார்த்திருக்கிறது. எந்த நிலத்திலும் அவைகள் பின்வாங்கவிலலை. இப்படிச் செழித்து வருவதற்குக் காரணம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

ரெட்டியார்—இந்த ஒற்றை நாற்றுப் பயிர் தண்ணீர் அடிக்கும் வெள்ளச் சாய்கால் நிலத்தில் நட்டால், இந்த ஒற்றைப் பயிரையும்

அடித்துக்கொண்டுபோய்விடும். அதில் செய்ய முடியாது.

மெம்பர்—அடிபட்ட நிலத்தில்தான் அவசியம் இந்த ஒற்றை நாற்றை நடவேண்டும். அந்த நிலத்தில் அடர்ந்த நாற்று நட்டால், அவைகள் வேரூன்றி நிலைத்து நிற்க 15, 20 நாள் செல்லும். அதற்குள் வெள்ளமடித்தால், அந்த நடவுகள் சாய்ந்து நஷ்டமடைந்துவிடும். இந்த ஒற்றை நாற்றுகள் நட்டதினமுதல் நிலைத்து வேரூன்றி கிளைக்கத்தொடங்குவதால், அந்தப் பயிரை வெள்ளமடித்துக் கெடுதி செய்யாது.

ரெட்டியார் — இந்தமாதிரி செய்வதென்று உங்களுக்கு யார் சொல்லிச் செய்தது?

மெம்பர் — நான் மஞ்சகுப்பத்தில் கலெக்டர் துரையவர்கள் கச்சேரியில் கூடும் டிஸ்ட்ரிக்ட் விவஸாய சங்கத்தில்மெம்பராக யிருக்கிறேன். அந்தச் சங்கத்தில் இதன் நன்மையை பிரஸ்தாபித்ததில் தெரிந்தும், பாலூர் கவர்ன்மெட்பண்ணை மானேஜர் சுப்பிரமணிய ஐயரவர்களால் தெளிவாய்ப் போதிக்கப்பட்டும், ஷை பண்ணையில் எல்லா நஞ்சைநிலங்களும் ஒற்றையாக நட்டிருந்து அதன் உற்பத்தியைப் பார்த்தும் தெரிந்து கொண்டேன்.

செட்டியார் —ஸரி, அப்படியானல் நானும் நேரில் பாக்கவேணும். எங்கள் ஊரிலும் எல்லாரும் நட்டால்தான் நானும் நடுவேன். அப்படிக்கில்லாவிட்டால் முடியாது.

மெம்பர் — அப்படியானல் எங்கள் ஊரில் என் பண்ணையிலும் இதைப் பார்த்த குடித்தனக்காரர்களும் நட்டிருக்கிருர்கள். அதைப் பார்த்துத் தெரிந்துகொண்டு செய்யலாம்.

ரெட்டியார்—எனக்கு இப்பொழுது ஒழிவு இல்லை. யாராவது முந்திப் பார்த்துவிட்டு வந்து நடட்டும், பார்க்கிறேன்.

மெம்பர்—இதைப்போல் எல்லாரும்சொன்ஞல், யார்தான் தைரியமாய்ச் செய்கிறது? உம்மைப்போல் பெரிய பட்டாதார்களும் தெரிந்தவர்களுந்தானே அதைப் பார்த்துச் செய்து மற்றவர்களுக்குக் காண்பிக்கவேணும்.

ரெட்டியார்—உங்கள் ஊரில் உங்களைப் பார்த்து எல்லாரும் இந்தப்படிச் செய்கிருர்களா?

மெம்பர்—ஆம், இதைப் பார்த்து எங்கள் ஊரிலும் பக்கத்து கிராமத்திலும் இந்தப்படி ஒற்றை நாற்றுப் பயிர் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

ரெட்டியார்—இந்தப்படி நடுவதால் என்ன லாபங் கிடைக்கிறது?

மெம்பர்—விதை நெல்லில் மாத்திரம் தவருமல் நாற்ருக விடுவதில் ஏக்கர் 1-க்கு 4, 5 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். பிறகு விளைச்சலும் காலத்திற்குத் தகுந்தபடி கிடைக்கும். விதைகால் விதைப்பதிலும் களை பறிப்பது கலப்பைபோடுவது முதலிய கூலிச்செலவுகளினுலும் 4, 5 ரூபாய்க்கு மேற்பட்டே லாபமிருக்கிறது. வழக்கமாய் நட்ட நாற்று அறுவடைக்கு 20 நாளைக்குமுன் அறுவடையாகும். தடித்த பயிரானதால் கொஞ்சம் காய்ச்சலும் தாங்கும். நோயால் பீடிக்கப்படாது.

ரெட்டியார்—நீங்கள் சொன்னது எனக்கு இன்னும் ஸந்தேகமா யிருக்கிறது. நான் யோஜனைசெய்து எங்கள் குலதெய்வ கோவில் பூசாரியைக் கணிகேட்டு, புதிதாகயிருப்பதால், அடுத்தவருஷமாவது கொஞ்சம் பார்க்கிறேன்.

---

## PRESERVING HEALTH.
## சுகம் பேணும் முறைகள்.

நமது இந்திய நாடு முன்காலங்களில் மிகச் செல்வமுடையதா யிருந்ததாகவும், அதனல் அன்னிய தேசத்து ராஜாக்கள் படையெடுத்து வரக் காரணமாயிற்றென்றும், மாரிஸ் எழுதிய இந்திய சரித்ரத்தில் முதல் பக்கம் முதல் வரியில் காணப்படுகிறது. இந்தச் செல்வத்துக்குக் காரணம் இந்துக்கள் தேகஸம்ரக்ஷணை விஷயத்தில் எடுத்துக்கொண்ட முன்கருத்துக்களே. தேக ஆரோக்கியம் இருந்தால் மட்டிலுமே பல தொழில்கள் அபிவிருத்தியாகும்; தொழிலாளிகளுக்கும் வேலை செய்து பணம் சம்பாதிக்க முடியும். ஒரு வீட்டில் கைத்தொழில் செய்து சம்பாதிக்கிற 6 பேர்

களில் 4 பேர் நோயாளிகளானால், அவர்கள் வரும்படி குறைந்துபோகும். 100 வீடுகளுள்ள ஒரு ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் 4 அல்லது 5 பேர்நோயாளிகளாகி சம்பாதிக்கச் சக்தியற்றவர்களானால், அந்த ஊரார் வறுமையடைவார்கள் என்பதற்குச்சந்தேகமேயில்லை. நம் முன்னோர்கள் சுகாதார விஷயத்தில் கண்ணும் கருத்துமா யிருந்தனர் என்பதற்குப் பின்வரும் வசனங்கள் அத்தாட்சியாகும்.

நோய்க்கிடம் கொடேல்.
நோயற்ற வாழ்வே வாழ்வு
கந்தை யானாலும் கசக்கிக் கட்டு.
கூழானாலும் குளித்துக் குடி.

அகஸ்தியர் எழுதிய ஆயுள்வேத சாஸ்திரத்தில் முதன்முதல் பிணிகளைத் தடுக்கும் முறைகளைச் சொல்லிவிட்டுத் தான் பிறகு சிகித்சை விவரத்தைக் கூறுகிறார். பகலுறக்கம், பகற்பொழுதை சிற்றின்பத்தில் கழித்தல், பசியில்லாமல் உண்ணுதல், வெயிலிலும் மழையிலும் அலைதல், மதுபானஞ் செய்து இராக் காலங்களில் திரிதல், முதலியவைகளை விலக்க வேண்டுமென்றும், இவைகளை விலக்கினால், எமன் வரமாட்டான் என்றும் சொல்லியிருக்கிறார். இவ்வாறு விலக்கப்பட்டவைகளை விட்டும், அனுஷ்டிக்கத் தக்கவைகளை அனுஷ்டித்தும் வந்ததினால் நம் முன்னோர்கள் சுக சரீரிகளா யிருந்தார்கள். இக்காலத்தவர்கள் அம்முறைகளை முற்றிலும் விட்டுவிட்டார்கள். அதற்குப் பல காரணங்களுண்டு. முக்யமானது படிப்பின்மை. ஆகையால், ஜனங்களுக்குச் சுகாதார விஷயத்தில் அறிவை உண்டாக்குவது, நல்லறிவும் தேசாபிமானமுமுடைய கற்றோர்களது வேலையாக ஏற்படுகிறது. "சுதேச மித்திரன்" போன்ற பத்திரிகைகள் மூலமாய் ஸாமான்ய ஜனங்களுக்குச் சுகாதார விஷயத்தில் அறிவுண்டாகச்செய்யலாம். துண்டுப்பத்திரிகைகள் மூலமாகவும்,பிரஸங்கங்கள் நடத்தியும் சுகாதார முறைகளை ஜனங்களுக்குப் போதிக்கலாம். நமது கவர்ன்மெண்டார் ஜனங்களுடையதேகரக்ஷணைக்காக ஸானிடெரி டிபார்டுமெண்ட், முனிஸிபாலிடி, லோகல் போர்ட், யூனியன் மூலமாகப் பல ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலான தேசங்களில் வருஷத்தில் 1000-த்துக்கு 20-க்குக் குறைவாகத்தான் சாகிறார்கள். இந்தியாவிலோ வருஷத்தில் 1000-த்துக்கு 40-க்கு மேல் சாகிறார்கள். ருஷியா தலை நகரமாகிய ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 1000-த்துக்கு 24 பேர் சாகிறார்கள். ஐரோப்பாவில் உள்ள பட்டணங்களைப் பார்க்கிலும் இந்த ஊரில் சுகாதார ஏற்பாடு மிகக் குறைவு. நமது இந்தியப்பட்டண பரிஷ்காரமோ ருஷியா நகரங்களை விட மிகக்குறைவா யிருக்கிறது.

தேக ஆரோக்கியத்துக்கு முக்யமாய் வேண்டியவை நான்கு (1) நல்ல ஜலம் (2) சுத்தமான காற்று, (3) ஜீரணிக்கக்கூடிய ஆகாரம் (4) காற்றோட்ட முடையதும் ஈரமில்லாததுமான கட்டிடங்கள். இவற்றுள் முக்கியமானது நல்ல ஜலம். குடிப்பதற்கும், சமையல்செய்வதற்கும், அழுக்கு வேஷ்டிகள் தோய்ப்பதற்கும், வீடுகள்ஓடைகள் முதலியன சுத்தமாவதற்கும், கால்நடைகள் உபயோகத்திற்கும் தண்ணீர் மிகவும் அவசியம்.

நமது அஷ்டாங்க ஹிருதய சாஸ்திரத்தில் குடிக்கிற தண்ணீரில் குளிக்கவும், குளிக்கிற தண்ணீரில் வேஷ்டி தோய்க்கவும், கால்நடைகளைக் குளிப்பாட்டவும், அழுக்கு வஸ்திரங்களைத் தோய்க்கவும், உபயோகிக்கும் தண்ணீரைக் குடிக்கவும் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது ஜனங்கள் இவைகளை யொன்றும் கவனிக்கிறதில்லை. ஆறு குளக்கரைகளில் மலமூத்திர விஸர்ஜனம் செய்கிறார்கள். ஆடுமாடுகளைக் குளிப்பாட்டும் தண்ணீரில் குளிக்கிறார்கள்; அந்நீரைக் குடிக்கிறார்கள். குஷ்டம் முதலிய தொத்துவியாதியஸ்தர்கள் குளிக்கும் தண்ணீரிலும் குளிக்கிறார்கள், குடிக்கிறார்கள். அழுக்குத் துணிகளை நனைத்தும், பாத்திரங்களைச் சுத்திசெய்தும் அசுத்தப்படுத்திய ஜலத்தையும் ஸ்நானபானாதிகளுக்கு உபயோகிக்கிறார்கள். இத்தீய வழக்கங்களால் வரும் பெருங் கெடுதல்களை அவர்கள் சற்றும் கவனிக்கிறதில்லை. வயிறிளக்கம், வாந்திபேதி, வயிற்றுளைச்சல், இரைகடி, ஜன்னிபாதஜுரம் சிரங்கு, புழுக்கடி முதலிய நோய்கள் உண்டாவதற்குப் பிரதான காரணம் முற்கூறிய வழக்கங்களே. இவைகளைத் தடுக்க அரசாங்கத்தார் எவ்வளவு பிரயாஸைப்பட்டும் பிரயோஜன முண்டாகிறதில்லை. தென் திருவாங்கூரிலும், திருநெல்வேலி, மதுரை முதலிய

ஜில்லாக்களிலும் உள்ள குடியானவர்கள் மேலே சொன்ன துர்வழக்கங்களைக் கைக் கொண்டிருப்பதினால் வாந்திபேதியால் இந் நாடுகளில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வருஷந்தோறும் மரண மடைகிறார்கள். இந் நாசத்துக்கெல்லாம்காரணம் அசுத்த ஜலமே. ஆகையால், நாம் குடிக்கவும் குளிக்கவும்சுத்த ஜலத்தையே உபயோகப்படுத்தவேண்டும்.

சுத்தஜலமானது ருசியில்லாமலும், வாஸனையில்லாமலும், மண் சேராமலும் தெளிவாயிருக்கும். அதை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நிறைத்து அச்சடித்த காகிதத்தின்மேல் வைத்தால், எழுத்துக்கள் தெளிவாய்க் காணப்படும். நல்ல ஜலத்தை நாம் பலவிதமாகச் சேகரிக்கலாம்.

1. மழை ஜலத்தைப் பெரிய குளங்களில் சேர்த்துவைத்து வடிகட்டி ஜனங்களின் உபகாரத்துக்காகக் குழாய் வழியாய்க் கொண்டுபோகிறார்கள். ஆனால், மழை விழப்பட்ட தரை சுத்தமாயிருக்கவேண்டும். அந்தத் தரையிலும் அடுத்த ஸ்தலங்களிலும் மல மூத்திர விஸர்ஜனம் செய்யக்கூடாது. சேகரித்த மழை ஜலத்தைப் பிற்பாடு அழுக்கடையாமலும் காப்பாற்றவேண்டும்.

2. பனிக்கட்டி உருகி வரும் ஜலமும் சுவையுடையதா யிராது அதை உட்கொள்வதினால் தகனசக்தி குறையும். இது விசேஷமாய்ப் பெரிய மலைகளிலிருந்து உண்டாகி வருவதால் அசுத்த மாவதற்கு இடமில்லை.

3. ஊற்று ஜலம்—இது அதிக சிரேஷ்டமானது ஆனால் ஊற்றின் நாலு பக்கங்களிலும் ஜனங்கள் மல விஸர்ஜனம் செய்யாமலும் வேறு விதமாக மலினப்படுத்தாமலும் இருக்க வேண்டும் மழைகாலத்தில் சுற்றுப்பக்கங்களிலுள்ள அழுக்குக ளெல்லாம் ஊற்றில் வந்து விழுந்து தண்ணீரைக் கெடுத்துவிடுகின்றன. அப்பேர்ப்பட்ட நீரைக் குடித்தால், பலவித நோய்கள் உண்டாவது நிச்சயம்.

4. கிணற்றுஜலம்—மேடுகளில் உள்ள கிணற்று ஜலம் மிகச்சிரேஷ்டமானது. கிணற்றிலிருந்து 50 அடி சுற்றுப் பக்கங்களில் மூத்திரக் குழி, கக்கூசு, சுடுகாடு முதலியன இருத்தல் கூடாது. மழை ஜலம் விழாமல் சுற்றுச் சுவர் வளர்த்தும், பலமான தளவரிசை போட்டும் கிணற்றை ரக்ஷிக்கவேண்டும். சிந்தின ஜலம் கிணற்றுக்குள்ளே பாயாமல் சுற்றிலும் ஓடைகள் தோண்டி அதற்குப் போக்கு விடவேண்டும். கிணற்றருகில் குளிக்கவும், பல் விளக்கவும், வேஷ்டிதோய்க்கவும், பாத்திரம் தேய்க்கவும் கூடாது. குழியான ஸ்தலங்களிலுள்ள கிணற்று நீரையும் வயல் மத்தியிலுள்ள கிணற்று நீரையும் உபயோகப்படுத்தக் கூடாது. மழை காலத்தில் பூமியிலுள்ள எல்லா அசுத்தப் பொருள்களும், பள்ளமான கிணறுகளில் வந்து சேருகின்றன. கீழ்ஜாதி ஜனங்கள் ஸாதாரணமாக இம்மாதிரி குழிக் கிணற்று நீரை உபயோகித்து வருவதால் பலவித குடல் வியாதிகளால் வருந்துவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்

5 ஆற்று ஜலம்—நம்நாட்டார் ஆற்று ஜலத்தையே முக்யமாய்க் குடிப்பதற்கும் குளிப்பதற்கும்உபயோகப்படுத்துகிறார்கள். கங்கை, யமுனை, கோதாவரி, பிரம்மபுத்திரை, துங்கபத்திரை முதலான பெரிய ஆறுகள் மிக ஆழமுடையனவாகவும் விசாலமாகவும் இருப்பதாலும், இருகரையிலும் ஜலம் புரண்டு ஓடுவதாலும் அந்நதி ஜலங்களில் சேர்ந்த விஷப் பொருள்களை ஜலத்தில் உள்ள பிராணவாயுவானது எரித்துவிடுகிறது. ஆனால், சிறு நதிகளில் உள்ள ஜலமானது அப்படிச் சுத்தமாகிறதில்லை. வயல்களிலுள்ள கழிவு ஜலமும், கிராமங்களிலுள்ள ஓடை ஜலமும், சிற்றாறுகளில் வந்து சேருகின்றன. கரையின் இரு பக்கங்களும் கக்கூசாக உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றன. கரையில் ஏராளமாக சுடுகாடுகளும் உண்டு. ஆடு மாடுகளையும் குளிப்பாட்டுகிறார்கள். இம்மாதிரி பல வழிகளால் மலின மடைந்த ஆற்று ஜலத்தைக் குடிப்பவர்கள் எல்லாம் தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு ஆயிரக் கணக்காகச் சாகிறார்கள். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி முதலியஜில்லாக்களில் வருஷந்தோறும் வாந்திபேதியால் அனேக ஜனங்கள் மரணமடைகிறார்கள். காரணம் அசுத்தமான ஆற்று ஜலத்தை உபயோகிப்பதே.

6. குளத்து ஜலம்—குளத்து ஜலமும்பல இடங்களில் ஸ்நானபானாதிகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. மழை காலத்தில் பக்கத்து மைதானங்களிலுள்ள தண்ணீ ரெல்லாம் குளங்களில் பாய்கின்றன. மலம், மூத்திரம்.

முதலிய அழுக்குகள் சேர்ந்த பொருள்களும் ஜலத்தோடு சேர்ந்து வரும். ஆகையால், குளத்து நீரைக் குடிக்கவும் குளிக்கவும் உபயோகப் படுத்துவது சிரேஷ்டமல்ல. மேடுகளிலுள்ள ஊற்று ஜலத்தையும், 50 அடிக்கு மேல் ஆழமுள்ளகிணற்று ஜலத்தையும் குடிப்பதால் ஒரு தீங்குமில்லை. பள்ளங்களிலும் வயல் மத்தியிலும் உள்ள கிணற்று ஜலத்தையும் சேகரித்துவைத்த மழை ஜலத்தையும், ஆறு குளங்களிலுள்ள ஜலத்தையும் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் உபயோகிப்பது பெரும் பிசகு.

ஆனல், ஊற்றுகளும், நல்ல கிணறுகளும் இல்லாத இடங்களில் இரும்புக் குழாய்களைப் பூமியி லிறக்கி, குழாய் வழியாகத் தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்தலாம். இம்மாதிரியான குழாய்க் கிணறுகளுக்கு 100 ரூபாய்க்கு மேல் செலவில்லை. வாந்திபேதி யுண்டாகும் பொழுது ஆயிரக் கணக்காகப் பணச்செலவு செய்து பேய்க் கொடை கொடுக்கும் கிராமவாஸிகளுக்கு இந்தச்செலவு பெரிதானதல்ல. இதனல் உண்டாகக் கூடிய பலனே அளவற்றது.

குளத்து ஜலத்தை அல்லது ஆற்று ஜலத்தை உபயோகிக்க வேண்டியதாக வந்தால், அதை நல்ல சுத்தமான துணியால் வடிகட்டி சீனக்காரப்பொடி அரைக்கால் ரூபாயெடை சேர்த்துச் சிறிது நேரம் வைக்கவேண்டும். அப்பொழுது அந்நீரிலுள்ள மலினங்களெல்லாம் அடியில் தங்கிவிடும். பிறகு அதை நன்றாய்க் காய்ச்சி உபயோகப்படுத்த வேண்டும்.

வடிகட்டுதல்— இதற்கு உபயோகமுள்ள பல வடிகட்டு யந்திரங்கள் உண்டு. அவைகளை ஏழைஜனங்கள் வாங்கி உபயோகப்படுத்த முடியாது ஆனல் துவாரமுள்ள இரண்டு சட்டிகளை அடுக்காய் வைத்து மேல் சட்டியில் மணலும் அதற்கடுத்ததில் கரியும் மணலும் போட்டு வைத்து இந்த இரண்டு சட்டிகளிலுமுள்ள துவாரங்களின் வழியாய் ஜலம் சொட்டுச் சொட்டாய் விழுந்து அடியில் வைக்கப்பட்ட துவாரமில்லாத சட்டியில் தங்கும்படிச் செய்து வடிக்கட்டலாம். மணலையும் கரியையும் அடிக்கடி மாற்ற வேண்டும். இது இலகுவான முறையானலும் பழக்கம் அவசியம் வேண்டும்.—சுதேச மித்திரனில் கேசவராவ்.

## EARLY MARRIAGE.

## பால்ய விவாகம்.

(:o:)

விவாக மென்பது ஹிந்து மதஸ்தர்களுக்குள் ஒரு ஸம்ஸ்காரமாக சாஸ்திரங்களில் எடுக்கப்பட்டிருக்கிறது. மேல்நாடுகளிலும், இந்தியாவிலேயே மகம்மதியர், கிருஸ்தவர், முதலிய இதர மதஸ்தர்களுக்குள்ளும் விவாகம் என்பது ஸாதாரணமான ஒரு ஒப்பந்தமாக பாவிக்கப் படுகிறது. இந்த மதஸ்தர்களுக்குள் ஸாதாரணமாய் கல்யாணமான ஒரு புருஷனும் ஸ்திரீயும் தமக்கு இஷ்டமில்லாவிட்டால், தம்முடைய கல்யாணத்தை ஒத்துமையின்பேரிலோ, கோர்ட்டு மூலமாகவோ ரத்து செய்துகொண்டு தமக்கிஷ்டமான வேறு ஒரு நபரை விவாகம் செய்துகொள்ளலாம். இந்து மதத்திலோ கல்யாணம் ஒரு முறை செய்யப்பட்டால், அக்கல்யாணம் ஒரு போதும் ரத்து செய்யக்கூடியதல்ல. மேலும், முற்கால சம்பிரதாயங்களை அநுஸரித்து ஹிந்து மதசாஸ்திரங்கள் புருஷன் சார்பாகவே பக்ஷபாதமா யிருக்கின்றன. தாரமிழந்த ஒரு புருஷன் பலமுறையும் புனர்விவாகம் செய்துகொள்ளலாம். தார மிருக்கும் புருஷனும் தன்னிஷ்டப்படி வேண்டிய ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொள்ளலாம். ஆனல், ஸ்திரீகளோ அப்படிச் செய்யக்கூடாது. ஒரு ஸ்திரீயானவள் தன் வாழ்நாள்களில் ஒரே புருஷனைத்தான் விவாகம் செய்துகொள்ளலாம். அப்புருஷன் இறந்துவிட்டால், அவள் மறுபடியும் புனர்விவாகம் செய்துகொள்ளக் கூடாது. ஏகாங்கியாகவேதான் வாழ்நாளைக் கழிக்கவேண்டும். அதிலும் பிராமணர் முதலிய உயர்குல ஸ்திரீகள் புருஷனை இழக்க நேரிட்டால், அவர்கள் கதி மிகவும் பரிதபிக்கத் தக்கதே. இவ்விதமாக ஹிந்து சாஸ்திரங்

கள் கல்யாண விஷயத்தில் மிகக் கடூரமாக இருந்தும் அதுவிஷயத்தில் நாம் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பது நம்மவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. புருஷன் இறந்து பரிதபிக்கும் விதவைகளைப் பார்த்திருந்தும் பெண்களைப்பெற்ற தாய் தந்தையர்கள் முன்பின் பாராமல் தம் குழந்தைகளுக்கு அதி பால்யத்தில் விவாகம் செய்துவிடுகிறார்கள். பெண்களுக்கு ஏழு வயதும் புருஷர்களுக்கு 10 வயதும் ஆகிறதற்குள்ளேயே அவர்கள் தம்பதிகளாய்விடுகிறார்கள். அந்தக்காலத்தில் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் விவாகம் என்பது இன்னதென்றும், அதன் கடமைகள் இன்னதென்றும் அறியத்தக்க யுக்த வயதில்லை. மேளம், ஆட்டம், பாட்டுக் கச்சேரி, விருந்து, ஊர்கோலம் முதலிய ஆடம்பரங்களைக் கண்டு மகிழ்ந்து இதுதான் கல்யாணமென்று எண்ணி இளங்குழந்தைகள் தம் கல்யாணத்துக்கு உட்படுகின்றன. ஆனால், இப்படித் தாய் தந்தைகள் செய்யும் முட்டாள்தனமான செய்கைகளைக் குழந்தைகள் வயது வந்தபின் அறிகிறார்கள். அப்போது அறிந்தென்ன பிரயோஜனம்? முட்டாள்தனம் மாறி நம் தேசத்தவர்களுக்கு இது விஷயத்தில் எப்போது நல்ல விவேகம் வருமோ அறியோம். கல்கத்தாவில் ஏற்பட்டிருக்கும் "பால்ய விவாக நிவர்த்தி" சங்கத்தாரால் எடுக்கப்பட்டிருக்கும் கணக்கின்படி நம் இந்தியாவிலுள்ள பால்ய விதவைகளின் சங்கியை அடியிற் குறிப்பிடப்படுகிறது.

| | |
|---|---|
| 1-வயதுக் குழந்தைகள் | 859 |
| 2-வயது முதல் 3-வயது வரையில் | 1,886 |
| 3-வயது முதல் 4-வயது வரையில் | 3,732 |
| 4-வயது முதல் 5-வயது வரையில் | 8,180 |
| 5-வயது முதல் 10-வயது வரையில் | 78,407 |
| 10-வயது முதல் 15-வயது வரையில் | 2,27,367 |

ஆகமொத்தம் 1-வயது முதல் 15-வயது வரையிலுள்ள விதவைக் குழந்தைகளின் சங்கியை 3,20,431 ஆகிறது. இந்தக் கொடூரமான கணக்கைப் பார்ப்பவர்களின் மனது உருகாமலிராது. இப்பெரிய சங்கியையான குழந்தைகளின் வாழ்நாட்கள் பாழடைவதற்கும் அவர்கள் ஆயுள் பரியந்தம் அடையும் துன்பத்திற்கும் நம் தேசத்துப் பால்ய விவாகம் என்னும் நவீனத்தில் உண்டான கொடிய வழக்கமும் அவ்வழக்கத்தைக் கையாடும் தாய் தந்தைமார்களுமே உத்தரவாதிகளல்லவா? மேலும், பால்ய விவாகத்தினால் ஸ்திரீ புருஷர்கள் பலஹீனமடைந்து அவர்கள் மூலமாய் உண்டாகும் குழந்தைகளும் தேக பலம் மனோ பலத்தில் குறைவுபட்டுச் சவுரிய மில்லாத பேடிகள் போன்று பூமிக்குப் பாரமாய் இருக்கிறார்கள். பால்ய விவாகத்தினால் சில குழந்தைகள் பிறந்த வுடனே இறக்கின்றன சில அங்க ஈனமாய்ப் பிறக்கின்றன. இதன் உண்மை சாஸ்திர ரீதியாயும் அநுபோக மூலமாகவும் வெளிப்படையாய் ஏற்படுகிறது. மேலும், உலக அநுபவத்திலும் அது அநேக கெடுதலுக்கிடமாக ஏற்படுகிறது. கல்யாணமானவுடனே அநேகம் பிள்ளைகள் படிப்பு விஷயத்திலும், ஞானம் அநுபவம் முதலியவைகளைச் சம்பாதிப்பதிலும் ஊக்கமில்லாமல் டம்பாசாரிகளாய்விடுகிறார்கள். பெண்களும் அம்மாதிரியே பிஞ்சில்பழுத்து புற்றீசல் போல் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு நிர்மூடர்களாய்விடுகிறார்கள். அநேக பெண் பிள்ளைகள் படிப்பு, ஞானம் முதலியவைகள் இல்லாமல் எப்போதும் தம்புருஷனுடன் சண்டையிட்டுக்கொண்டுதிரிகிறார்கள். இவையெல்லாம் பால்ய விவாகத்தினால் விளையும் கெடுதிகளே.—தேசாபிமானி

———

# REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### MARAVARS.

### மறவர்கள்.

இவர்களைப்பற்றி நாளது மே மாதத்துக்கு "விவேக போதினி" யில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. "மறவர் என்ற ஜாதியார் பெரும்பாலும் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் வஸித்து வருகிறார்கள். முன் காலத்தில் இவர்கள் தென்னிந்தியாவில் பிரபலமாய் இருந்தார்கள்.' இந்த ஜாதியார் ஆரம்பத்தில் ராமேசுவரம் என்ற தீவில் கோயில் காவலுக்காக செம்படவர்களாய் ஏற்படுத்தப்பட்டார்களாம். மறம் என்றால், தைரியம். ஆகவே, மறவர் என்றால், தைரியமுள்ளவர்களாம். இவர்கள் வீர சைவர்கள். தெய்வபக்தி யுள்ளவர்கள். இவர்கள் வழக்கங்கள் பெரும்பாலும் மற்ற இந்துக்கள் மாதிரியேதான். ஆனால் அண்ணன் தம்பிகளுக்குள் பெண்பிள்ளை கொடுத்து வாங்குவது வழக்கமாம். இங்கிலீஷ்காரர் ஏற்பாடு மாதிரி புருஷனை விலக்கி வைத்துக் கலியாணம் நடத்துவதும் உண்டாம்.

இவர்களுக்குள் பெண்கள் உடன்கட்டை ஏறலும் இருந்ததாம். இவர்கள் நடத்தும் தொழிலைப் பார்த்தால், முன்காலத்தில் இவர்கள் யுத்த வீரர்களாய் இருந்ததாகவும், அதற்கு மான்யமாக நிலங்களை அனுபவித்ததாகவும் தெரிய வருகிறது. இப்பொழுதும் அநேக கிராமங்களில் இவர்கள் காவல் தொழில் செய்து ஜீவனம்பண்ணி வருகிறார்கள். ஆனால் இவர்களுக்குத் திருட்டுத்தொழில்தான் ஜீவனம் என்று சொல்வதுண்டு.

"இவர் நாடுகளில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். இவர்களுக்குப் போலீஸ் பட்டாளம் முதலியவைகளில் உத்தியோகம் ஏற்படுத்த வேண்டும். இவர்களுக்கு அநியாயமாய் ஏற்பட்ட திருட்டுத் தொழிலை யொழிக்கவேண்டும். இவர்களுக்கு ஆதிமுதல் உண்டான காவல் தொழிலை நிலை நிறுத்தவேண்டும்".

### BOOKS AND READING.

### புஸ்தகமும் வாசிப்பும்.

ஸ்ரீமான் வி. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் "புஸ்தகமும் வாசிப்பும்" என்பதைப்பற்றி ஐப்பசி மீ"த்து "வித்யா விஹாரிணி" யில் ஒரு வியாஸமெழுதியிருக்கிறார்.

ஒருவனுடைய குணகுணங்களை அறிவதற்கு அவன் படிக்கும் புஸ்தகங்கள் தகுந்த கருவியாகும். சிறந்த புஸ்தகங்களைப் படித்தால்தான் சிறந்த புகழை அடையக்கூடும். ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு புஸ்தகங்களைப் படிக்கிறானே அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய அறிவும் ஜாஸ்தியாகும். புஸ்தகங்களில் கெட்ட புஸ்தகங்களும் படிக்கக்கூடாத புஸ்தகங்களு முண்டு. அவைகளை விலக்கி, நல்ல புஸ்தகங்களைத் தெரிந்தெடுத்து நல்லறிவை விருத்தி செய்யவேண்டும். படிப்பவர்களுக்கு அழகும் ஆபரணமும் புஸ்தகங்களே. ஒருவனுடைய கஷ்டகாலங்களில் சிநேகிதன்போல உதவுவது புஸ்தகங்களே. ஜீவனோபாயத்தைக் கொடுப்பவைகளும் அவையே.

ஆனால் புஸ்தகங்களை சேகரித்து மாத்திரம் வைத்தல்கூடாது. திருப்பித் திருப்பி வாசிக்கவேண்டும். நல்லோரிணக்கம் பழகப் பழக ஞானவிருத்தியையும் சந்தோஷத்தையும் எப்படி உண்டுபண்ணுகிறதோ, அப்படியேபுஸ்தகங்களும் படிக்கப்படிக்க இன்பத்தையும், புத்தி நுட்பத்தையும் தரும். அறிவில்லாதவனை அறிவுள்ளவனுயும், பேசும்பொழுது சொற்சோர்வுள்ளவனை சொற்சோர்வு இல்லாதவனுயும், எழுத்துப் பிழையில்லாமல் எழுதும்படியாயும், நல்லது இன்னது தீயது இன்னது என்று தெளிவுறக் காட்டியும், பிறப்பினல் தாழ்மையா யிருந்தாலும், மேன்மையாய்ச் செய்வதும் வாசிப்பே. நாம் வாசிக்கும்பொழுது கெட்ட எண்ணங்கள் நமது மனதில் குடிகொள்ளாமலும், கவலைக்கு இடங் கொடாமலும், புஸ்தகங்களிலேயே கருத்தாயிருந்து வாசிக்க வேண்டும். சில புஸ்தகங்களை ருசிபார்க்க வேண்டியதா யிருக்கும். சிலவற்றைப் பாடம் பண்ண வேண்டியதாயிருக்கும். நாம்படித்த விஷயங்களை உபயோகப்படுத்துவது முக்கியம். புஸ்தகங்களைப் படித்துக் கற்றுக்கொள்வது போல உலக நடவடிக்கைகளையும் ஆராய்ந்து கற்க வேண்டும். நல்ல நடத்தை, நல்ல எண்ணம், பரோபகாரம், யாவரையும் ஸமமாய் பாவித்தல் முதலிய நற்குணங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

## GERMINATION OF WILD INDIGO SEED.

## கொழுஞ்சிவிதை ஸரியாய் முளைத்தல்.

இது விஷயமாய் "கிருஷிகன்" பத்திரிகை வைகாசி மீ"த்திய ஸஞ்சிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

மாசி மாதத்தில் சம்பாநெல் அறுவடையானவுடனே நஞ்சை நிலத்தின் ஈரம் போகுமுன் கொழுஞ்சி விதையைவிதைத்து இரண்டு உழவுசெய்துவிட்டால், அந்நிலத்தில் கொழுஞ்சிப் பயிர் முளைத்து வளர்ந்து, நாலு மாதத்தில் பூத்துக்காய்க்கும் அடுத்த ஸாகுபடிக்கு முன் அந்தக் கொழுஞ்சிப் பயிரிலிருந்து விதைகள் அந்நிலத்தில் உதிர்ந்துவிடும். இப்படி ஒரு நிலத்தில் ஒருமுறை கொழுஞ்சி விதை விளைத்துப் பயிராக்கிவிட்டால் அவ்விதையின் கரு நிலத்தில் அழியாமலிருந்து வருஷா வருஷம் கொழுஞ்சிப் பயிர் உண்டாகிவேண்டியமட்டும் நிலத்துக்குவேண்டிய தழைஎருக்கொடுத்துக்கொண்டேயிருக்கும். இது காரணம் பற்றியே கொழுஞ்சித் தழை எரு மற்ற எருவைப்பார்க்கிலும் சிலாக்கியமானது என்றாலும், எவ்வளவு விதைத்தோமோ அவற்றில் 100க்கு 15 விதைகள்தான் விதைத்த வருஷம் பயிராவதும், அந்தப் பயிரிலிருந்து விழுந்த விதையும் முன் வருஷ விதையில் சிலவும் சேர்ந்து 100க்கு ஸராஸரியில் 40 வரையில் மறு வருஷம் முளைப்பதுமா யிருக்கிறது இந்தத் தாமதம் பற்றியே அநேகர் கொழிஞ்சிப் பயிர்த் தழையை எருவாக உபயோகிக்கிறதில்லை. இதன் காரணம் அவ்விதையை மூடிக்கொண்டிருக்கும் கனமான தோல்தான். இவ்விதையை ஸரிவர முளைக்கச் செய்வதற்காகப் பரீக்ஷை பார்த்த வகைகளில் பின் வருபவை கவனிக்கத்தக்கன :—

(1) கெந்தகத் திராவகத்தில் கொஞ்சம் தண்ணீர் கலந்து அதில் இரண்டு மூன்று நிமிஷம் கொழுஞ்சி விதையை நனைத்துப் பிறகு விதைத்தால் விதை முழுவதும் விளையும்.

(2) கொழுஞ்சி விதைகளை நிலத்தில் பரப்பி மாடுகளை நடத்தி மிதிக்கச்செய்து பிறகு எடுத்து விதைத்தாலும் சுமாராக விளையும்.

(1) கொழுஞ்சி விதைகளை உரலிலிட்டு, 10 நிமிஷம் நெல் குத்துவது போல் குத்திப் பிறகு எடுத்து விதைக்கவும் பிரயோஜன முண்டு.

(4) சுண்ணம்பு அரவையில் கொஞ்சம் கொழுஞ்சி விதையும் மணலும் கலந்து 10 நிமிஷம் அறைத்துப் பிறகு விதைத்தாலும் 100க்கு 90க்குக் குறையாமல் விதை முளைக்கும்.

ஆகவே இந்த நாலுவித உபாயங்களையும் பரீக்ஷை செய்து கொழுஞ்சி விதை விதைத்தால் மிகவும் பிரயோஜன முள்ளதாக விருக்கும்.

## MARRIAGE.

## விவாகம்.

"ஹிதகாரிணி" என்னும் தமிழ்ப் பத்திரிகையின் சென்ற நவம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் "விவாகம்" என்று ஒரு வியாஸ மிருக்கிறது. பூஸுரர்களில் ருதுவானபிறகு பெண்ணை விவாகம் செய்யமாட்டார்கள். பெற்றோர்களால், குலம், கிரகம், நடத்தை, அந்தஸ்து, முதலியவைகளை ஸரிவரப் பார்த்துத் தெரிந்தெடுக்கப்பட்ட வரனுக்குக் கன்னிகயைக் கொடுக்கப்படுகிறது. ஆதிகாலம் முதல் இந்த ஆசாரணை நடந்து வருகிறது. இந்த நாகரீககாலத்தில் புராதன ஸம்பிரதாயங்கள் பறந்தன. வரனுடைய தேச ஸம்பிரதாயங்களை விசாரிக்கும் வழக்கம் மறைந்தது. எந்த வகுப்பில் படிக்கிறான் என்று தெரிந்துகொள்வதும் அதற்கேற்பட்டுள்ள வரதக்ஷிணைத் தொகையைத் தருவதாய்க் கூறி, ஒரு நாளைக் குறித்து முகூர்த்தம் நடத்துவதும் சிலபிதாக்களின் வழக்கமாயிருக்கிறது. பெண்களை ஏராளமாய்ப் பெற்றுள்ள சில புண்ணியவதிகள் தீர்க்காலோசனையின்றி முதல் பெண்ணுக்கு பலர் புகழும்படி கல்யாணம் செய்துவிடுகிறார்கள். மற்றப் பெண்களுக்குக் கல்யாணம் செய்யும் காலத்தில், செலவழிக்க வகையில்லாமல், ஏராளமாய்க் கடனை வாங்கி, கடனைத் தீர்க்கமுடியாமல், ஓலை, தாலிகளை இழந்து பரிதபிக்கிறார்கள். ஜாதியை மறந்து ஸம்பிரதாயங்களைக் கைவிட்டு வரதக்ஷிணைக்காக, சண்டைபோடும் மூர்க்கப் பிராமணர்களின் மூடமதியைத் திருத்துபவர் யார். கல்யாணத்தில் பணம் சரியாய்க் கிடைக்காவிடில் ருதுசாந்தி முகூர்த்தத்தில் பெண் வீட்டாரைப் பற்பல விதமாய் ஹிம்ஸித்துப் பணம் வாங்குவதும் அந்த வழியிலும் கிடைக்காவிடில் பெண்ணைப்புருஷனிடத்தில்சேராவண்ணம் அவளை பெற்றோர்களிடமே விட்டுவிடுவதும் வழக்கமாக்கிகொண்டிருக்கிறார்கள். நாகரீக காலத்தில் துராசாரங்கள் அதிகரிக்கக் காரணமென்ன? (1) வயோதிகர்களுக்குஇளம் சிறுமியைக்கொடுத்து மனைவி யாக்குவது (2) நோயாளிக்கு ஆரோக்கியமுள்ள பெண்ணைக்கொடுப்பது (3) வதூவரர்களின் வயது ஒரே ஸமனாயிருப்பது (4) குரூபிஸுரூபிகளைச்சேர்ப்பதும் இன்னும் அநேகம் உண்டு. இக்கொடிய வழக்கங்களை நீக்கி கன்னிகையின் சரீர அமைப்பு, குணம், நடத்தை ரூபத்துக்கேற்ற புருஷனையும், வரனுடைய கல்வி, தேகாரோக்கியம் புத்தி சாதுர்யாதிகளுக்குத் தகுந்த பெண்ணையும் தேடி மணம் முடிப்பது உசிதமாகும். தர்மாசரணையை அனுசரித்து நடக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கு ஸௌபாக்கிய முண்டாகும்.

## SUGAR INDUSTRY.

## சர்க்கரை வியாபாரம்.

இது விஷயமாய் ஏப்பிரல் மாதத்துக் "கிருஷிக" னில் ஒரு வியாஸ மிருக்கிறது. நமது தேசத்தில் செலவாகும் சர்க்கரை முழுமையும் இங்கேயே செய்யப்படுகிறதில்லை. பிறதேசங்களிலிருந்து வருஷா வருஷம் ஸராஸரி 6,30,474 டன் நிறையுள்ள சர்க்கரை நமது தேசத்தில் இறக்குமதி யாகிறது. இருபது வருஷங்களுக்கு முன்னே இவ்வளவு சர்க்கரை இறக்குமதி யாகவில்லை. இப்போது நமது தேசத்தில் சர்க்கரை மிகவும் குறைவாய்ச் செய்யப்படுவதினால், அயல் தேசத்தவர்களுக்குப் பெருத்த லாபம் கிடைத்துக்கொண்டு வருகிறது. ஏனென்றால், பிறதேசங்களில் கரும்பு ஏராளமாய்ச்சாகுபடி செய்யப்படுகிறது. நமது தேசத்தில் வருஷா வருஷம் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பு குறைந்துகொண்டே வருகிறது. பிறதேசங்களில் சர்க்கரை காய்ச்சத் தகுதியான யந்திரங்களை உபயோகித்து வருகிறார்கள். நமது தேசத்திலே யந்திரத்துக்குப் பதிலாய் ஆலையிலிட்டுக்கருப்பஞ்சாறு பிழிந்துசர்க்கரை காய்ச்சுவது சிரமமான வேலையாயும் அதிகலாபகரமில்லாததாயுமிருக்கிறது. பிறதேசங்களில் கரும்பு சாகுபடி செய்பவர் ஒன்று சேர்ந்து, ஏராளமான இடங்களில் சாகுபடி செய்து, நிலத்துக்குச் சரியான உரம் போட்டு வருகிறதினால், கருப்பஞ்சாறு அதிகமாய்க் கிடைக்கிறது. நம்தேசத்தில் ஒற்றுமை யில்லாமல் தனித்தனியாக ஒவ்வொருவரும் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அவைகளில்சிலவற்றைத் திருடர்கள் திருடிப்போகிறார்கள். அப்படிப்போய் மிகுதிக் கரும்பும் சாறு குன்றியிருக்கிறது இந்தக்காரணங்களினால் தான் நமது தேசத்துக்குப் போதுமான சர்க்கரை நமது தேசத்திலேயே செய்ய முடியாமல்போவது. இதை நிவர்த்தி செய்ய, அநேகர் ஒருங்கு சேர்ந்து, கரும்பு சாகுபடி நல்ல உரமிட்ட நிலங்களில் செய்து யந்திரங்களைத் தருவித்துச் சர்க்கரை செய்வார்களேயானால், பிறதேசத்தார்கள் கொண்டுபோகும் சர்க்கரை வியாபாரத்தின் லாபத்தை நம் தேசத்தவர்களே யடையலாம்.

## FIXING TIME BY THE STARS.

## நக்ஷத்திரங்களைக்கொண்டு நாழி சொல்லுதல்

இந்த விஷயமாக மேமாஸத்து "விவேகபோதினி" யில் டி. ஸ்ரீனிவாஸாசாரியார் என்பவர் சில குறிப்புகள் எழுதுகிறார்.

1. 27 நக்ஷத்திரங்களையும் திட்டமா யறிந்து கொள்ளவும். பிறகு இரவில் தனக்கு வேண்டிய நேரத்தில் தலைக்கு நேராய் உச்சத்திலிருக்கிற நக்ஷத்திரத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

2. அடியில்கண்ட பாட்டைப் பாடஞ்செய்து கொள்ளவும். (அதில் செய்யுள் இலக்கணம் பார்க்க வேண்டாம்.)

சித்திரைக்குப் பூசமுதல் சீர் ஆவணிக்கு அனுஷம்
உத்த தனுசுக் குத்திரட் டாதிமுதல்
ஏதுச் சமானுலுமி ரண்டேகா வில்பெருக்கி
மாதமைந்து தள்ளி மதி.

3. இப்பாடலின் கருத்து, சித்திரை 1வ முதல் ஆடிமீ முடிவுவரை என்றைக்கு நாழிகை பார்க்கிறதாயிருந்தாலும், பூச நக்ஷத்திரத்திலிருந்து உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

ஆவணிமீ 1வ முதல் கார்த்திகை முடிவு வரையில் என்றைக்கு நாழிகை பார்க்கிறதாக யிருந்தாலும் அனுஷநக்ஷத்திரம் முதல் உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

மார்கழிமீ 1வ முதல் பங்குனி முடிவு வரையில் என்றைக்கு நாழிகை பார்க்கிறதா யிருந்தாலும், உத்திரட்டாதி முதல் உச்ச நக்ஷத்திரம் வரையில் எண்ணிக்கொள்ளவும்.

அப்படி எண்ணிவந்த தொகையை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கி வந்த தொகையில் அந்தந்த நான்கு மாஸங்களில் சென்றுபோன ஒவ்வொரு மாஸத்துக்கு 5 நாழிகைவீதம் கழித்துவிட்டால், நாம் பார்க்கும் காலத்தின் நாழிகை திட்டமாய் ஏற்படும்.

குறிப்பு:—ஒவ்வொரு முழுமாஸத்துக்கு 5-நாழிகை வீதமும் ஒரு மாஸத்திற்குள்பட்ட நாள்களுக்கு நாள் ஒன்றுக்கு 10-வினாடி வீதமும் கழிக்கவேண்டியது. (ஒரு நாழிகை—60 வினாடி.)

உதாரணம்.

4. ஆனி மீ 21உ ராத்திரி ஒரு நேரத்தில் ஆகாசத்தைப் பார்ப்போம். விசாகநக்ஷத்திரம் உச்சமாயிருக்கிறது.

மேற்கூறிய விதிப்படி பூசம் முதல் விசாகம் வரையில் கூடிய நக்ஷத்திரம் 9-தை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கி வந்த நாழிகை $20\frac{1}{4}$

இதில் சித்திரை வைகாசியாகிய இரண்டு மாஸத்துக்கு நாழிகை 10

ஆனிமீ 21உக்கு நாள் ஒன்றுக்கு 10-வினடியாக 210-விநடிக்கு நாழிகை $3\frac{1}{2}$

ஆ $13\frac{1}{2}$

பாக்கி நாழிகை 68

அஸ்தமித்து 68-நாழிகையென்று தீர்மானிக்கவும். கடிகார ரீதியாய் மணி ஒன்றுக்கு $2\frac{1}{2}$-நாழிகை வீதம் கணக்கிட்டு 8-மணி 42-மினிட்டென்றும் தீர்மானிக்கலாம்.

---

## PLANTAIN FIBRE CLOTH.

### வாழைநார் வஸ்திரம்.

சீனு தேசத்தில் சந்தைகளில் வாழைநார் வஸ்திரம் அதிக விலைக்கு விற்பதுண்டு. ஒரு கெஜ அகலம் 5 கெஜ நீளத் துணி சுமார் 17 ரூபாய்க்கு விற்கிறது. இதன் விசேஷமென்னவெனில் அனேக வருஷம் கெடாமலிருப்பதேயாம். தஞ்சாவூர் ஜில்லாவிலும் திருவாங்கூர் கைத்தொழில் வித்யா சாலையிலும் வாழைநார்த் துணி நெய்து விநோத காக்ஷிகளுக்கு அனுப்பிப் பரிசு பெற்றதுண்டு. இவர்களுக்கு நார் எடுக்கும் பக்குவம் தக்கவாறு தெரியவேண்டுமென்று சீனர் அனுபவத்தைத் தெரிவிக்கலாயிற்று. வாழைப் பட்டைகளை ஒரு வருஷமான மரங்களிலிருந்து பிரித்துக் கொதிக்கும் நீரிலிருந்து உண்டாகும் ஆவியின்பேரில் மிருதுவாகும் வரையில் வைப்பதுண்டு. மிருதுவானவுடன் பட்டையின் மேல்புரத்தைச் சீவி அதை இரண்டு மொட்டை மரக் கத்தியின் நடுவில் கிட்டி இழுக்கச் சோறு முழுவதும் அனேகமாய் வெளிப்படுகிறது. இந்த நாரைத் துணியில் மூட்டை கட்டி மாலெட்டு (கொட்டாப்புளி) களால் அடித்து நீர் முழுவதும் கசியும்படி செய்வார்கள். பிறகு நாரைப்பிரித்துச் சீவி நூலாகத்திரித்து துணி நெய்வதுண்டு.

இதில் வாழைநாரும் ரீயா நாரும் கலப்பாயிருப்பதைக் கண்டுபிடித்தார்கள்.—தென்னிந்தியா விவஸாயம்.

## REVIEWS OF BOOKS.

### புஸ்தக வரவு.

---

THE ORIENT.

**பிராசி** :—இதன் இரண்டாவது புஸ்தகம் ஏழாவது சஞ்சிகை முதல் ஒன்பதாவது சஞ்சிகை வரையில் வெளியாயிருக்கின்றன. இவைகளில் ராமாயணம் அயோத்யா காண்டம் 63-ம் சர்க்கம், முன் சஞ்சிகையில் போனதுபோக பாக்கியும், 100-ம் சர்க்கத்தில் கொஞ்சமும், தமிழ் வசன நடையில் எழுதப்பட்டிருக்கிறது. பத்திராதிபர், எல். வி. இராமச்சந்திர அய்யர், சென்னை.

HARISHCHANDRAN.

**அரிச்சந்திரன்.**—ராவ் ஸாஹிப். ச. பவாநந்தம் பிள்ளையவர்கள் இயற்றியது. அரிச்சந்திரன் என்னும் தமிழ் நாடகம் நமது பார்வைக்கு வந்தது. அரிச்சந்திரன் சரித்திரம் எல்லாருக்கும் நன்கு தெரிந்ததே. அம்மன்னன் சரிதத்தை யுணர்த்தும் வசன நூல்களும் நாடகங்களும் நமது தமிழ்ப் பாஷையில் பல உள. ஆயினும் இந்நூல் வெளிவருவதற்கு இந்நூலாசிரியர் பதினாறு அரிய ஆதாரவுகள் தம்முக வுரையிற் கூறுகின்றனர். அவை யாவும் அறிஞர் நன்கு பாராட்டத்தக்கனவாம். நாடகத்துள் நடித்துக் காட்டுவதற்கு இயலாததும், கண்டோர் சந்தேகிப்பதற்கு இடமானதும் ஆகிய அம்சங்களை ஒதுக்குதல் நாடகாசிரியர் கடமை. அவ்வுண்மையை யுணர்ந்து இந்நூலாசிரியர் ஆங்காங்கு செய்துள்ள மாறுபாடுகள் மிகவும் பொருத்தமானவையே. ஸமயத்துக்கேற்ற சொற் பிரயோகமும், பாடல்களும், பாத்திரங்களின் ஏற்றத்தாழ்வுக்கேற்ற பாஷை நடையும், படிப்போர் எவர்க்கும் இன்பம் பயக்கும் என்று நம்புகிறோம். அரிச்சந்திரன் கதையால் விளங்குவது சத்யத்தின் மகிமை ஒன்றேயாயினும், அந்த சத்யத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் அநுசரிக்கத்தகும் அடைவுகளும் இந்நூலில் நன்கு விளங்குவதேயன்றி அநேக அரிய விஷயங்களும் காணப்படுகின்றன. நல்லோருக்குத் தீங்கிழைப்போர் அடையும் இன்னல்கள் பலவாம் என்பதை விசுவாமித்திரன் வாயிலாகக் காட்டியது மிகவும் பாராட்டற்பாலதாம். அச்சும் காகிதமும் பைண்டும் வெகு நன்றாய் அமைந்துள்ளன. புத்தகத்தின் விலை. ரூ 2. சென்னப்பட்டணம் ஜி. ஏ நடேசன் கம்பெனியில் கிடைக்கும்.—ஒரு நிரூபர்.

## BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

### WANTED TO BE SENT BY POST.

**தன்னைத் தபாலில் அனுப்பும்படி கேட்டது.**—இட்டாலி தேசத்தில் ஒரு சிறுவன் தன் முகத்தில தபால் முத்திரை ஒன்றை ஒட்டிக்கொண்டு தபால் ஆபீசுக்குப் போய் தன்னை வெனிஸ் நகரத்துக்கு தபால்மூலமாக அனுப்பும்படி தபால் ஆபீஸ் அதிகாரிகளைக் கேட்டானாம்.

### AN EXPERT RUNNER.

**ஓட்டத்தில் இணையில்லாத ஸமர்த்தன்.**—அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரத்தில் க்ளாரென்ஸ் டெமாரென்பவன் 2-மணி 3-நிமிஷத்திற்குள் 25 மயில் தூரம் ஒடினானாம். இதற்கு முன் அமெரிக்கா இந்தியன் ஒருவன் 2-மணி 24-நிமிஷத்திறகுள் ஷ மயில் தூரம் ஒடினானாம். இவ்விருவருள் முதலில் சொன்னவனுக்கு ஒட்டத்தில் ஸமானமாயிருப்பவர் ஒருவருமில்லையாம்.

### NO OSTENTATION IN THE ROYAL DRESS.

**ராஜ குடும்பத்துக்கு டம்பம் இல்லை.**—உலகத்தில் இதுவரையில் ஒருபோதுமில்லாத அவ்வளவு பெரிய ராஜ்யமாகிய ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட நாடுகளுக்கெல்லாம் ஏக சக்ரவர்த்தியாயிருக்கும் ஜார்ஜ் அரசருடைய பிள்ளைகள் சாப்பாட்டு விஷயத்திலும், உடுப்பு விஷயத்திலும், மற்ற ஸகல விஷயங்களிலுமே ஸாமான்ய மனுஷர்களின் பிள்ளைகளைப் போலவே நடத்தப்படுகிறார்கள். ராஜகுமாரத்திகளின் அங்கிகளில் தோள்பட்டையில் கிஞ்சித்தும் பொம்மல் கிடையாது. மேலும் அவைகள் செய்யப்படும் துணிகளோ ஸாதாரணமானவைகள். ராஜகுமாரர்களுடைய கால் சட்டைகளும் சட்டைகளும் மிகவும் அழுத்தமான துணிகளில் தைக்கப்பட்டிருக்கும். உடுப்பு விஷயத்தில் ராணி தம் தாயாராகிய டச்சஸ் ஆப் டெக்கைப் பின்செல்லுகின்றனள். அந்த அம்மாள் வீண் செலவும் டம்பத்துக்கான காரியங்களும் ஒருபோதுஞ் செய்கிறதில்லை. ராணியுடைய ஸகோதரர்கள் மூன்று பேர் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருக்கையில் மற்றப் பிள்ளைகள் அவர்களுடைய ஸாதாரண உடுப்புகளைப் பார்த்துப் பரிகாஸம் பண்ணுவார்கள். அதை அவர்கள் எள்ளளவேனும் கவனஞ் செய்யமாட்டார்கள். மொத்தத்தில் ஐரோப்பிய அரசர்கள் உடை விஷயத்தில் மிக ஸாதாரணமாய்த் தானிருக்கிறார்கள். ஆனால் ஆசியாவிலோ மன்னர்கள் டம்பத்தை நேசிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

### THE SRIRANGAM AND MAHABALI PURAM TEMPLES.

**ஸ்ரீரங்கம் மஹாபலிபுரம் கோவில்கள்.**—நமது நாட்டில் கோயில் குளங்கள் பல இடங்களில் பாதியாக நின்றுபோயிருப்பது அனேகருக்குத் தெரியலாம். ஸ்ரீரங்கத்தில் 'பெரியகோபுரமும்' மஹாபலிபுரத்தில் 'பல ரதங்களும்' முக்கியமானவை. இவ்விடங்களுக்குப் போகிறவர்கள், ஸ்தல வாஸிகளைக் கேட்டால், ஒரே பதில்தான் சொல்லுவார்கள். "முன்னொரு காலத்தில் தேவதைகள் இந்தக் கோவிலைக் கட்டி, பிராகாரத்தை முடித்துக் கோபுரம் கட்ட ஆரம்பித்தார்கள். கோபுரம் இவ்வளவானவுடன் கோழி கூவிற்று. பொழுதும் விடிந்தது. தேவதைகளும் மறைந்தார்கள்" என்பதாம். ஆனால், சிலாசாஸனங்களைக் கொஞ்ச காலமாகப் பரீக்ஷித்து வந்ததில், ஸ்ரீரங்கத்தில் பெரிய கோபுரம் முற்றுப்பெறுததற்குக்காரணம் தலைக்கோட்டை மஹாயுத்தத்தில் விஜயநகர ஸமஸ்தானம் மூழ்கி, மகம்மதீயர் கை வலுத்து, அதனால் பின்னிட்டு வந்த 'ராயர்கள்' அதை முடிக்கமாட்டாமல் நின்றுவிட்டதுதானென்று தெரிய வருகிறது.

மஹாபலிபுரத்தில் (மாவலிபுரமென்று ஸாதாரணமாக வழங்குவது தப்பு.) பலரதங்களில் இம்மாதிரி வேலை நின்றிருக்கின்றன. அவை யெல்லாம் ஸுமார் 600 கி.பி.யில் ஆரம்பமாகி, நூறுவருஷ காலம் நடந்துவந்து, பிறகு கி. பி. 700 வாக்கில் நின்றுவிட்டதாக சில நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்குக் காரணம் காஞ்சீபுரத்தில் வெகுகாலம் ஸம்பிரமமாக துரைத்தனம் செலுத்தி வந்த பல்லவ ராயர்கள்தான் இந்தக் கோவில்களை நிர்மாணித்தார்களென்றும் அவர்கள் ஸுமார் 783-ம் வருஷத்திற்கப்புறம் மேற்குச் சாலுக்கியச் சக்ரவர்த்தியாகிய இரண்டாம் விக்கிரமாதித்தியனால் தோல்வியும் நாசமுமடையவே, இந்த வேலைகள் அப்படியே நின்றுவிட்டனவென்றும் இப்பொழுது அனேகமாய் நிச்சயமாகத்தெரிவதாகச் சொல்லலாம்

TEN COMMANDMENTS.

**பத்துக் கற்பனைகள்.**—1. ஸௌக்கியத்திற்கு முக்கிய ஆதாரமான நல்ல காற்றை இரவும் பகலும் சுவாசிப்பதே சுவாசாஸய ரோகங்களைத் தடுக்க சிரேஷ்டமான மருந்து.

2. தினந்தோறும் திறந்த வெளியில் நடந்தும் வேலை செய்தும் தேகப் பயிற்சி செய்யவேண்டும். இதுவே ஒரே இடத்திலிருந்து வேலை செய்வதற்கு மாற்று.

3. சாப்பாடும் பானமும் மிதமாய் குருத்வமில்லாமல் இருக்கவேண்டும். சாராயத்தைவிட தண்ணீரையே மேலான பானமாகக்கொண்டு, பாலையும் பழங்களையும் உபயோகிப்பவன், தன் ஸௌக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதோடு, வேலை செய்யும் திறமையையும்சுகத்தையும் அதிகப்படுத்திக்கொள்ளுகிறான்.

4. நாள்தோறும் குளிர்ந்த ஜலத்தால் கழுவி வாரத்திற்கு ஒரு முறை தவறாமல் வெந்நீரில் மூழ்குதல் தேக ஸௌக்கியத்தைக் கொடுப்பதோடு நீர்க்கொள்வதையும் தடுக்கும்.

5. உடுப்புகள் மிதமிஞ்சி உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடியவைகளாயும் இறுகலாயும் இருக்கக்கூடாது.

6. வீடு சூரிய கிரணம் படக்கூடியதாயும், உலர்ந்ததாயும், சுத்தமாயும், வெளிச்ச முள்ளதாயும், ஸௌகரியமாயும், இன்பம் தரத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

7. எல்லாவற்றிலும் அதிக சுத்தம் வேண்டும்· காற்று, ஆகாரம், தண்ணீர், ரொட்டி, கம்பளித்துணிகள், உடுப்புகள், வீடு முதலியன சுத்தமா யிருப்பதோடு நல்லொழுக்கமும் வேண்டும். இதனால் வாந்திபேதி, ஹஸ்தி ஜுரம் முதலிய வியாதிகள் வராமல் தடைபடும்.

8. ஒழுங்காயும் அதிகமாயும் வேலை செய்தல் தேக வியாதியையும், மனோ வியாதியையும் வரவொட்டாமல் தடுக்கும். இன்ப காலத்திலும் துன்ப காலத்திலும் இதுவே பெரிய ஆறுதலாகும்.

9. வேலை செய்த பிறகு இளைப்பாறவும், பொழுது போக்கவும், பெருவிருந்தும், விளையாட்டும் நல்லவழிகளல்ல. இரவு தூங்குவதற்கு ஏற்பட்ட காலம். வேலையில்லாத நேரத்தையும், தமாஷில் செலவழிக்கும் காலத்தையும் குடும்பத்திற்கும் ஆத்மரக்ஷணைக்கும் உபயோகிக்கவேண்டும்.

10. வேலையும், ஸத்கிருத்யங்களும், தீதற்ற களிப்பும், நிறைந்துள்ள வாழ்வுமே நல்லதேகஸௌக்கியத்திற்கு முதற் காரணம். குடும்பத்தில் நல்லவனாயும், தன் தொழிலில் கெட்டிக்காரனாயும், தன் தேசத்தில் அபிமானமுள்ளவனாயும் இருக்கவேண்டும் என்னும் ஆசை ஒருவன் வாழ் நாளுக்கு அளவிடக்கூடாத மதிப்பை உண்டுபண்ணுகிறது.

HOW TO BE AGREEABLE TO ALL?

நல்லவனாவ தெப்படி?—நல்லவனாவ தெப்படியென்று ஒருவன் கேட்டதற்கு, பெயர்பெற்ற ஆங்கில விற்பன்னர் ஒருவர் அடியில் வருமாறு கூறினார்.— எந்த மனுஷ்யன் எந்த விஷயத்தில் விருப்பங் கொள்ளுகிறானோ அதற் கேற்றபடி பேசுவதும் நடிப்பதும் நல்லவனென்ற பெயரைக்கொண்டுவந்து கொடுப்பதற்குத் தக்க வழி என்றார். இதை இங்கிலீஷிலுள்ளபடியே மொழி பெயர்த்தோம். இதன் பொருளைச் சில உதாரணங்களால் விளக்கிக் கூறுவோம். ஒருவன் நாடகப் பிரியனாயிருந்தால், அவனிடம் நல்லவனென்ற பெயரைப் பெறவேண்டி நாம் நாடகத்தைப் புகழ்ந்து பேசவேண்டும். உண்மையில் நமக்கு நாடகத்தின் மேல் வெறுப்பு உண்டாயினும் அதை யவனிடம் காட்டாமல் விருப்பமிருப்பதுபோல் பாவனை செய்யவேண்டும். மற்றொருவன் ஆலயந்தொழுவதில் ஆசைகொண்டவனாயின், நாம் அவனுடைய விசுவாசத்தை யடைவதற்காகக் கோயிலுக்குப் போகத் தயாரா யிருக்கவேண்டும். எவருக்கு எதில் இஷ்டமோ அதை வெறுத்துக் கூறுவது அப்பிரியத்துக் கிடம். இதனால் இச்சகம் பேசுவோன் என்ற கெட்ட பெயரை நாம் அடைவோமென்று பயப்படலாகாது. இச்சகம் பேசல் கெடுதலாயினும் இச்சகத்தில் நல்லவனென்ற பெயரைப் பெற விரும்புவோன் இச்சகம் பேசாமலிருக்க முடியாது. ஆனால், இச்சகம் பேசுவதால் நம்மையும் பிறரையும் பாபத்துக் குள்ளாக்காதபடி மாத்திரம் நாம் தடுத்துக்கொள்வ தவசியம். யாருடைய ஸகவாஸத்தால் ஜீவனுக்குத் தீங்கு விளையுமோ, அவருடைய ஸகவாஸத்தைமட்டும் ஒழித்து மற்றவருடைய நட்பைக் கொள்வதும் அவர்களுக்கு ஏற்றபடி நடப்பதும் குற்றமாகா. அதனால் நற்பெயருண்டாகும்.—பிரஜானுகூலன்.

## LADIES' SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

### LADY LETTER CARRIERS.

**ஸ்திரீ போஸ்ட்மான்கள்.**—க்ரேட் ப்ரிட்டனில் 4000 ஸ்திரீகள் தபால் எடுத்துச் செல்லும் வேலை பார்க்கிறார்களாம். அவர்கள் வேல்ஸ், ஸ்காட்லாந்து, ஐர்லாந்து முதலிய பட்டிக்காட்டு ஜில்லாக்களில் முக்கியமாய் வேலைபார்த்து வருகிறார்களாம்.

### FEMALE EDUCATION IN INDIA.

**சென்னையில் பெண் கல்வி.**—சென்னையில் பெண் கல்வி அதிக விருத்தியை யடையாவிட்டாலும், முன்னைவிட இப்பொழுது படித்துவரும் பெண்களின் தொகை யதிகரித்து வருகிற தென்றே சொல்லலாம். இப்பொழுது 178,867 பெண்கள் படித்து வருகிறார்கள். பாடசாலையில் படிக்கும் பெண்கள் 100-க்கு 6-ம், பிள்ளைகள் 100 க்கு 32 மாக யிருக்கிறார்கள்.

### PUTTING CHILDREN TO SLEEP.

**குழந்தைகளைத் தூங்க வைத்தல்.**—குழந்தைகள் இரவில் விழித்துக்கொண்டு அழ ஆரம்பிக்கின்றன. ஸாதாரணமாய்த் தாய்மார்கள் பசியால் அழுவதாக நினைத்துப் பாலோ, உணவோ கொடுக்கிறார்கள். சில ஸமயங்களில் அவ்வுணவு அஜீரணத்தை உண்டாக்குகிறது. குழந்தையைப் படுக்கவைத்து, பாடிக்கொண்டு முதுகைத் தடவிக்கொண்டிருந்தால், சீக்கிரத்தில் அது தூங்கிவிடும்.

### SATYA BALA DEVI.

**ஸத்திய பாலதேவி.**—ஸத்திய பால தேவி என்று ஒரு இளம் பிராயமுள்ள வங்காளப் பார்ப்பினி வீணையைக் கைக்கொண்டு, ஸங்கீத சாஸ்திரத்தில் மிகத் தேர்ந்து, நமது இந்தியாவில் ஸங்கீத சாஸ்திரம் க்ஷீண தசை யடைந்திருக்கிற தென்றும், அதை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்றும் பெரு முயற்சி யெடுத்து வருகிறதாகத் தெரிகிறது. ஸமீபத்தில் இந்த ஸத்ய பால தேவி, அமெரிக்காவில், ந்யூ யார்க் என்னும் பட்டணத்தில், வீணைச்சங்கீதத்தைப் பற்றி ஒரு பிரஸங்கம் செய்தார்களாம்.

### MRS. BESANT ON FEMALE EDUCATION.

**ஸ்திரீகளின் படிப்பைப் பற்றி மிஸ்ஸெஸ் அன்னி பெஸண்ட்.**—கும்பகோணத்தில் ஸரஸ்வதி பாடசாலை என்ற ஒரு பெண் பாடசாலையில் பரிசளிக்கும் தினத்தில் மிஸ்ஸெஸ் அன்னி பெஸன்ட் ஸ்திரீகளின் கல்வியைப் பற்றி ஒரு பிரஸங்கம் செய்தார். மேல்நாட்டு ஸ்திரீகளுக்கும் இந்திய ஸ்திரீகளுக்கும் வித்தியாஸ முண்டு. மேல்நாடுகளில் ஸ்திரீகள் புருஷரைப் போல் பலதொழில்களில் பிரவேசிக்கிறார்கள். அவர்களிற் சிலர் விவாகம் செய்துகொள்ளாமலே காலந் தள்ளுகிறார்கள். ஹிந்து ஸ்திரீகளோ குடும்ப ஸம்ரக்ஷணையே பிரதானமாய்க் கொண்டு கிரஹணி என்று பேர் வாங்கி யிருக்கிறவர்கள். இந்தியஸ்திரீ கையும் குழந்தையுமா யிருப்பதை விடப் பெருமையும் கௌரவமும் இல்லை. அவளே குடும்பத்துக்கு எஜமானி. அவள் இடத்தில் ஸகலருக்கும் மரியாதையும் பக்தியும் உண்டு. புருஷன் வெளியிற் போய்ப் பொருள் தேடிவர, ஸ்திரீ குடும்பத்திலேயே இருந்து அன்ன பூரணியாய், அன்னத்தைக் குடும்பத்தாருக்குப் பங்கிட்டுப் போடுகிறாள். ஆகையால், மேல்நாட்டுஸ்திரீகளுக்குள்ள படிப்பு இந்தியஸ்திரீகளுக்கு ஒவ்வாது. இந்தியபுருஷரும் ஸ்திரீகளும் வெவ்வேறு விதமாய்ப் படிப்புப்பெறவேண்டும். பொதுக் காரியங்கள் செய்யப் பிள்ளைகள் தயாராய் வருவதுபோல, வீட்டுக் காரியங்கள் செய்யப் பெண்கள் தயாராகவேண்டும். ஆகையால், பெண்களுக்கு வீட்டுக் காரியங்கள் செய்வதும், சமையல் செய்வதும், சுகாதாரத்தைக் காப்பதும், குழந்தைகளை வளர்ப்பதும், தையல்வேலை பூவேலை செய்வதும் முக்கியமான தொழில்கள். அவைகளுக்குத்தக்க படிப்பு ஸ்திரீகளுக்குக் கிடைக்கவேண்டும். ஸ்திரீகள் இந்தியாவில் ராஜ்யபாரம் செய்து வந்தபடியாலும், அவர்களிற்பலர் உத்தம குணங்களைக் காட்டி வந்ததாலும், அவர்களுடைய சரித்திரத்தை ஸ்திரீகள் படிக்கவேண்டும். இந்திய ஸ்திரீகள் குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகள் பெற்றுத் தங்களுடைய தேக ஸௌக்கியத்தையும், பிள்ளைகளுடைய ஆயுளையும் காக்க அசக்தர்களா யிருக்கிறார்கள். சிறுவர்களும் பாடசாலைகளில் படிக்கும்போதே தகப்பனாகி விடுகிறார்கள். இதனால் தேசத்துக்குக் கேடு வருகின்றது. வயது முதிர்ந்தபிறகு விவாகம் செய்வதே இதற்கு மீட்சி.

CHEERFULNESS IN NURSING.

பால் கொடுக்கும்பொழுது மனக் களிப்பு.—தாய்மார்கள் பிள்ளைக்குப் பாலூட்டும்போது எவ்வித விசனம், கவலை, பயம், திகில் முதலியவை இல்லாதவர்களாய்க் கூடியவரையில் மனக் களிப்பு, திருப்தி முதலியவை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், மனதி லுண்டாகும் விசனம், கவலை, பயம், திடுக்கிடுதல் முதலியவைகளால் அச்சமயங்களில் ஊட்டும்பாலில் தோஷ முண்டாகி அப்பால் குழந்தைக்கு அஜீரணம், மந்தம், பேதி, ஜுரம், வலிப்பு முதலிய ரோகங்களை யுண்டாக்கி அபாயத்துக்கு ஹேதுவாக்கிவிடும் என்பதே காரணம்.

MISS MACLEOD.

மிஸ் மாக்ளியாட்.—சென்ற வருஷத்தில் லெப்டினெண்டு பாய்ட் அலெக்ஸாண்டர் என்ற ஓர் இங்கிலீஷ் ராணுவ உத்தியோகஸ்தர் மத்திய ஆப்பிரிக்காவில் தன் பட்டாளத்துடன் போயிருந்தபோது, அவ்விடத்தின் வெப்பம் தாள முடியாமல் வியாதிப்பட்டு சூாட் என்ற ஏரிக்கு ஸமீபத்தில் மாணமடைந்து ஸமாதியில் அடக்கம் பண்ணப்பட்டார். அவர் இங்கிலாண்டை விட்டுப் புறப்படுமுன் ஸர் ரெஜிநால்ட் மாக்ளியாட் என்பவருடைய மகளை மணந்து கொள்ளுவதாக நிச்சயார்த்தம் செய்துவிட்டுப்போயிருந்தார். ஐரோப்பியருடைய சாங்கியப் பிரகாரம் அவர்களிருவரும் ஒருவரொருவரை மிக அன்புடன் நேசித்து வந்தார்கள். தன்னை விவாகஞ் செய்ய வேண்டிய காதலன் ஆப்பிரிக்காவில் மாண்டானென்று மாதானவள் கேள்விப்பட்டவுடன் துக்கத்தில் மூழ்கினாள். தனக்குப் புருஷனாக வேண்டிய அவ்வாலிபன் செத்த விடத்தைத் தரிசித்து அங்கு ஓர் ஸலவைக் கல் சிலுவை நாட்டிவிட்டு வரவேண்டுமென்று தீர்மானஞ் செய்தாள். அப்படியே அவள் சிலரைத் துணையாகக் கூட்டிக்கொண்டு கப்பலேறி ஆப்பிரிக்காவில் போயிறங்கி வனாந்தாம் வழியாய் கடும் பயணம் செய்து சூாட் ஏரிக்கரை போய்ச் சேர்ந்தாள். இதற்குள் அவள் பிரயாணப்பட்டுப் போய்ப் பல மாதங்க ளானபடியால், அவளும் அவள் கூட்டாளிகளும் காப்பிரிகளால் கொலை செய்யப்பட்டார்களென்று இங்கிலாண்டில் பிரஸ்தாபமாயிற்று. ஆயினும் கடைசியில் வந்த தந்தி ஸமாசாரத்தில் அம்மாது சிரோன்மணியானவள் தன் காதலன் கல்லறையில் கண்ணீர் சிந்தி, கற்சிலுவை ஸ்தாபித்துவிட்டு மீண்டும் இங்கிலாண்டுக்குத் திரும்பி வருகிறதாகத் தெரிய வருகிறது. இதுவரையில் வெள்ளைக்காரரில் பெண்பாலர் அவ்வளவு தூரம் ஒருபோதும் போனதில்லை. ஆகையால், மிஸ் மாக்ளியாட்டினுடைய தைரியமும் புருஷ பக்தியும் வியக்கத் தக்கதே.

THE LACE INDUSTRY.

ஜரிகைத் தொழில்.—திருநெல்வேலியில் ஸாராடக்கர் காலேஜைச் சேர்ந்த மிஸ்ஸெஸ் கேன் என்னும் ஒரு ஆங்கில ஸ்திரீ கிறிஸ்தவப் பெண்கள் நூல் ஜரிகை வேலை செய்வதைப்பற்றி எழுதின வியாஸத்தை ஒரு பாதிரிக் கூட்டத்தில் மிஸ் ஹோவர்ட் வாசித்தார். இந்த ஜரிகைத் தொழிலை இந்திய ஸ்திரீகள் வெகு காலமாய் செய்து வருகிறார்கள். அதற்கு மாதிரிகள் போட்டு அந்தத் தொழிலை விருத்திக்குக் கொண்டுவருவதை மிஸ்ஸெஸ் கேன் கடமையாய் ஏற்றிருக்கிறார். இந்தத் தொழிலைச் செய்து மாஸம் 3000-ரூபாய்வரையில் ஜரிகை விற்கப்படுகிறது. ஸராஸரி மாஸம் 6-ரூபாய் முதல் 10-ரூபாய் வரையில் ஒரு ஸ்திரீ சம்பாதிப்பாளானதால், குடும்பத்தின் வரும்படிக்கு அது உதவியாகிறது. இந்த ஸ்திரீகள் ஒரு சங்கமாய்ச் சேர்ந்து அழுக்கா யிருப்பவர்களும் சிரங்குள்ளவர்களும் ஜரிகை செய்யக்கூடாதென்று தடுத்திருக்கிறார்கள். இந்த ஜரிகைத் தொழிலை இன்னும் விருத்தி செய்யும்படி இந்த மிஷனரி ஸொஸைடியானது ஒரு ஜரிகை நிபுணரைத் தருவித்து அந்த நிபுணர் இந்திய ஸ்திரீகளுக்கு மாதிரிகள் வரைந்து காட்டியும் ஜரிகைகளை மாதிரியாகத் தருவித்தும் இந்தத் தொழிலை ராஜதானியில் பரவும்படி செய்யக்கூடாதா வென்று மிஸ் ஹோவர்ட் கேட்க, வந்திருந்தவர்களிற் பலர் அதை அங்கீகரித்து அம்மாதிரி செய்யக் கூடுமென்று சொன்னார்கள். இந்த ஜரிகைத் தொழில் நமது வீட்டுத் தொழில்களில் ஒன்றாக அமைந்து நமது ஸ்திரீகள் வீட்டி லிருந்தபடியே சம்பாதிக்க இயலுமானால், கவர்ன்மெண்டும் இதில் கவனம் செலுத்தலாம். வீட்டுத்தொழில்களில் நமது ஸ்திரீகள் செய்யக்கூடியன பல இருக்கின்றன. அவைகளைப் பற்றிப் பாதிரிகள் மட்டுமல்ல, கவர்ன்மெண்டும் ஜனத் தலைவர்களும் கவனிக்கவேண்டும்.

# DEPARTMENTAL NOTES.

# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்.

### MANURE FOR ONIONS.

**வெங்காயத்துக்கு எரு.**—இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வெங்காயத்துக்கு மனிதர் மலத்தைப் பலமுறைகளிலும் போடுவார்கள். மாட்டெருப் போடுகிறதானால், ஒரு ஏக்கருக்குப் பதினைந்துவண்டி முதல் இருபது வண்டிக்குமேல் எரு அதிகமாகாது. பச்சைக் குழைப்பசளை போடுகிறதானால், பயிருக்குப் போதிய பசளை கொடுப்பதற்குப் பின்னும் எலும்புத் தூளும் சாம்பலுஞ் சேர்த்துப் போடவேண்டி வரும்.

### TEN AGRICULTURAL COMMANDMENTS.

**பத்து விவஸாயக் கற்பனைகள்.**—நல்ல தானியங்களைப் பெறவேண்டுமானால், பின் வருவனவற்றைச் செய்க:—

(1) ஆழமாய் உழு (2) மேல் நிலத்தைக் கட்டி இல்லாமல் தட்டி வை (3) பூமியைச் சமமாய்த் தட்டு (4) மழையில்லாக் காலத்தில் நிலத்தைச் சும்மா விட்டுவை (5) ஸமயத்தில் நிலத்திற்கு எருவடி (6) புல் பூண்டுகளை களையெடுத்து விடு (7) சீக்கிரம் அறுவடையாகக் கூடிய தானியங்களை நடு (8) பச்சைத் தழையை அடி (9) ஆடுமாடுகளை வைத்துக் கொள் (10) ஒரு தடவை நட்டதை அடுத்த வருஷத்தில் நடாதே. இந்தக் கட்டளைகளை ஒரு புத்திமான் இடுகிறார்.

### WATER BUCKETS.

**தண்ணீர் இறைசால்கள்.**—தமிழ் ஜில்லாக்களில் பயிரிடும் குடிகள் ஜலம் இறைப்பதற்கு இதுவரையில் உபயோகித்து வந்த தோல்பறிக்குப் பதிலாக இரும்பு இறைசாலை உபயோகித்து வருகிறார்கள். ஏனெனில், தோல்பறியில் சீக்கிரம் தொண்டி விழுந்துவிடுகிறது. இதை ரிபேர் செய்ய ஒரு சக்கிலி வேண்டியிருக்கிறது. இவன் செய்யும் வேலைக்குச் சாகுபடியில் ஒரு பங்கு குடித்தனக்காரர் அவனுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படி ஒரு ஆளிருந்துங்கூட தோல்பறிகள் தொண்டியுள்ளனவாயிருப்பதால், அவைகளில் மொள்ளப்படும் ஜலத்தில் பெரும் பாகம் அது ஜலத்தைவிட்டு மேலே வருவதற்குள் கிணற்றிலேயே விழுந்து விடுகிறது. இறைக்கும் எருதுகளுக்கு வீண் சிரமமே ஒழிய ஜலம் போதுமான அளவு குறித்த காலத்தில் இறைக்கப்படுவதில்லை. மேலும் தோல்பறிகளின் விலையும் இரும்பு இறைசாலைவிட அதிகமாயிருக்கிறது. இவ்விஷயங்களை அறிந்த சில பயிரிடுவோர் இரும்பு இறைசாலை உபயோகித்து வருகிறார்கள்.

ஒரு தோல்பறிக்குக் குறைந்தது 12 ரூபா விலையாகும். இரும்பு இறைசால்களின் விலை பின் வருமாறு:—

| | குறைந்த விலை | அதிக விலை |
|---|---|---|
| 30 காலன் கொள்ளும் கோண வடிவமான இறைசால் | 2-8-0 | 3-8-0 |
| 35 காலன் கொள்ளும் கோண வடிவான இறைசால் | 3-4-0 | 3-8-0 |
| 30 காலன் கொள்ளும் வட்டமான இறைசால் | 3-10-0 | 4-0-0 |
| 35 காலன் கொள்ளும் வட்டமான இறைசால் | 4-8-0 | 5-0-0 |

இரும்பு இறைசால்களுக்குத் தோல் கழுத்துகள் வேண்டும். தோல் கழுத்தொன்றுக்கு ரூபா ஆறு ஆகும். இத்துடன் உபயோகிக்கும் இறைசால் வட்டமானதாயிருந்தால், குறைந்தது 10 வருஷங்களிருக்கும். ஜாக்கிரதையாய் உபயோகித்தால், 15 வருஷங்களுமிருக்கும். கோண வடிவானதாயிருந்தால், குறைந்தது 4 வருஷங்கள் கெடாமலிருக்கும்.

### REVENUE SETTLEMENT.

**ரெவினியு ஸெட்டில்மெண்டு.**—கவர்ன்மெண்ட் லாண்ட் ரெவினியூ செட்டில்மெண்ட் விதிகளில் முக்கியமானவை:—(1) செட்டில்மெண்டை 30 வருஷத்துக்கொருமுறை புதிப்பிக்கவேண்டும்; (2) விவஸாயச்செலவுகளைத் தள்ளி பாக்கி கிடைக்கும் லாபத்தில் பாதியைப் பணமாக்கி அது கவர்ன்மெண்டுக்குரிய வரி; (3) ஒருதரம் செட்டில்மெண்டாய் விட்டால், மறுபடியும் செட்டில்மெண்ட் செய்யுங் காலத்தில் விலைவாசிகளைப் பற்றி மட்டும் அஸெஸ்மெண்ட் குறிப்பிடப்பட வேண்டும்; (4) விவஸாயிகளின்

செலவில் நிலத்தில் செய்யப்பட்ட திருத்தங்களினுல் விளைச்சல் அதிகமாகும் பக்ஷத்தில் அதற்கு வரி போடக்கூடாது.

இவைகள் செட்டில்மெண்டின் முக்கியமான விதிகள். சில வருஷங்களுக்கு முன்னுல் செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்கெனவேயுள்ள அஸெஸ்மெண்டில் நூற்றுக்கு 15-க்கு அதிகமாக அஸெஸ்மெண்ட் விதிக்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார் ரூல் செய்துகொண்டிருந்தார்கள். அது பிற்பாடு கவர்ன்மெண்டுக்கு அஸௌகரியமாகக் காணப்பட்டபடியால் அந்த ரூலை விட்டுவிட்டார்கள். இம்மாதிரி கவர்ன்மெண்டே செய்திருக்கும் ரூல்கள் தங்களுக்கு அஸௌகரியமென்று இந்தியாக் கவர்ன்மெண்டினுடைய பிரேரணையாலும் மற்றெந்தக் காரணத்தினுலும் மாற்றப்படாமலும் விடுபட்டுப் போகாமலும் இருக்கும் பொருட்டு மேற்கண்ட செட்டில்மெண்ட் விதிகள் மாகாணச் சட்ட சபை செய்த விதிகளாக வேண்டும். அப்போது மறுபடியும் அந்த விதிகளைச் சட்ட சபை மாற்றினுலன்றி இந்தியாக் கவர்ன்மெண்டாவது மாகாணக் கவர்ன்மெண்ட்களாவது மாற்ற முடியாது. இப்போதிருக்கிறபடி செட்டில்மெண்ட் செய்யும்போதெல்லாம் குடிகளுக்கும் செட்டில்மெண்ட் அதிகாரிகளுக்கும் வித்தியாஸம் நேரிடும்போது இந்த வித்தியாஸம் செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தர்களால் ஒரு பக்கமாய்த் தீர்மானம் செய்யப்படுகிறது. குடிகள் என்ன சொன்னுலும், பிரயோஜனப்படாமற் போகிறது.

AGRICULTURAL LABOURERS.

**விவஸாயக் கூலிகள்.—** விவஸாயத்துக்குக் கூலிகள் அகப்படுவது வரவர சிரமமாகிக்கொண்டு வருகிறது. இதற்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவது நேட்டால், மோரீஸ், முதலிய அயல் நாடுகளுக்குக் கூலிகள் போய்விடுவது.

இரண்டாவது நமது தேசத்திலேயே மலைகளில் காப்பி தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தி அங்கே வேலை செய்வதற்கென்று முன் கூட்டியே கங்காணிகள் மூலமாய் பணங் கொடுத்து ஒப்பந்தம் செய்து வேலையாட்களை மலைகளுக்குக் கூட்டிக்கொண்டு போய்விடுகிருர்கள். இப்படிப் போகும் ஜனங்களை ஆயிரக்கணக்காக மதிப்பிடலாம். மூன்ருவது ரெயில்வே (இருப்புப்பாதை) ஸ்தானங்களிலும், மராமத்துகளிலும், கைத்தொழில் சாலைகளிலும் முன்னிலும் அதிகமான வேலையாட்களை வைத்து அவரவர்கள் தரத்துக்குத் தக்கதாகச் சம்பளம் ஏற்படுத்தி இருப்பது. நான்காவது சர்க்கரை ஆலைகள், நெசவு யந்திரங்கள் முதலியவைகளில் லக்ஷக்கணக்கான வேலையாட்கள் அமர்ந்துகொண்டிருப்பது—இவை போன்ற அனேக காரணங்களினுல் இப்போது வரவர சில வருஷங்களாக விவஸாயக் கூலியாட்கள் அனேக இடங்களில் அகப்படுவது அரிதாயிருக்கிறது. அகப்பட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கும் கூலி முன்னிலும் மூன்று மடங்கு அதிகமாயிருக்கிறது. விவஸாய வேலைகளை ஸாதாரணமாய் முன்செய்து வந்த சில ஜாதியார்களுக்குப் பொதுவாகப் பாதிரிகள் கல்வி கற்பித்துவிட்டதனுல், அவர்களில் அனேகர் தற்காலத்தில் மற்ற ஜாதியாரைப்போலவே ஸர்க்கார் உத்தியோகம் முதலான பல ஜீவனங்களிலும் அமர்ந்துகொள்ள ஏதுவாயிற்று.

THE MADRAS AGRICULTURAL DEPARTMENT.

**சென்னை விவஸாய இலாகா.—** சென்னை விவஸாய இலாகா அதிகாரிகள் இந்தவருஷம் கம்போடியாப்பருத்தியைப் பாலூர்ப்பண்ணையில் ஏராளமாய்ப் பயிர் செய்து பார்ப்பதோடு போர்போன் தீவுகள் அமெரிக்கா போன்ற நாடுகளில் பயிராகும் பருத்தியையும் பரீக்ஷார்த்தமாய்ப் பயிர் செய்து பார்க்கப் போகிருர்கள். பாலூரில் விவஸாயக் கருவிகள் செய்ய ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப் போகிருர்கள். கோயம்புத்தூரில் வியாபார முறையில் ஒரு பால் தயிர் வெண்ணெய்ச் சாலை வைத்து அதைக் கவர்ன்மெண்டார் நேரில் நிருவகிக்கப் போகிருர்கள். பெரியாற்றுப் போக்கிலுள்ள உவர் நிலங்களில் விவஸாய ரஸாயன சாஸ்திரி இப்போது செய்து வரும் வேலையை நிறுத்திவிடுவதாய்ச் சொல்லுகிருர். கவர்ன்மெண்ட் தாவர சாஸ்திரி கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வளரும் செடிகள் மரங்கள் இவைகளின் இயற்கையைச் சோதிப்பதில் கவலை செலுத்துவார். கம்பு சோளம் இவைகளில் விழும் நோய்களைச் சோதிப்பதோடு கோதாவரி கிருஷ்ணு ஜில்லாக்களில் புனங் குறுத்துக்கள் சம்பந்தமாய் அவர் செய்து வரும் வேலையை கவர்ன்மெண்ட் மைகாலஜிஸ்ட் கவனிப்பார். தென் கன்னடத்தில் பாக்கு மரங்களில் பூச்சிகள் விழாதிருக்க என்ன உபாயங்கள் செய்யப்படலாமென்றும் கவனிக்கப்படும்,

## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

### THE INDIGO INDUSTRY.

**நீலி வியாபாரம்.**—இந்தியாவில் சில வருஷங்களுக்கு முன் பல இடங்களில் நீலிப் பயிர் செய்யப்பட்டுவந்தது. நீலிப் பயிரிலிருந்து நீலிச் சாயத்தை எடுக்க பல பாக்டரிகளும் நடைபெற்று வந்தன. 1896-ம் வருஷத்தில் நீலி வியாபாரம் அதி உன்னத நிலையி லிருந்தது. 5,35,45,112 ரூபா பெறுமான 187,337 பாரமுள்ள நீலி இந்தியாவிலிருந்து வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி யாயிற்று. இவ்வியாபாரம் மிகவும்லாபகரமாயிருந்ததால்பயிரிடுவோர்நீலிப்பயிர் இன்னும் விசேஷமாயும் அதிகமாயும் பயிராவதற்கு நூதன சாஸ்திரீயமான முயற்சிகளைச் செய்யாமலிருந்துவிட்டார்கள். இப்படியிருக்க, ஜர்மனி தேசத்தில் நீலிச்சாயத்தை சிலபொருள்களை ரஸாயனமுறையில் சேர்த்துச் செய்யலா மென்றும், இப்படிச் செய்யப்பட்ட செயற்கை நீலிச் சாயம் இயற்கை நீலிச் சாயத்தைவிட விலை குறைச்சலா யிருக்கிற தென்றும் நூதனமாய்ச் சில ரஸாயன நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தக்காரணத்தால் நீலி ஏற்றுமதி இந்தியாவிலிருந்து வருஷா வருஷம் குறைந்துவரத் தொடங்கிற்று. 1909-ம் வருஷத்தில் ரூபா 35,18,154 மதிப்புள்ள 18,061 பாரம் நீலிதான் ஏற்றுமதி செய்யப்பட்டது. பாரன் ஸ்காட்கி என்ற ஒரு ஜர்மனியப் பிரபு சென்னைக்கு வந்திருக்கிறார். இவர் செயற்கை நீலியைவிடக் குறைந்த விலைக்கு இயற்கை நீலியை விற்க, நூதன சாஸ்திரிய முறையில் நீலியைப்பயிரிட்டால், சாத்தியமாகுமென்று சொல்லுகிறார். இவர் பீஹார் ப்ளாண்டர்களிடம் தம் யோஜனையைத் தெரிவித்தார். சாஸ்திரப் பரீக்ஷைகள் செய்து பார்த்ததில் இவர் சொல்வது உண்மையென ருஜுவாயிருக்கிறது.

1. ஜாவா, நேடால் நீலி விதையை இங்கு பயிரிடுவதால், இங்கு பயிராவதைவிட $1\frac{1}{2}$ மடங்கு அதிக விளைவு உண்டாகிறது.

2. நீலிச் சாயத்தை நவீன சாஸ்திர முறைப்படி பயிரிலிருந்து எடுப்பதால், நீலிஅதிகமாய்க் கிடைக்கிறது.

இவர் சொல்லுகிறபடி இந்த ராஜதானியில் நீலி பயிரிடுவோர்கள் செய்து பார்ப்பார்களானால். க்ஷீண கதியடைந்து வரும் நீலிப் ப்யிரையும் நீலி வியாபாரத்தையும் அவைகள் முன்னிருந்த உன்னத ஸ்திதிக்கு உயர்த்திவிடலா மென்று தோன்றுகிறது. இவ்விஷயத்தை விவஸாயச் சங்கத்தாரும் சென்னைக் கவர்ன்மெண்டாரும் கவனிப்பார்களாக.

### A LAUNDRY IN BURMA.

**பர்மாவில் ஒரு துணி சலவை செய்யும் கம்பெனி.**—இப்போது பர்மாவில் 'பர்மா மாடல் லான்டிரி லிமிடெட்' என்னும் கம்பெனி யொன்று துணிகள் வெளுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டு ஷேர்கள் (பங்குகள்) சேர்க்கப்பட்டு வருகின்றன. இதற்கு மானேஜிங் டைரெக்டர் மாங்லாபூ என்பவர். இவர் இன்ஸீனில் டிஸ்டிரிக்ட் ஓவர்ஸியராக இருந்து, ரஜாவின்பேரில் சீமைக்குப் போய் இந்த வித்தையைக் கற்றுக்கொண்டு வந்ததாக அறிகிறோம். இதற்கு மூலதனம் ரூபாய் 30,000, பங்கு ஒன்று பத்து ரூபாயாக 3000 பங்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நல்ல உத்தியோகங்களைச் செய்துவரும் பர்மிய கனவான்கள் இதற்கு டைரெக்டர்களாக இருக்கிறார்கள். இன்ஸீனில் ஜயோகோன் ஸ்டேஷனுக்கருகாமையில் மெஷின்சாலை இதற்காகக் கட்டப்போகிறார்கள். இங்கிருந்து ஆடைகளைச் சுத்தம் செய்து அப்போதைக் கப்போது ரெயில் வழியாக ஜனங்களுக்கு 'சலவைகள்' அனுப்பப்படும். ரங்கூனுக்கும் இன்ஸீனுக்கும் மத்தியில் 66 வண்டிகள் பிரதிதினமும் ஓடுகிறபடியால், சலவை செய்த வேஷ்டிகள் தாமதமில்லாமல் வந்து சேரும். இது ஒரு மாதத்தில் அரை லக்ஷம் வேஷ்டிகளுக்கு மேல் வெளுக்கும். மெஷின் விலைரூபாய் 15,000. கட்டிடம் முதலிய செலவு ரூபாய் 15,000. எல்லாச் செலவும் போக வருஷம் ஒன்றுக்குக் குறைந்தது ரூபாய் பதினாயிரம் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உருப்படி ஒன்றுக்கு ஒரு அணா சார்ஜு செய்யப்படும். மெஷினால் சலவை செய்தால், சீக்கிரத்தில் துணி கிழிந்துவிடும் என்று அநேகர் பயப்படுகிறார்கள். இந்தப் பயத்திற்குக் காரணம் இல்லை. ஏனெனில், இப்போது இருக்கும் மெஷின்கள் 20 வருஷங்களுக்கு முன் இருந்தவைகளைப் பார்க்கிலும் நல்லவைகள். ஆகையால், வேஷ்டிகள் பழுதாகாமல் சலவை செய்துவரும். மேலும், இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் மாத்திரம் ஐயாயிரம் மெஷின்கள் வேலை செய்து வருகின்றன. துணி சீக்கிரத்தில் கிழிவதா யிருந்தால், இவ்வளவு மெஷின்களுக்குப் பிழைப்பிருக்குமா?

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

PRIMARY EDUCATION.

**கீழ்த்தரப் படிப்பு.**—ராஜப் பிரதிநிதி ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் கோகலே கொண்டுவந்த கீழ்த்தரப் படிப்பு மசோதாவை மதராஸ் ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸ் முற்றிலும் அங்கீகரித்து சென்னை கவர்ன்மெண்டு அந்த மசோதாவை ஒற்றுணர்ச்சியுடன் ஸாதகமாய்க் கவனிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டது.

MODEL HIGH SCHOOLS.

**மாடல் ஹைஸ்கூல்கள்.**—சென்னை மாகாணத்தில் மாடல் (மாதிரி) ஹைஸ்கூல்கள் சில ஸ்தாபிப்பதைப் பற்றி மேலதிகாரிகளுக்கு மாகாணக் கவர்ன்மெண்டார் சிபார்சுசெய்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த ப்ரேரணைகளை இப்போது இந்தியா மந்திரி கவனித்து வருகிறார். அம்மாதிரி ஸர்க்கார்ச் செலவில் மாடல் ஹைஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்படக் கூடாதென்று இந்தியாவிலும் இங்கிலாண்டிலுமுள்ள பாதிரிமார்கள் பலமாய் வாதிக்கப்போகிறார்களென்று காண்கிறது. அவர்கள் இப்போது தங்கள் கண்டன விண்ணப்பத்துக்குக் கையெழுத்துக்கள் சேர்த்து வருவதாய்த் தெரிகிறது.

A SANSKRIT SCHOOL.

**ஸம்ஸ்க்ருதப் பாடசாலை.**—ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி அவர்களால் பங்களூரில் ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலை ஸமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை நமது பூர்வீக வேதங்களையும் சாஸ்திரங்களையும் தற்காலத்து ஹிந்துக்கள் மறவாமல் அவைகளைக் கற்று நிலை நிறுத்தும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் ஸ்ரீ ஜகத்குருவுக்காகப் பேசின பிரம்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள், ஹிந்துக்கள் அனாதி காலந்தொட்டு வைதீக லௌகீக சாஸ்திரங்களில் பேர் போனவர்களென்றும், நம் பூர்வீகருடைய நல்லபேரை இக்காலத்து ஹிந்துக்கள் காக்கவேண்டு மென்றும், அதற்காக ஹிந்துக்களெல்லாரும் ஒரே மனதாய் இப்படிப்பட்ட பாடசாலைகளை ஆதரித்து உழைக்க வேண்டு மென்றும் சொன்னார்.

EDUCATION AND THE PROVINCIAL CONFERENCE.

**படிப்பும் ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸும்.** ஸமீபத்தில் கூடிய சென்னை மாகாணக் கான்பரென்ஸில் படிப்பு விஷயமாக அடியில்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) கல்வி கற்றுக்கொடுக்கும் தொழிலுக்கு, பொதுவாய்க் கல்விக்கே, நன்மை யுண்டாகும் பொருட்டு சொந்த ஸ்கூல்களில் வேலை பார்க்கும் வாத்தியார்களுக்காக ஒரு ப்ராவிடென்ட் பண்ட் ஸ்தாபிப்பது அவசியம். ஆகையால், சென்ற 1910-ம் வருஷம் ஜூலை மாஸம் 18-ந்தேதி 418-ம் நெ. உத்தரவில் கண்ட ஸ்கீமைப் புனராலோசனை செய்து, அதிற்கண்ட கஷ்டங்களை வென்று அனுபோகத்தில் வேலை செய்யும்படி அதைச் செய்யவேண்டும். அல்லது திறமையாய் அனுஷ்டிக்கப்படக் கூடிய புதிய ஸ்கீமை ஏற்படுத்த வேண்டும்.

(2) கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களிலும், நடுத்தரப் பள்ளிக்கூடங்களிலும் இப்போதுள்ள கிராண்ட்-இன்-எய்ட் கோட் போதுமான அளவு ஒத்தாசை செய்யாதபடியினால் அதைத் திருத்த வேண்டும்; நடுத்தரப் பள்ளிக்கூடங்களைப் பற்றி அவைகளின் செலவுக்கும் வரும்படிக்கும் உள்ள வித்யாஸத்துக்குச் சரியாய் கிராண்ட்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும். கிராண்ட்-இன்-எய்ட் கோடின் நோக்கங்களுக்காக ஒரு ஸ்கூலின் பிள்ளைகள் சம்பளத்தைக் கணக்கிடும்போது, ஸ்டான்டர்ட் ரேட்டுப்படி அவைகளில் நூற்றுக்குப் பதினைந்து குறைக்க வேண்டும்.

(3) இந்த ராஜதானியில் நடுத்தரப் படிப்பை இன்னும் விசாலப்படுத்தி விருத்தி செய்வதற்குச் சொந்த ஸ்கூல்களை இன்னும் தாராளமாய் ரெகாக்னைஸ் செய்து ஒத்தாசை செய்யவேண்டும். கவர்ன்மெண்ட் மாடல் ஸ்கூல்களுக்காகச் செலவு செய்யப்போகும் நாலு லக்ஷத்துச் சொச்சம் ரூபாயை நடுத்தர ஸ்கூல்களுக்காக கிராண்டாய்க் கொடுக்கும் பக்ஷத்தில் அதுவே நலமாகும். ஆனால் மாடல் ஸ்கூல்கள் அவசியமென்று கவர்ன்மெண்ட் நினைக்கும் பக்ஷத்தில் அவர்கள் ஏற்கனவே வைத்திருக்கும் 4 மாடல் ஸ்கூல்களைச் சேர்த்து 8 ஸ்கூல்களுக்கு அதிகப்படாமல் செய்யவேண்டும்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

SPEED OF BIRDS.

**பக்ஷிகளின் வேகம்.**—ஜர்மனி தேசத்திலுள்ள ராஸிட்டன் என்னும் பட்டணத்தில் பக்ஷிகளின் வேகத்தைக் கண்டுபிடிக்கும் நிமித்தம் ஓரிடம் ஏற்பட்டிருக்கிறதாம். அதில் இரண்டு நாரைப் பக்ஷிகள் ஒன்பதுமாத காலத்தில 6,000 மைல் தூரம் பறந்து போயிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

SUN'S ECLIPSE.

**சூரியகிரஹணம்.**—சூரியனுடைய பிரகாசத்தைச் சந்திரன் மறைக்க அதாவது சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் வர ஒருவித நிழல் ஏற்படுகிறது. இந்த நிழல் பூமியின்மேல் விழுமாயின் நிழல் விழுந்த இடத்தில் சூரியன் மறைந்து காணப்படுகிறது. இதைத்தான் நாம் சூரிய கிரஹணம் என்று சொல்லுகிறோம். சூரிய கிரஹணம் கிருஷ்ண பக்ஷத்தில் தான் ஏற்படும். ஏனென்றால், சந்திரனுடைய நிழலானது பூமியின்மேல் படும்பொழுது அது சூரியனுக்கும் பூமிக்கும் நேராகத்தான் அவைகளின் நடுவில் வர ஏதுவாயிருக்கிறது. சூரிய கிரஹணம் உண்டாகும் காலத்தில் ஹிந்துக்கள் பாப தோஷ நிவாரணமாக ஸ்நானம் செய்வதும், வீடுகளைச் சுத்தி செய்வதும், தான தர்மங்கள் செய்வதும் வழக்கம். கிரஹணத்திற்கு முன் பின் மூன்று நாட்கள் தோஷமென்று சொல்லுவார்கள். மாந்திரீகர்களும் மற்றும் வைதீகர்களும் அக்காலங்களில் ஜபங்கள் செய்து தங்கள் மந்திரங்களின் மகிமையை அதிகப்படுத்திக் கொள்வார்கள்.

LIGHTNING CONDUCTORS.

**மின்வாங்கி.**—மின்னலின் காரணத்தை ஊகித்தறிந்த பென்ஜமின ப்ராங்லின் என்னும் விவேக சிகாமணியே அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நிவாரணத்தையும் கண்டுபிடித்தார். வஸ்துக்களின் கூர்மையான பாகங்களில் மின்சாரம் தங்காமல் ஆகாயத்தினுள் பாய்ந்துவிடுமாகையால், ஊசி போன்ற கூர்மையுள்ள சுமார் 9 அடி நீளம் 3 அங்குலம் பருமனுள்ள இரும்புத் தடியை கட்டிடத்தின் உச்சியில் நிறுத்தி அதற்கும் பூமிக்கும் ஸ்திரமான சம்பந்தமிருக்குமாறு அதிலிருந்து இரும்புக்கம்பியை சுவர் வழியாய் இறக்கி பக்கத்துக் கிணற்றிலாவது, கிணறில்லாவிடில், அடுப்புக்கரி நிறைந்துள்ள ஆழக் குழியிலாவது பதித்துவிட, மின்னலால் கட்டிடத்துக்கு யாதொரு சேதமும் உண்டாகாது. அளவற்ற திரவியம் செலவழித்துக் கட்டின மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் மேற்கூறிய லைட்னிங் கண்டக்டர் அல்லது மின்வாங்கி என்னும் சிறு கருவியால் மின்னலின் சடுதி நாசத்தினின்றுங் காக்கப்படுமாகையால், வானத்தை யளாவும்படியான கட்டிடம் கட்ட விரும்பும் நம் தேசத்துக் குபேரர்கள் மின்வாங்கி என்னும் அற்பக் கருவியைக் கட்டிடத்தின் அங்கமாகப் பாவிக்க வேண்டும்.

A FIRE EXTINGUISHER.

**நெருப்பை அவிக்கும் கருவி.**—ப்ரான்ஸ் தேசத்திலுள்ள சங். டானீ என்னும் ஓர் ஸ்வாமியார் அகோர தீப்பற்றியெரிகையில் உடனே அவிக்கக் கூடிய ஒரு நூதனக் கருவி கண்டுபிடித்திருக்கிறாராம். தீ எவ்வளவு மும்முரமாய்ப் பரவியிருந்தாலும் 9 விநாடியில் அவிக்கக் கூடியதா யிருக்கிறது. உலகத்துக்கே இது பேருபகாரம். நாளதுவரையில் இப்பேர்பட்ட கருவியில்லாமையால் விளைந்த நஷ்டத்துக்கு அளவில்லை. இதன் அருமையை ப்ரான்ஸ் தேசத்தின் சாஸ்திரிகளும் ஸர்க்காரும் முதலாய்ப் பரீக்ஷித்துப் பகிரங்கமா யொப்புக்கொண்டார்கள். இப்பேர்ப்பட்ட அரியலோகோபகாரம் செய்த ஸ்வாமியார் இன்னொரு வியக்கத்தக்க அருமையான தருமமுஞ் செய்திருக்கிறார். இந்தக்கருவியை ஏராளமான திரவியங்கொடுத்து வாங்குவதாய் அநேக ஐசுவரியவான்கள் அவரை மிகவும் கெஞ்சினாலும் அதற்கவர் உடன்படாமல் அக்கருவியா லுண்டாகும் பொருளில் ஒரு பெரும் பங்கை ப்ரான்ஸ் தேசத்து ஏழைக் குருக்களின் சம்ரக்ஷணைக்காகக் கொடுத்துவிட வேண்டிய தென்றுமட்டும் நிபந்தனை பேசிக்கொண்டு கருவியைச்சாஸ்திரிகளிடம் கொடுத்துவிட்டார்.

---

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

---

### PRECAUTION AGAINST PLAGUE.

**ப்ளேக் வராமல் பாதுகாப்பது.**—ப்ளேக்கால் பிடிக்கப்பட்ட ஸ்தலங்களிலிருந்து வருபவர்களை ஊரில் சேர்க்குமுன், அவர்கள் துணிகளை எல்லாம் நன்றாய் வெயிலில் காயப்போட்டால், க்ருமிகளெல்லாம் மாண்டுவிடுகின்றனவென்று பரிசோதனைகளாலும் ஆராய்ச்சிகளாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அடியில் காணும் விதிகளைக் கட்டாயம் கவனிக்கவேண்டும்.

(1) துணிகளைக் காயப்போட வெட்ட வெளியானதும் மணலுள்ளதும் ஸமமானதுமான ஓர் இடம் வேண்டும். இதற்குச் சமீபத்தில் பச்சைகளாவது, மரங்களாவது இருக்கக்கூடாது ஏனெனில், சூரிய காந்தி முழுமையும் படுவது அவசியம்.

(2) தரை மட்டமாயிருக்கவேண்டும். கற்களாவது பசும் புல்லாவது இருக்கக்கூடாது.

(3) மணல் பாங்கான இடமில்லாவிட்டால், அந்த இடத்தில் 3 அங்குலம் வெட்டி மணலை ஸமமாய்ப் பரப்பவேண்டும்.

(4) துணிகளைச் காயப் போடுமுன் மணல் நல்ல சூடுடையதாவென்று பார்க்கவேண்டும். ஆகையால், காலை 10 மணிக்கு மேலேயே காயப்போடத் துவக்க வேண்டும்.

(5) மாலை 4 மணிக்கு மேல் துணிகளைக் காயப் போடுவதில் பயனில்லை. ஏனெனில், மணலில் சூடு குறைந்துவிட ஆரம்பிக்கிறது.

(6) துணிகளை மடித்துப் போடக்கூடாது. துணிகள் குறைந்தது ஒரு மணி அவகாசம் காயவேண்டும்.

(7) மெத்தைகள், தலையணிகள் முதலியவைகளைத் திருப்பிப் பலமுறை காயப் போடுதல் அவசியம்.

(8) துணி காயுமிடத்துக்குச் சுற்றிலும் குறைந்தது 3 அடி மணலிருக்கவேண்டும். இல்லாவிட்டால், க்ருமிகள் சூட்டுக்காக மெல்ல ஊர்ந்து சென்று பிழைத்து வியாதியைப் பரவச் செய்யும்.

(9) துணியை உலரப்போடுமுன் மணல் தரையில் கால்நடைகள் சென்று காலடி வைக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் துணிகளுக்குச் சமமாய்ச் சூடு தாக்காது. க்ருமிகள் இறவா.

### OLD HORSE MADE YOUNG.

**கிழக் குதிரையை வாலிபம் ஆக்கியது.**—ரேடியம் என்ற வஸ்து மிகுந்த காந்தியுள்ளது. அதன் விலை அஸாத்தியமானது. யோக்கியதை மிகுந்தது. அது சிந்தாமணியே போலும். ஆல்போர்ட்டிலுள்ள பசு வைத்தியப் பள்ளிக்கூடத்துப் புலவரான கேப்ரீல் பெடிட் என்பவர் கிழக் குதிரை ஒன்றிற்கு இந்த ரேடியத்தை ரக்த நரம்பில் கட்டினர். அவர் புகட்டிய ரேடியம் கொஞ்சம் அதிகமென்றே தோன்றினபோதிலும் கெடுதி ஒன்றும் அதனால் உண்டாகவில்லை. குதிரை புதிதாய் உயிர்ப்பிக்கப்பட்டது போலாயிற்று. சுறுசுறுப்பு மிகுந்து துள்ளிக் குதித்ததாம். சதை பற்றியது. புஷ்டி மிகுந்து விளங்கியது. மேற்சொல்லியபடி புகட்டிய சில நாளைக்கெல்லாம் கொஞ்சம் ரேடியம் வெளி வந்துவிட்டது. ஆனபோதிலும் அதன் ரக்தத்தில் ரேடியம் சம்பந்தம் இருந்ததாகத் தெரிய வருகிறது. அதன் உடம்பில் சிவப்பு ரக்த கோளங்கள் அதிகரித்தன. அது ஆரோக்கியமான புஷ்டிக்கு அறிகுறியாகும். இந்த மாதிரி ரேடியம் புகட்டுவதனால் அதன் காந்தியும் சக்தியும் பிரபாவமும் தேகத்தில் வெகு காலம் அமைந்திருக்கக்கூடும் என்று அந்தப் புலவர் தீர்மானித்தார். ரேடியத்தை அம்மை குத்துவது போல்தேகத்திற் குத்திப்புகட்டி அதனால் யௌவனதிசை வரும்படிச் செய்யலாமென்று அந்தப் புலவர் மேற்சொல்லிய சோதனைகளின் பயனைக் கொண்டு யூகிக்கிறாராம்.

### CURE FOR STY.

**கண்கட்டிக்கு சிகித்ஸை.**—கொஞ்சம் சோடாப் பவுடரை வெள்ளைத் துணியில் முடிந்து அது நனையும்படி வெந்நீர் வார்த்து அந்தச் சூட்டுடனே கண்ணில் வைத்துக் கட்டி இரவு முழுவதும் வைத்து காலையில் எடுத்துவிடவும். உடனே கண்கட்டி ஸௌக்கியமாய்விடும். இன்னும் கொஞ்சமிருந்தால், மறுபடியும் அதுபோலவே வைத்துக் கட்டவும். அல்லது கோழிமுட்டையின் வெள்ளைக் கருவை இறகினால் எடுத்து இரவு படுக்கைக்குப் போகுமுன் கண்கட்டிக்குப் போட்டுக்கொண்டாலும் குணமாகும்.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

VAKIL'S FEES.

**வக்கீல் பீஸ்.**—ஒரு வக்கீல் அல்லது ஸொலிஸிட்டர் தன்னுடைய கக்ஷிக்காரனுக்காக பல வியாஜ்யங்களை நடத்திவந்தால், ஒவ்வொரு வியாஜ்யத்திற்கும் பீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு வியாஜ்யத்தில் இவருக்குச் சேரவேண்டிய பீஸ் பாக்கிக்காக மற்றொரு வியாஜ்யத்தில் எதிர் கக்ஷிக்காரனிடமிருந்து வசூல்செய்த தொகையை உபயோகித்துக் கொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

OWNERSHIP OF RIVERS.

**நதிகளில் பாத்தியதை.**—எல்லா நதிகளும், அவைகளுடைய படுகைகளும், வாய்க்கால்களும், கவர்ன்மெண்டாராலாவது, அல்லது வேறே எவ்விதமாகவாவது, ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்று ருஜூப்படுத்தப்பட்டாலொழிய 1905-ம் ஷூத்திய 3-வது ஆக்டின்படி கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமானவைகள். இதில் வரும் ஜலத்தை ஒரு குறிப்பிட்ட அளவு உபயோகப்படுத்திக்கொள்ள ஒரு ஜமீன்தாருக்காவது, அல்லது இனாம்தாருக்காவது ஈஸ்மெண்டு பாத்தியதை இருந்தபோதிலும், இவர்கள் ஜலத்திற்குத் தீர்வை கொடுக்காமல் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று கவர்ன்மெண்டாருடன் யாதேனும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தாலொழிய இவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளும் ஜலத்திற்குத் தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

SUBSCRIPTION TO A NEWSPAPER.

**ஒரு பத்திரிகைக்குச் சந்தா.**—சில வருஷங்களுக்கு முன் ஆஸ்ட்ரேலியாவில் மெல்போர்ன் பட்டணத்தில் வர்த்தமானப் பத்திரிகைக்குக் கொடுக்கவேண்டிய சந்தாவுக்காக ஒருவர்மேல் பிராது கொடுக்கப்பட்டது. அவனுக்குப் பத்திரிகை சரியாய் வந்து சேர்ந்திருந்தாலும் வேண்டுமென்று வாவில்லையென்று சாதித்தான். அதற்கு ஜட்ஜ், ஒரு ரொட்டி விற்போன் உனக்கு ரொட்டியை விலைக்குக் கொடுப்பானாகில், நீ அதைத் தின்றவுடன் கிரயம் கொடுப்பாயா, இல்லையா? என்று கேட்டார். பிரதிவாதி, மஹா ஸ்வாமி! கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் அது வேறு விஷயம் என்று சொன்னான். ஜட்ஜ் அது வேறு விஷயமாகாது. நீ ரொட்டியை வாயால் தின்றாய், பத்திரிகையைக் கண்கொண்டு சாப்பிட்டாய். இரண்டுக்கும் பேதம் கிடையாது என்று சொல்லி பிராது செலவுத் தொகைகளையும் கொடுக்கும்படி தீர்ப்பு அளித்தார்.

SIGNATURE TO LEASE DEEDS.

**குத்தகைப் பத்திரங்களுக்குக் கையெழுத்து.**—ஒரு குத்தகைப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாக இருந்தபோதிலும், அதில் குத்தகை விட்டவன் கையெழுத்தும் குத்தகை பெற்றுக்கொண்டவன் கையெழுத்தும் இருக்கவேண்டுமென்று இ. லா. ரி. 30. சென்னை, வால்யூமில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் ஒரு கேசில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஸமீபத்தில் விசாரணைக்கு வந்த ஒரு ஸிவில் வியாஜ்யத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்த குத்தகைப் பத்திரத்தில் குத்தகை விட்டவனுடைய கையெழுத்திருக்கவேண்டுமென்பது அவசியமல்லவென்று சீப் ஜஸ்டிஸூம், மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்கும் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

WATER CESS.

**தண்ணீர்த் தீர்வை.**—1865-ம் ஷூத்திய சென்னப்பட்டணம் 7-வது ஆக்ட்டாகிய ஜலத் தீர்வை ஆக்ட் 1-வது பிரிவின்படி ஒருவனை ஷெ தீர்வைக்குள்ளாக்கவேண்டுமானால், அவனுடைய நிலத்திற்கு கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான ஜலம் பாய்ந்திருக்கவேண்டும். அந்த ஜலம் யாருடைய நிலத்தின் வழியாகப் பாய்ந்தபோதிலும் சரி, ஜலம் கவர்ன்மெண்டாருடையதாக இருந்தால் போதுமானது. அந்த நிலத்திற்குப் பாயும் ஜலமெல்லாம் கவர்ன்மெண்டாருடையதாகத் தானிருக்கவேண்டுமென்பதில்லை. பிரிவு கூறுவதெல்லாம் கூடி இரண்டே விஷயங்கள் (1) கவர்ன்மெண்டார் மூல்யமான ஜலம் நிலத்திற்குப் பாயவேண்டும். (2) ஷெ பாய்ச்சல் பயிருக்கு நன்மையைப் பயக்கக்கூடியதென்றும், விளைச்சலுக்கும் போதுமென்றும் கலெக்ட்டர் அபிப்பிராயப்பட வேண்டும் கவர்ன்மெண்டாருடைய ஜலமின்றி வேறே ஜலமும் பாய்ந்து வருகிறதென்று சொல்லும் கக்ஷி ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

LORD CREWE.

**லார்ட் க்ரூ.**—உடம்பு அஸௌக்கியத்தால் வேலையை விட்டிருந்த லார்ட் க்ரூ மறுபடியும் நாளது மேமீ 26-ம் தேதி முதல் இந்தியா மந்திரி ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்துவிட்டார்.

MR. MARSDEN.

**மிஸ்டர் மார்ஸ்டன்.**—டாக்டர் எப். மார்ஸ்டன் என்பவர் சென்னைக் கவர்ன்மெண்டுக்கு சாயத் தொழில் நிபுணராய்போன மார்ச்சு மாதம்25-ந்தேதி முதல் நியமிக்கப்பட்டிருப்பதாகப் பிரசுரஞ் செய்யப் பட்டிருக்கிறது.

SATYA BALA DEVI.

**ஸத்ய பால தேவி.**—ஸ்த்ய பாலதேவி என்ற ஒரு இளம் பிராயமுள்ள வங்காளப் பார்ப்பினி வீணையைக் கைக்கொண்டு சங்கீத சாஸ்திரத்தில் மிகத் தேர்ந்து நமது இந்தியாவில் சங்கீத சாஸ்திரம் க்ஷீண தசை யடைந்திருக்கிற தென்றும், அதை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், பெரு முயற்சி யெடுத்து வருகிறதாகத் தெரிகிறது. ஸமீபத்தில் இந்த ஸத்ய பாலதேவி, அமெரிக்காவில், ந்யூயார்க் பட்டணத்தில், வீணைச் சங்கீதத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்களாம்.

MR. SANDOW.

**ஸாண்டோ.**—இவர் இந்தியாவுக்கு வந்து தம் தேகாப்பியாஸப் பயிற்சி முறைகளைப் பிரத்யக்ஷமாகக் காட்டிச் சென்றார். இவர் தேகாப்பியாஸப் பயிற்சியில் அநேகருக்குப் போதனை செய்து வருகிறார். இவர் போதனையை நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி இளவரசரா யிருக்கும்பொழுது கேட்டு அதன்படி நடந்ததால் மிக்க பயனை அடைந்தாராம். சக்ரவர்த்தி பன்முறை மிஸ்டர் ஸாண்டோவின் தேகப் பயிற்சிச் சாலைக்குச் சென்றிருக்கிறாராம். இவருக்குத் தம்முடைய பிள்ளைகளுடையவும், ஜனங்களுடையவும் தேகப் பயிற்சியில் அக்கரை மிகுதியாயிருப்பதால், மிஸ்டர் ஸாண்டோவுக்கு, ராஜாவுக்கு சாஸ்திரீயத் தேகப் பயிற்சி போதகாசிரியரென்ற புதிய உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிறார். மிஸ்டர் ஸாண்டோ இங்கிலாந்தில் 60 ஆயிரம் பிள்ளைகளுக்குச் சம்பள மில்லாமல் தேகப் பயிற்சி முறையைக் கற்பித்து வருகிறார்.

KING GEORGE AND HUNTING.

**ஜார்ஜ் அரசரும் வேட்டையும்.**—ஜார்ஜ் அரசரும் மேரி அரசியும் டெல்ஹி நகரில் மகுடாபிஷேகம் முடிந்தபின் எந்தெந்த ஊர்களைப் பார்வையிட்டுக் கொண்டு வருவார்களென்று இன்னும் தெரியவில்லை. ஆனால், நேபாள தேசத்தில் அரசர் வனவேட்டையாடச் சகல முஸ்திப்புகளும் செய்யப்பட்டு வருகின்றன. அரசர் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் அரசி சில பட்டணங்களைத் தரிசித்துக் கொண்டு வரலாம். நேபாள தேசத்தின் காடுகளில் நல்ல வேட்டை கிடைக்கும்படியாக இப்போது ஏற்பாடுகள் செய்கிறார்கள். டிசம்பர் மாதம்வரையில் எந்த வேட்டைக்காரரும் காட்டுக்குள் நுழையக் கூடா தென்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். வேண்டியதானால் பலவிடங்களில் கழுக்கட்டைகள் போட்டு அடைப்பு உண்டாக்குவார். துஷ்ட மிருகங்கள் அவைகளுக்குள் காப்பாற்றப்பட்டிருக்கும். வேட்டையாடத் துவக்குகையில் காடு கலைப்பதற்காக 500 யானைகளுக்குமேல் உபயோகிக்கப்படுமெனச் சொல்லப் படுகிறது. நேபாள தேசத்தின் காடுகளில் புலிகளும் சிறுத்தைகளும் எதேஷ்டமாயிருக்கின்றன. ஆகையால் வேட்டைக்குக் குறைவிருக்காது.

LALA MUNSHI RAM.

**லாலா முன்ஷி ராம்.**—கங்கைநதி மலையிலிருந்து சமபூமியில் பாயும் மகா புண்ணிய ஸ்தலமாயும், ஏகாந்தமாயும்,மனஸுக்கு உத்ஸாகத்தைக்கொடுக்கக் கூடியதாயுமுள்ள ஹரித்வார் மகா க்ஷேத்திரத்தில் ஆரிய ஸமாஜத்தார் குருகுல வாஸ ஸ்தாபனம் ஸ்தாபித்து, அதை லாலா முன்ஷி ராம் என்ற தேசாபிமானி நடத்திவருகிறார். லாலா முன்ஷி ராம் ஜலந்தர் நகரத்தில் தமது வக்கீல் தொழிலை விட்டுவிட்டு அந்த க்ஷேத்திரத்தில் உள்ள குருகுல வாஸத்தை நடத்திவருகிறார். அவர் தமக்குள்ள ஸகல ஸொத்துக்களையும் இந்த ஸ்தாபனத்துக்காகக் கொடுத்துவிட்டார். லாலா முன்ஷி ராம் தேசத்திலுள்ள லக்ஷத்தில் ஒருவராகிய தேசாபிமானி.

## FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்

WILL BE SENT OUT.

**வெளியே தள்ளிவிடப்படுவார்கள்.**—நியாயாதிபதி.—நான் தீர்மானம் சொல்லும்பொழுது யாரேனும் குறுக்கே பேசினால், அவர்களைக் கோர்ட்டை விட்டு வெளிப் படுத்திவிடுவேன்.

கைதி.—ஆனால் நான் பேசுகிறேன், என்னை வெளிப்படுத்துங்கள்.

A HORSE'S AFFECTION.

**ஒரு குதிரையின் விசுவாஸம்.**—இங்கிலாந்திலுள்ள உல்வர்ஹாம்டன் என்னும் பட்டணத்தை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரு வண்டிக்காரன் ஸமீபத்தில் இறந்துபோனான். அவனுடைய பிணத்தைப் புதைப்பதற்காகக் கொண்டுபோனபோது அவனுடைய குதிரை பிணத்தின் பிறகே சென்று பிணத்தைப் புதைக்கும் பரியந்தமிருந்து திரும்பி வந்தது. அக்குதிரையின் பெயர் ஜூனே என்பதாம்.

ONLY ONE BALL.

**ஒரே ஒரு பந்துதான்.**—குழந்தையிடம் அன்புள்ள கிழவன்.—துஷ்டப் பயல்களே! இத்தனை நேரம் என் குழந்தையின் உயிரைப் போக்கி இருப்பீர்களே. என்ன நெஞ்சழுத்தத்தோடு இங்கே வந்து பந்தைக் கொடு என்று கேட்கிறீர்கள்?

விளையாட்டுப் பிள்ளைகளில் ஒருவன்.—ஐயா, உம்முடைய பிள்ளையின் உயிர் போகவில்லை. போனாலும் உமக்கு இன்னும் அரை டஜன் பிள்ளைகள் இருக்கிறார்கள். எங்களுக்கு ஒரே ஒரு பந்துதானே இருக்கிறது.

WHIPPED FOR THE GIRL'S HAND.

**பெண்ணிற்காகச் சவுக்கடி படுதல்.**—ஹங்கேரியாவிலுள்ள பஜானென்னும் ஊரில் இருவர் ஒரு குடியானவன் மகளை விரும்பி அவள் முன்னே சென்று தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து, நாங்களிருவரும் சவுக்கா லடித்துக்கொள்ளுகிறோம். இதில் எவன் வெற்றி பெறுகிறானோ, அவனுக்கு நீ மனைவியென்று அவள் முன்னே வீட்டின் தூண் இரண்டைப் பிடித்துக்கொண்டு சவுக்கா லடித்துக் கொண்டார்கள். இருவரும் முடிவில் ஸமமாக மூர்ச்சை யடைந்துவிட்டார்களாம். அவள் யாருக்கு மனைவி யாவளோ!

ASS OR HORSE?

**கழுதையா குதிரையா.**—ஜட்ஜவர்கள், ஒரு லாயரைப் பரிகாஸம் பண்ணவேண்டி "லாயர்வாள்! நாமிருவரும் கழுதையும் குதிரையுமாய் மாறும் பக்ஷத்தில், நீங்கள் எதுவாக வேண்டுமென்று கோருவீர்கள்?" என்று கேட்டார். அதற்கு லாயர், "இது கேட்கவும் வேண்டுமோ! சந்தேகமில்லாமல் கழுதை ஜன்மமே கோருவேன்" என்று பதில் சொன்னார். ஏனென்று ஜட்ஜு கேட்க, "கழுதைக்கு ஒருதடவையாவது ஜட்ஜு வேலை கொடுத்திருக்கிறார்களென்று அறிவோம். ஆனால், குதிரைக்குக் கொடுத்ததாகக் கேட்டதேயில்லை" என்று மறுமொழி சொன்னார்.

PRYING INTO OTHERS SECRETS.

**இன்னொருவர் ஸங்கதியில் பிரவேசித்தல்.**—ஒரு பெரிய மனுஷியர் கடிதம் எழுதிக்கொண்டிருக்கையில் மனுஷியனென்று பெயர் வைத்துக்கொண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்திருந்த ஒருவன் திருட்டுத்தனமாய் எட்டிப்பார்த்து எழுதுவதைப் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது பெரிய மனுஷியர் "மித்திரரத்தினமே; இப்பொழுது நான் எழுதுவது முழுவதையும் ஒரு துன்மார்க்கன் திருட்டுத்தனமாய் எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கிறபடியால், ரகஸியங்கள் ஒன்றும் தெரிவிக்க ஸந்தர்ப்பமில்லை" என்று எழுதவே, மற்றவன், என்னை ஏன் தூஷிக்கிறாய்? என்று அவருடன் சண்டைபோட்டானாம்.

MUNICIPAL VOTE.

**முனிஸிபாலிட்டி வோட்.**—முனிஸிபாலிட்டி மெம்பர் ஆகவேண்டுமென்று ப்ரயத்தனித்துக் கொண்டிருந்த சுப்பிரமணியம் சுப்பாராயரிடம் போய் அவரைத் தனக்கு வோட் கொடுக்கும்படி கேட்க, நிஷ்,படியாகிய சுப்பாராயர் தாம் முன்னாலேயே வேறொருவருக்கு வோட் கொடுப்பதாகத் தாம் ஒப்புக்கொண்டு பேச்சுக்கொடுத்துவிட்ட ஸமாதானத்தைத் தெரிவித்தார். அப்போது சுப்பிரமணியம் ஆ! ஆ! பேச்சுக் கொடுத்தால் மூழ்கிப்போன தென்ன? இப்படிப்பட்ட விஷயத்தில் பேச்சுக் கொடுத்துத் தவறுதல் ஒரு பெரிய தப்பாகாது என்று ஸமாதானம் சொன்னார். அப்படியானால் என் வோட் தங்களுக்கே கொடுக்கிறேன் என்று சொல்லி சுப்பாராயர் சுப்பிரமணியத்தைச் சந்தோஷப்படுத்தி அனுப்பினார்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

PALMYRA WITH BRANCHES.

**கிளையுள்ள பனைமரம்.**—சென்னைக்கடுத்துள்ள எருக்கஞ்சேரியில் பதினைந்து கிளைகளுள்ள பனைமரமொன்றும், செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஈச்சம் பாக்கத்தில் பதின்மூன்று கிளைகளுள்ள பனைமரமொன்றும் இருக்கின்றனவாம்.

A BIRD'S NEST ON A SHEEP'S BACK.

**ஆட்டு முதுகில் பறவைக் கூடு.**—ஆஸ்திரேலியா தேசத்திலுள்ள டெலங்கா என்னும் கிராமத்திலே ஏபர்னர் என்பவருடைய மந்தையிலிருந்த ஒரு ஆட்டு முதுகின் கம்பளி ரோமத்துக்குள்ளே ஒரு பறவை கூடுகட்டி முட்டை இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாம். இது அதிசயமல்ல. கேப்காலனி நாட்டில் பிடிக்கப்பட்ட ஒரு காட்டுக் குதிரை வாலிலே ஒரு குருவிக் கூடு இருந்ததாக அத்தேசத்தில் பிரசுரமாகும் கில்டு என்னும் பத்திரிகைக்கு ஒருவர் எழுதுகிறார்.

A STRANGE SHEEP.

**ஓர் ஆட்டுக்குட்டியின் அதிசயப் பிறப்பு.**—டி. ஜீ. ஸ்ரீனிவாசய்யங்கார் என்னும் ஒரு நிருபர் 25-4-1911-ம் தேதி எழுதுகிறார்.—தஞ்சாவூர் ஜில்லா, நரசிங்கன்பேட்டையைச் சேர்ந்த கஞ்சனூர் என்னும் கிராமத்தில், ஓர் ஆடானது, இரண்டு தலைகளுடனும், நான்கு கண்களோடும், நான்கு மூக்குத் துவாரங்களோடும், ஒரு கழுத்தும், நான்கு கால்களோடும் கூடிய ஒரு குட்டியை ஈன்றது. மற்ற அவயவங்கள் எல்லாம் சரியாகவே, இருக்கின்றன. இரண்டு வாய்களாலும் ஏககாலத்தில் கத்துகின்றது. தன் தாயிடத்தில் பாலுண்ண முடியவில்லை. ஒரு வாயில் பாலை வார்த்தால் குடிக்கின்றது. ஆனால், இன்னொரு வாயினால் கொஞ்சம் பால் வருகிறது. இதனால் இரண்டு வாய்களுக்கும் வழி இருக்கிறதென்று தெரிகிறது. அது தன் தலைகளைத் தூக்கவாவது அல்லது எதையேனும் தின்னவாவது முடியவில்லை. இந்தக் குட்டி பிறந்து மூன்று தினங்களாகிறது. ஆனால் பிழைப்பது துர்லபமென்று தோன்றுகிறது. இதை நான் இன்று காலை படம் எடுத்திருக்கிறேன். அனேகம் திரளான ஜனங்கள் இப்பேர்ப்பட்ட அபூர்வ ஜந்துவை வந்து பார்த்துப்போகிறார்கள். தாய் ஆடான துஸவுக்கியமாயிருக்கிறது. அது, இக்குட்டியை ஈன்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் மற்றொரு குட்டியை ஈன்றது. அது ஸவுக்கியமாய் மற்ற ஸாதாரணக் குட்டிகளைப் போல் இருக்கிறது.

AN OLD TAMARIND TREE.

**ஓர் கிழட்டுப் புளிய மரம்.**—இது திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூர் தாலுகா, ஆழ்வார் திருநகரியில் சுவாமி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலுக்குள்ளிருக்கிறது.

இது பார்வைக்கு மூன்று மரம்போலிருந்தாலும், ஒரே மரமென்றும், கலியுகம் பிறந்து நாற்பத்தி மூன்றாம் நாள் ஜனித்த ஸகி நம்மாள்வாரானவர் ஷை மரத்தினடியி லிருந்துகொண்டு முப்பத்திரண்டு வருஷம் தபஸிலிருந்து பின்னால் முக்தியடைந்தாரென்றும் ஸ்தல புராணங்களின் மூலமாய் வெளியாகின்றன.

ஷை மரத்தினடியிலிருந்துதான் நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு முந்தி மதுரக்கவி ஆழ்வாருக்கு நான்கு வேத ரகசியங்களைத் தமிழில் மொழி பெயர்த்ததாயும் புராணக் கொள்கை.

ஷை மரமானது மற்ற மரங்களைப்போல பூப்பதும் காய்ப்பதும் தவிர நாளதுவரையில் பழுப்பதே கிடையாது. மேலும் அதிலுள்ள எந்த பாகத்தை யாவது அக்னியில் படும்படி செய்தால், உடனே அந்த விருக்ஷம் பூராவும், மனிதர்களின் திரேகத்தில் கொப்பளங்களுண்டாவது போல் உண்டாகி ஓர்வித துர்க்கந்த வாஸனை கலந்ததாய் சிவப்பும் வெளுப்புஞ் சேர்ந்ததான ஜலம் வடிவதுண்டு. அதற்குச் சந்தன மறைத்து அப்பினால், உடனே நின்று போவது முண்டு என்று சொல்லுகிறார்கள்.

ஷை மரத்தின் வயிரமாயும் உலர்ந்து போயுமிருக்கிற ஒரு துண்டைச் சுத்த மனதுடன் ஜலம் விட்டரைத்து கொட்டைப்பாக்களவு உட்கொண்டால், எவ்வித ரோகமும் குணமாகி வருகிறது.

ஷை மரமானது இன்னும் அபிஷேக ஆராதனைகள் செய்யப் பெற்றும் வருகிறது. இவ்விருக்ஷத்தை ஆதிசேஷ அவதாரம் என்றும், திரேதா யுகத்தில் லக்ஷ்மணப் பெருமாளே மரமாயிருக்கிறார் என்றும் புராணத்தின் கொள்கை என்று ஸ்ரீ வெங்கட்டநாராயண அய்யங்கார், என்ற ஒரு நிருபர் ஒரு பத்திரிகையில் எழுதுகிறார்.

## INDIAN NEWS.
## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

---

### Co-operative Conference.

**ஐக்கிய நாணயச் சங்கங்களின் கூட்டம்.**—தஞ்சாவூர்ஜில்லா நீடாமங்கலத்தில்சமீபத்தில் அந்த ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களின் கூட்ட மொன்று நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு அந்த ஜில்லாவைச் சேர்ந்த ஐக்கிய நாணயச் சங்கப் பிரதிநிதிகளும் சில பெரியமனுஷர்களும் வந்திருந்தார்கள். ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் வந்திருந்த டெலிகேட்டுகளை வரவேற்க, ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் டி. ரெங்காசாரியார் ப்ரஸிடெண்டா யிருந்து இருவரும் ஐக்கியத்தா லுண்டாகும் நன்மைகளைப் பற்றி விஸ்தாரமாயும் திறமையாயும் பேசினார்கள். ராவ் பகதூர் ராமானுஜாசாரியார் ஐக்கிய நாணயச் சங்கங்கள் அவைகளின் மெம்பர்களுக்குக் கடன் கொடுத்து வாங்குதல் அல்லாமல், கிராமவாஸிகள் தங்கள் தொழிலுக்கு வேண்டிய ஸாதகங்களைப் பெறவும், அவைகளினு லுண்டாகும் ஸாமான்களை விற்கவும், கிராமத்தார் சங்கங்களாகச் சேர்ந்து வேலை செய்யக்கூடு மென்று சொன்னார். விவஸாயிகளுக்குப் பல கருவிகளும் எருவும் விதையும் வேண்டியிருக்கும்போதும், நெல் முதலிய விளைபொருள்களை விற்கவேண்டி யிருக்கும்போதும், அந்தச் சங்கங்கள் உதவி செய்யக்கூடும் என்று சொன்னார்.

### Subsidized Vernacular Papers.

**தேசபாஷைப் பத்திரிகைகளுக்குக் கவர்ன்மெண்டுதவி.**—வங்காளக் கவர்ன்மெண்ட் ராய் நரேந்திரநாத் சென் பஹதூர் பிரசுரம் செய்யும் பத்திரிகையில் 62,500 ரூபாய் செலவு செய்து 25,000 காப்பிகள் வாங்கி, பஞ்சாயத்துகள், முனிஸிபாலிட்டிகள், ஸ்கூல்கள், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், இவர்களுக்கு அனுப்புகிறார்கள். இது மூன்று வருஷத்துக்குச் செய்து பார்க்கப்படும். பம்பாய் கவர்ன்மெண்டார் 'ஜகத்விருத்தம்' என்கிற ஒரு மஹாராஷ்ட்ரவாராந்தரப்பத்திரிகையை வருஷத்துக்கு 5,000 ரூபாய் செலவு செய்து, 10,000 காப்பிகள் வாங்கி, 5 வருஷத்துக்கு மேற்கண்ட மாதிரி உபயோகப்படுத்துவார்கள். ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டார் 'இண்டிபெண்டென்ட்' என்கிற உருது வாராந்தப் பத்திரிகையை வருஷம் ஒரு காப்பிக்கு 3 ரூபாய் விழுக்காடு 300 காப்பிகள் வாங்குவார்கள். கீழ் வங்காளக் கவர்ன்மெண்டார் காப்பி யொன்றுக்கு 2 ரூபாய் வீதம் ஒரு பத்திரிகையில் 10,000 காப்பிகள் வாங்குவார்கள். இந்தப் பத்திரிகை வங்காள பாஷையில் நடைபெறும்.

### Death from Plague.

**ப்ளேக்கால் நேரிட்ட மரணங்கள்.**—போன தடவை ஸென்ஸஸைச் சேர்ந்த பத்து வருஷங்களில் இந்தியாவில் பல பாகங்களில் பஞ்சம் நேரிட்டு ஜனத்தொகையின் அபிவிர்த்தி தடைப்பட்டது. இந்தப் பஞ்சத்தை யடுத்து ஜுரம் முதலிய வியாதிகள் ஜனங்களைப் பீடித்தன. இந்தக் காரணங்களால் முக்கியமாய் தேச ஸமஸ்தானங்களில் 50 லக்ஷம் ஜனங்கள் மாண்டுபோனார்கள். இந்தப் பஞ்சத்தையும் இதை யடுத்த வியாதிகளையும்விட பெரும் ரோக மொன்று கடைசி ஸென்ஸஸைச் சேர்ந்த வருஷங்களில் தேசத்தில் பயங்கரமான மரணத் தொகைக்குக் காரணமாயிற்று. பம்பாய் பட்டணத்தில் 1896-ம் வருஷத்தில் ப்ளேக் நோய் தோன்றி 1901-ம் வருஷத்துக்குள் 5 லக்ஷம் மரணங்களுக்குக் காரணமாயிற்று. இது போன ஸென்ஸஸைச் சேர்ந்ததாயிருக்க, இந்த ஸென்ஸஸைச் சேர்ந்த வருஷங்களில் இந்த ப்ளேக்கினுலுண்டான மரணங்கள் பல மாகாணங்களில் நேரிட்டு, ஜனங்களைச் குறையாடி வருகிறது. இதனுல் நேரிட்ட மரணங்கள் 1901-ம் வருஷத்தில் 2,84,000 மாயிருக்க, 1907-ம் வருஷத்தில் 13,16,000 மாயிற்று. அடுத்த 1908-ம் வருஷத்தில் 2,00,000 மாகக் குறைந்தது. 1910-ம் வருஷத்தில் இந்த வியாதியினுல் நேரிட்ட மரணம் 5,09,000 மாக மறுபடியும் உயர்ந்தது. இந்த நோயால் இந்தக் கடைசி ஸென்ஸஸில் அடங்கிய 10 வருஷங்களில் நேரிட்ட மரணங்கள் 65 லக்ஷம். இந்தத் தொகையில் மூன்றில் ஒரு பாகத்துக்கு அதிகமாக பஞ்சாப் மாகாணத்திலும், ஐந்தில் இரண்டு பாகம் பம்பாய் ராஜதானியிலும், ஐக்கிய மாகாணங்களிலும் நேரிட்டன.

PROTECTIVE DUTIES.

**காப்பு வரிகள்.**—ஸமீபத்தில் மைலாப்பூரில் நடந்த ஒருமீட்டிங்கில் ஆனரபிள் மிஸ்டர் ஆல்ப்ரெட் சாட்டர்டன் இந்தியாவில் காப்பு வரிகளைப் பற்றி ஒரு வியாஸம் எழுதிப் படித்தார். எந்த இறக்குமதிச் சரக்குகளுக்கு வரி விதித்து அவை கள் நாட்டுக்குள் பிரவேசிக்காமல் தடுப்பதால் உள்நாட்டுத் தொழில்கள் காக்கப்படுமோ, அந்த இறக்குமதி வரிகளுக்குக் காப்பு வரிகள் என்று பெயர். இப்படிப்பட்ட காப்பு வரிகள் இந்தியாவில் கூடாதென்றும், அவைகளை விதிப்பதால் அன்னிய தேச முதலாளிகள் இந்தியாவுக்கு வந்து தொழில்கள் செய்து லாபம் பெறுவார்களே யல்லாமல் இந்தியாவுக்கு நன்மை யுண்டாகா தென்றும், சுதேச முயற்சியானது ஜனங்களுக்கு வியாபாரத் திறமை இல்லாமையால் கைகூடவில்லை யென்றும், இந்தியாவுக்கு நன்மை யுண்டாகவேண்டுமானால், இப்போது உள்ளபடி வரி இல்லாத அன்னிய வியாபாரமே நல்லதென்றும், காப்பு வரிகளைக் கேட்பதை விட்டு இந்தியர் தெரிந்தவர்களா யிருந்தால், விவஸாயத்தை விருத்தி பண்ணுவதில் கருத்தா யிருப்பார்களென்றும், பொருள்பட மிஸ்டர் சாட்டர்டன் ப்ரஸங்கம் செய்தார்.

WORK FOR PRISONERS SET FREE.

**விடுதலையடைந்த கைதிகளுக்கு வேலை.**—ஏதோ குற்றங்களுக்காக ஜெயிலி லிருக்கத் தண்டனை விதிக்கப்படுபவர்கள், அவர்கள் சிறைகாலத்தில் கற்றுக்கொள்ளும் கைத்தொழிலை விடுதலை யடைந்தபின் கைப்பற்ற அவர்களுக்கு ஏதாவது முதல்கொடுப்பது சிறப்பாகுமென்று ஆனரபிள் மிஸ்டர் கிருஷ்ணஸாமி அய்யர் கூடலூர் ஜெயிலைப் பார்வையிட்டபொழுது தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். பங்காளத்தில் விடுதலை யடைபவர்களுக்குப் பண உதவி செய்ய ஒரு பண்டு ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி சென்னையிலும் ஏற்படவேண்டும். இதன் மத்தியில் கோயம்புத்தூர் மால் மில்ஸ் கம்பெனியார் ஸென்ட்ரல் ஜெயிலதிகாரிகளுடன் ஜெயிலிலிருந்து விடுதலை யடைபவர்களில் நெசவுத் தொழிலில் பயிற்சி பெற்றவர்களைத் தம் கம்பெனியில் சேர்த்துக்கொள்வதைப்பற்றிக் கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். கம்பெனியார் ஜெயில் ஸூபரின்டெண்டெண்டு நற்சாக்ஷிப் பத்திரம் கொடுப்பவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வதாக உத்தேசித்திருக்கிறார்களாம். இம்மாதிரியே அங்கங்கே உள்ள கம்பெனிக்காரர்கள் முயற்சித்து வருவார்களாகில், விடுதலை யடைந்தவர்கள் யோக்கியமான வாழ்க்கையைப் பின்பற்ற வழியுண்டாகும். மால் மில்ஸ் கம்பெனியார் இவ்விஷயத்தில் முதல் முதல் வழி காட்டுவது மெச்சத்தக்க விஷயமாகும்.

COOLIES FROM THE MADRAS PRESIDENCY.

**சென்னை ராஜதானியிலிருந்து கூலிகள்.**—சென்னை ராஜதானியிலிருந்து குடியேற்ற நாடுகளுக்குப் போகும் இந்தியக் கூலிகளின் கணக்கு ரெவென்யூ போர்டால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாம் வருஷத்தைவிட போன வருஷம் அதிகக் கூலிகள் ஏற்றப்பட்டுப் போனதாகத் தெரிகிறது. நேடாலுக்கு மட்டும் மூன்றாம் வருஷம் 7 தடவை கப்பல்கள் 2520 கூலிகளுடன் போக, போன வருஷம் 8த் தடவை கப்பல்கள் 3916 கூலிகளுடன் போயின. பீஜி தீவுகளுக்குப் போன வருஷம் ஜூன் மாதம் வரையில் கூலிகள் ஏற்றப்பட்டார்கள். இரண்டு முழுக் கப்பல்களும் வேறு கப்பலொன்றில் பாதியும் 1589 கூலிகளை ஏற்றிக்கொண்டு போயின. ட்ரினிடாட் என்ற தீவுக்கு 5-வருஷம் கூலிகள் ஏற்றப்படாமலிருக்க, போன வருஷத்தில் 471 கூலிகள் போனார்கள். இந்தக் கூலிகளுடன் ஸ்திரீகளும் போனார்கள். மோரிசுக்கும் ஸெஷெல்ஸுக்கும் கூலிகள் போன வருஷம் போகவில்லை. கப்பலேறிப்போன கூலிகள் நன்றாய் நடத்தப்பட்டுத் திருப்தியுடன் சென்றார்கள் என்று ரெவென்யூ போர்ட்டு ரிபோர்ட்டில் சொல்லப்படுகிறது.

நேடாலிலிருந்து திரும்பிவந்த கூலிகள் 2369பேர். இவர்கள் சேகரித்துக் கொண்டுவந்த பணம் 3,20,285 ரூபாய் மோரிஸிலிருந்து 283 கூலிகள் பணமில்லாமல் திரும்பிவந்தார்கள். 53 கூலிகள் பீஜி தீவிலிருந்து கல்கத்தா வழியாய்ச் சென்னைக்குத் திரும்பிவந்தார்கள். மலேயா நாட்டுக்குப்போன கூலிகள் 85,015 பேர். அங்கெ ரப்பர் தோட்டங்களில் அதிகக்கூலி கிடைப்பதால், அவ்வளவு பேர் போனார்களென்று சொல்லப்படுகிறது. பர்மாவுக்குப் போனவர்கள் கூலிகளையும் மற்றவர்களையும்சேர்த்து 1,33,495 பேர். ஸிலோனுக்குப் போனவர்கள் 1,77,181பேர். ஸிலோனுக்குப்போனவர்கள் அநேகமாய் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களிலிருந்து போனவர்கள்.

# FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

SCHOOL HOLIDAYS.

**பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை.**—இங்கிலாந்தில் ஜார்ஜ் அரசருடைய விருப்பத்தின்படியே முடிசூட்டு வைபவ தினங்களில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு 10 நாள் விடுமுறை கொடுக்கப்படும்.

MAHOMEDANS.

**மகமதிய மதத்தினர்.**—உலகத்திலுள்ள மகமதிய மதத்தினரின் தொகை 222,342,599. இவர்களில் கிறிஸ்தவ ஆளுகைக்குட்பட்ட மகமதியர் 161,060,870. கிறிஸ்தவரும் மகமதியருமல்லாத புறமதத்தினருக் குட்பட்டோர் 23,976,500. மகமதிய ஆளுகைக்குட்பட்டோர் 22,400,000. துருக்கிக்குட்பட்டோர் 15,528,800.

RAIN FORECAST.

**மழை வருஷிப்பைக் காட்டும் கருவி.**—ஜர்மனி தேசத்தில் மழை வருஷிப்பைக் காட்டுவதற்கு ஒரு நூதனமான கருவியைக் கையாடி வருகின்றார்கள். அதாவது, ஒரு பாத்திரத்தில் ஜலம் வார்த்து அதில் ஒரு தவளையைவிட்டு ஒரு சிறிய ஏணியையும் அதற்குள்ளே விட்டு வைப்பார்களாம். அந்தத் தவளை ஏறி உயரே வந்து உட்காருமானால், கட்டாயம் மழை வருஷிக்கும் என்னும் குறிப்பாகுமாம்.

CHINESE CALENDAR.

**சீன பஞ்சாங்கம்.**—உலகத்தில் புஸ்தகங்களிலெல்லாம் அதிகமாக விலையாவது சீன பஞ்சாங்கங்களாகும். எண்பது லக்ஷம் காப்பிகள் வருஷா வருஷம் அச்சடிக்கப்பட்டு ஒரு காப்பியாவது மீதியாகாமல் எல்லாம் வாங்கப்படுகின்றனவாம். அந்தப் பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டவற்றி லெல்லாம் சீனர்களுக்கு அவ்வளவு பக்தி சிரத்தையும் நம்பிக்கையு முண்டாம்.

NEW METHOD OF SALT MANUFACTURE.

**உப்பு செய்யும் புதிய முறை.**—இங்கிலாந்தைச் சேர்ந்த லங்காஷையர் என்னும் மாகாண வாஸியாகிய மெஸ். ஜேம்ஸ் கொட்சு கிங்ஸன் என்னும் ஓர் நிபுணர் கடலுப்பு செய்வதற்கு ஓர் புதிய முறை கண்டுபிடித்திருக்கிறார். அது மிகச் சுளுவானதாம். அவர் அந்த முறையைப் பற்றித் தமக்குள்ள உரிமை முழுவதையும் 10 லக்ஷம் பவுனுக விற்றிருக்கிறார் அதைப் பெற்றுக்கொண்டோர் விரைவில் பரீக்ஷை நடத்துவார்கள். இம்முறை லகுவில் உப்புண்டாக்குவதற்கு ஏற்றதா யிருக்குமானால், வருங்காலத்தில் அதன் விலை குறைந்துவிடுமென நம்பலாம்.

A 17 YEAR OLD DEAD BODY.

**17 வருஷங்களுக்கு முன் இறந்த ஒருவரின் பிரேதம்.**—ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த இத்தலி தேசத்திலிருக்கும் சொரட்டோ சேனிடா என்ற ஊரில் பிஷப் சோடா 17 வருஷங்களுக்கு முன் இறந்துபோக, அவர் பிரேதம் புதைக்கப்பட்டது. எக்காரணத்தாலோ சமீபத்தில் அவர் கல்லறை திறக்கப்பட்டபொழுது பிஷப் சோடோவின் பிரேதம் கெடாமலும், அழிந்துபோகாமலும் இருந்ததாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. நேபிள்ஸிலுள்ள ப்ரொபஸர்கள் (பண்டிதர்கள்) பிரேதத்தைப் பரிசோதித்துப் பார்த்தார்களாம். திரள் திரளான ஜனங்கள் இது பூலோக அற்புதமென்று கருதிப் போய் தரிசனம் செய்து வருகிறார்களாம். ஸோல்ஜர்கள் பாதுகாப்பில்லாவிட்டால், பிரேதத்தின் பல பாகங்களை மூடபக்தியுள்ள பல ஜனங்கள் கத்தரித்து எடுத்துக்கொண்டு போய்விடுவார்களென்று அஞ்சப்படுகிறது.

OPENING NEW SHOPS.

**புதுக் கடை வைத்தல்.**—ஜப்பானியர்கள் பெரிய பட்டணங்களில், புதிதாய்க் கடை வைத்தால், ஒரு மாதம் வரையில் ஜப்பான் காகித விளக்குகளை ஏகமாய்த் தொங்கவிடுகிறார்கள். பத்துப் பேர்களைக் கூலிகொடுத்துப் பலவகை வர்ணமுள்ள சட்டைகள் மாட்டி, மற்றும் பலவகை வர்ணமுள்ள ஜண்டாக்களில் தன் கடைச் சரக்குகள் விலாஸம் பெரியதாய் எழுதி, பல ஆடைகள் தரித்த பாண்டு வாத்தியக்காரர்கள் ஸகிதம் மெள்ளத் தெருவழியாய் உல்லாஸ நடைநடந்துகொண்டு வாத்தியம் வாசித்துக்கொண்டு போகிறார்கள். சந்திகளில் நிறுத்தி, அதில் கெட்டிக்காரனுயுள்ளவன் நம் பாகத்து நாடக நோட்டீஸைப்போல் நீண்டதோர் பிரஸங்கம் செய்கிறான். இதற்குப் பெருங் கூட்டம் கூடுகிறது. இந்தப்படித் தங்கள் வியாபாரச் சரக்குகளைப் பகிரங்கப்படுத்துகிறார்கள். இந்தியாவில் அட்வர்டயிஸ்மெண்டு என்றால், இன்னதென்று தெரியாது. சில பெயர்கள் மாத்திரம் பத்திரிகைகளில் இரண்டு அல்லது மூன்று வரிகளில் இன்ன சரக்கு இன்ன விலையென்று குறிப்பிட்டுப் பகிரங்கப்படுத்துகிறார்கள்.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் மேமீ 24உ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

மதராவில் காடா, காஸாக் கச்சை, தோத்தி இவைகளுக்கு நல்ல கிராக்கி. ஸலவைத் துணிகளுக்கு வியாபாரம் மட்டுத்தான். பொதுவாய் மார்க்கெட்டில் சரக்குப் போதாது.

GREY SHIRTINGS—காடா.

| | | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| **லேடி மார்க்து.** | | | | | | |
| No. 1110—37 × 37½ × 46″ | | | .. | 7 | 12 | 0 |
| **கூண்டு மார்க்து.** | | | | | | |
| No. 2500—37 × 37½ × 41″ | | | .. | 6 | 0 | 0 |
| ,, 3500 | ஷி | 46″ | .. | 6 | 10 | 0 |
| ,, 7500 | ஷி | 54″ | .. | 7 | 15 | 0 |
| ,, 5000 | ஷி | 41″ | .. | 6 | 3 | 0 |
| **பறவை நாகம் மார்க்து** | | | | | | |
| 37 × 37½ × 41″ | .. | .. | .. | 5 | 8 | 0 |
| **41″ பொன்னூல் குறி.** | | | | | | |
| No 3552 | .. | .. | .. | 6 | 12 | 6 |
| ,, 3553 | .. | .. | .. | 6 | 15 | 6 |
| ,, 3554 | .. | .. | .. | 7 | 2 | 6 |
| ,, 3555 | .. | .. | .. | 7 | 5 | 6 |
| ,, 3556 | .. | .. | .. | 7 | 8 | 6 |
| No. 126—46″—37/7½ | | | .. | 9 | 9 | 0 |
| **பட்டைக்குறி.** | | | | | | |
| No. 7386—46″—37 × 37½ | | | .. | 8 | 0 | 0 |
| ,, 7397—ஷி | | .. | .. | 8 | 6 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **20 கஜம் இஞ்சின் மார்க்து.** | | | | | |
| 20 × 20 × 46″ | .. | .. | 4 | 6 | 6 |
| ஷி 51″ | .. | .. | 4 | 14 | 6 |
| 22 × 22 × 51″ | .. | .. | 5 | 6 | 6 |
| ஷி 46″ | .. | .. | 4 | 14 | 6 |
| **20 கஜம் புற மார்க்து.** | | | | | |
| 20 × 20 × 46″ | .. | .. | 4 | 5 | 0 |
| **தங்க மீன் மார்க்து.** | | | | | |
| ஷி | .. | .. | 4 | 5 | 0 |
| **நுபா மார்க்து.** | | | | | |
| 40″—20 × 20 | .. | | 4 | 7 | 0 |
| 45″—22 × 22 | .. | .. | 4 | 14 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

சங்கு மார்க்து 12 கஜம்.

| | | | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|
| 51″—94 | .. | .. | .. | 4 | 0 | 0 |
| ஷி—95 | .. | .. | .. | 4 | 4 | 0 |
| ஷி—96 | .. | .. | .. | 4 | 8 | 0 |
| ஷி—97 | .. | .. | .. | 4 | 12 | 0 |
| 52″—170 | .. | .. | .. | 4 | 4 | 0 |
| ஷி—175 | .. | .. | .. | 4 | 8 | 0 |
| ஷி—180 | .. | .. | .. | 4 | 12 | 0 |
| ஷி—185 | .. | .. | .. | 5 | 0 | 0 |
| ஷி—887 | .. | .. | .. | 8 | 8 | 0 |

COLOURED BOOK MUSLINS—கலர் புக் மஸ்லின்.

| | | | | |
|---|---|---|---|---|
| ராணி மார்க்து. | .. | 2 | 12 | 0 |
| லக்ஷ்மி நாராயணன் மார்க்து | .. | 2 | 11 | 0 |
| பள்ளிக்கூடப் பையன் மார்க்து | .. | 2 | 10 | 0 |

JACONETS.—ஜாக்கிநெட்டுகள்

46″ தங்க விநயகர் மார்க்து.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| No. 888 | .. | .. | .. | 5 | 9 | 6 |
| ,, 777 | .. | .. | .. | 5 | 4 | 6 |
| ,, 666 | .. | .. | .. | 5 | 3 | 6 |
| ,, 555 | .. | .. | .. | 5 | 0 | 6 |
| ,, 444 | .. | .. | .. | 4 | 13 | 6 |
| ,, 333 | .. | .. | .. | 4 | 10 | 0 |

20 கஜம் 46″ தங்கக் குழந்தை மார்க்து.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| No. 2662 | .. | .. | .. | 4 | 11 | 0 |
| ,, 89 | .. | .. | .. | 4 | 14 | 0 |
| ,, 898 | .. | .. | .. | 4 | 15 | 0 |
| ,, 8989 | .. | .. | .. | 5 | 2 | 0 |
| ,, 89898 | .. | .. | .. | 5 | 4 | 0 |
| ,, 898989 | .. | .. | .. | 5 | 6 | 0 |
| ,, 3771 | .. | .. | .. | 4 | 7 | 0 |
| ,, 3772 | .. | .. | .. | 4 | 9 | 6 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| No 1703 | .. | .. | .. | 7 | 4 | 0 |
| ,, 1503 | .. | .. | .. | 7 | 0 | 0 |
| ,, 1502 | .. | .. | .. | 6 | 2 | 6 |
| ,, 1702 | .. | .. | .. | 6 | 6 | 0 |
| ,, 1704 | .. | .. | .. | 7 | 8 | 0 |
| ,, 136—40″—18 கஜம் | | | .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46″ 20 கஜம் | | | .. | 4 | 12 | 0 |
| ,, 9073—51″ ஷி | | | .. | 5 | 4 | 0 |
| ,, 5072—46″ ஷி | | | .. | 4 | 12 | 0 |
| ,, 5073—51″ ஷி | | | .. | 5 | 4 | 0 |
| ,, 912—46″ ஷி | | | .. | 4 | 9 | 0 |
| ,, 913—51″ ஷி | | | .. | 5 | 1 | 0 |
| ,, 3073 | .. | .. | .. | 5 | 12 | 0 |
| ,, 7073 | .. | .. | .. | 5 | 13 | 0 |
| ,, 973 | .. | .. | .. | 5 | 13 | 0 |
| **மெடல் மார்க்து.** | | | | | | |
| ,, 7773 | .. | | .. | 6 | 4 | 0 |

| ஸவரன் மார்க்து. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 10 | 0 |
| **White Shirtings—லாங் க்லாத்.** | | | |
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 8 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 12 | 0 |
| **Red Shirtings—தோம்பு.** | | | |
| ஸ்வதன்வா மார்க்து. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |
| ஒட்டை மார்க்து. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |
| **Yarn and Twist—நூலும் முறுக்கு நூலும்.** | | | |
| ஆமதாபாத் காரம் 40—சைனு டிக்கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 3 | 0 | 0 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 11 | 0 |
| **Manchester Yarn—சீமை நூல்.** | | | |
| சீமை நூலுக்கு கிராக்கியிருக்கிறது. | | | |
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ராம்மர் | 4 | 0 | 0 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 3 | |
| ஷை தங்கமயில் .. .. | 4 | 0 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 4 | 0 | 0 |
| ஷை பாக்கு வெட்டி .. | 4 | 0 | 0 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 0 |
| ஷை ஸலைவை 80 மகாராஜா | 7 | 6 | 0 |
| ஷை 30 கெடிகாரம் .. | 4 | 0 | 0 |
| ஷை ஷை தண்ணித்துரை .. | 3 | 15 | 0 |
| ,, 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 8 | 6 |
| ,, ஷை ஷை 70/80 .. | 6 | 2 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 12 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 3 | 6 |
| **Red—செகப்பு.** | | | |
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 7 | 0 |
| 40 முனிவிபாவிட்டி (புல்வெயிட்) | 11 | 3 | 0 |
| 40 புத்தா .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 3 | 0 |
| ,, ராவணேஸ்வரன் .. | 11 | 3 | 0 |
| ,, அஹல்யை ராமர் .. | 11 | 2 | 0 |
| ,, பொம்மி செட்டி .. .. | 11 | 2 | 0 |
| ,, மோட்டார்கார் .. .. | 10 | 6 | 0 |
| ,, போரா பஸார் .. .. | 6 | 0 | 6 |
| ,, பூப்ஸானி இரண்டு கட்டு .. | 11 | 2 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 4 | 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **Yellow—அரை மஞ்சள்.** | | | |
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 12 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 12 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 7 | 0 |
| 40 செங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 14 | 0 |
| காசி ராஜா .. .. | 4 | 13 | 6 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 10 | 6 |
| **Lemon and Orange—கால் மஞ்சள் முழு மஞ்சள்.** | | | |
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் | 4 | 10 | 6 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| 40 முழு மஞ்சள் ஷை .. | 5 | 2 | 0 |
| ,, ஷை காசி ராஜா .. .. | 5 | 2 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, .. | 5 | 3 | 0 |
| **Black—கறுப்பு.** | | | |
| 44/40 குதிரை .. .. | 4 | 12 | 0 |
| 30 ஸரஸ்வதி .. .. | 4 | 5 | 0 |

**Hides and Skins—மாட்டு ஆட்டுத் தோல்கள்.**

| | | | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| மாடு (மாட்டுத்தோல்) | | | | | | | |
| பல்லாரி .. .. | | | | | 0 | 13 | 9 |
| பங்களூர் கமேலா .. .. | | | | | 0 | 13 | 3 |
| ஷை உப்புத்தோல் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 9 |
| ஹைதராபாக்கம் .. .. | | | | | 0 | 13 | 5 |
| மட்வாடா .. .. | | | | | 0 | 12 | 7 |
| ஏலூர் ராஜமஹேந்திரபுரம் | 0 | 12 | 8 | முதல் | 0 | 12 | 9 |
| செட்டி கடல்கரை | 0 | 12 | 3 | முதல் | 0 | 12 | 9 |
| சீவரம் | | | | | 0 | 12 | 0 |
| குடியாத்தம் | 0 | 12 | 0 | முதல் | 0 | 12 | 3 |
| பல்லாவரம் .. | 0 | 11 | 6 | முதல் | 0 | 11 | 9 |
| யேனு (எருமைத்தோல்) | | | | | | | |
| ராயதுர்க்கம் .. .. | | | | | 0 | 10 | 6 |
| பல்லாரி .. .. | | | | | 0 | 10 | 6 |
| பங்களூர் | 0 | 9 | 3 | முதல் | 0 | 9 | 5 |
| வேனு (வெள்ளாடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம். | | | | | | | |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 5 | 6 |
| சேனு (செம்மறி ஆடு) | | | | | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | 1 | 14 | 8 | முதல் | 1 | 15 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | | | | | 1 | 0 | 6 |
| சேலம் | 1 | 10 | 0 | முதல் | 1 | 13 | 0 |
| மட்வாடா | 1 | 3 | 6 | முதல் | 1 | 4 | 6 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 25 முதல் 32 |
| கொன்னைப்பட்டை ஷை | 14 முதல் 15 |
| கடப்பை கடுக்காய் ஷை | 7 முதல் 8 |
| சேலம் அரசகிரிஷை ஷை | 18 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷை | 105 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 80 |
| எட்டிக்கொட்டை ஷை | 15 0 0 |
| பூந்திக்கொட்டை ஷை | 10 8 0 |
| விளக்கெண்ணெய் ஷை | 71 முதல் 72 |
| மணிலாக்கொட்டைபருப்பு பாரம் 1-க்கு | 34 முதல் 35 |
| உடைக்காதது 42 மணங்கு .. | 55 முதல் 56 |
| கொட்டை முத்து 165 ராத்தல் .. | $9\frac{1}{2}$ முதல் $10\frac{1}{2}$ |

| | ரூ. அ. பை. |
|---|---|
| ரங்கூன் அரிசி 63 படி .. | வரவில்லை |
| பந்தர் பச்சை அரிசி 44 படி .. | 7 12 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 6 6 |
| கோதுமை 4 படி முதல் $4\frac{1}{2}$ படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் .. | |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் .. | 12 8 0 |
| ஷை (பல்லாரி) ஷை .. | 13 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷை | 15 முதல் 16 |

METALS—லோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷுமும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. | 198 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 241 |
| செப்புக்கட்டி ஷை .. | 208 |
| நாகம் ஷை .. | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை .. | 74 |
| ஈயம் ஷை .. | 54 |
| காரீயம் ஷை .. | 49 |
| வெள்ளீயம் ஷை .. | 189 வராகன். |

IRON—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 ரெ. | பாரம் ரூ. | 21—23 |
| சீமை .. | .. .. | 43 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு | .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு | .. .. | 23 |
| எஃகு வில்கட்டு | .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 ரெ. | .. | 21 |
| சீமை .. | .. .. | 40-46-49 |

SEASON.

## காலஸ்திதி

RAINFALL.

மழை.—1911ஊ மேமீ 1-உயிலிருந்து, 31-உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 1·88 | 2·75 |
| வால்டேர் | 0·37 | 1·21 |
| காக்கினடா | 1·44 | 1·69 |
| மசூலிப்பட்டணம் | 2·91 | 1·64 |
| நெல்லூர் | 0·32 | 0·76 |
| மதராஸ் | 0·01 | 1·37 |
| கூடலூர் | 0·14 | 1·11 |
| நாகப்பட்டணம் | 1·19 | 2·14 |
| பாம்பன் | 0·03 | 2·94 |
| கொழும்பு | 10·69 | 22·86 |
| திருவனந்தபுரம் | 3·90 | 12·73 |
| கொச்சி | 22·23 | 16·65 |
| கள்ளிக்கோட்டை | 10·58 | 11·27 |
| மங்களூர் | 2·24 | 7·19 |
| மெர்க்காரா | 8·03 | 7·72 |
| ஐதராபாத் | 1·13 | 1·54 |
| ரெய்ச்சூர் | 0·70 | 1·36 |
| பல்லாரி | 2·05 | 2·57 |
| கர்நூல் | 0·82 | 1·79 |
| கடப்பை | 5·32 | 2·14 |
| ஹாஸ்ஸான் | 5·64 | 7·97 |
| பெங்களூர் | 4·96 | 5·01 |
| கொடைக்கானல் | 14·07 | 9·72 |
| உதகமண்டலம் | 14·08 | .. |
| கோயம்புத்தூர் | 2·46 | 3·92 |
| வேலூர் | 3·39 | .. |
| சேலம் | 5·84 | 6·72 |
| திருச்சிளுப்பள்ளி | 3·95 | 4·93 |
| புதுக்கோட்டை | 6·53 | .. |
| மதுரை | 4·68 | 4·81 |
| திருநெல்வேலி | 1·35 | 4·57 |